043

Regd. No. 2569 நாயக மலர்

26 AUG 1930

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 1. | ஹிஜ்ரி 1349 ரபீஉல்அவ்வல் மீ 1930 ஆகஸ்டு மீ | இதழ் 7

உள்ளடக்கம் பக்கம்

1. ஸூறத்துன்னஸ்ர் ... 289
2. நாயக வாக்கியம் ... 292
3. நபிகள் திலகம் ... 294
4. ஜீவிய சரித்திர வரலாறு ... 297
5. நபித்துவத்தின் மாண்பு ... 302
6. நாயக நல்லொழுக்க நிகழ்ச்சிகள் ... 308
7. நாயகத் திருச்சபை ... 318
8. நாயகமவர்களின் சாமுத்ரிகா லட்சணம் ... 322
9. முன் அறிக்கைகள் ... 324
10. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குணாதிசயங்கள் ... 331
11. ஆராய்ச்சி மேடை 334

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு	...	ரூபா	3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு	...	,,	4	0	0
தனிப் பிரதி	...	,,	0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரேபக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

"ஹிபாஜத்துல் இஸ்லாம்" ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T. மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ...
No.
26 AUG 1930

حفاظة الإسلام

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்.

ஆசிரியர்:—மௌலவீ S. S. முஹம்மது அப்துல் காதிர் ஸாஹிப் (பாக்கவீ)

மலர் 1	ஹிஜ்ரி 1349 ரபீஉல்அவ்வல் மீ 1930ஹு ஆகஸ்டு மீ	இதழ் 7

ஸூறதுன்னஸ்ர்

நிகரற்ற அருளாளனும் அளவற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால் (நான் இதனை ஓதுகின்றேன்).

1. அல்லாஹ்வின் உதவியும் வெற்றியும் வந்தால்

2. இன்னும் அல்லாஹ்வின் நெறியாகிய இஸ்லாத்தில் ஜனங்கள் கூட்டங் கூட்டமாகச் சேருவதை (முஹம்மதே) நீர்பார்த்தால்

3. உம்முடைய றப்பின்புகழைக்கொண்டு (அவனை) துதிசெய்து அவனிடத்தில் பாப மன்னிப்பும் கேள். நிச்சயமாக அவன் (மன்னிப்புக்கேட்டலை) ஏற்றுக் கொள்பவனாக இருக்கிறான்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் கடைசி ஹஜ்ஜாகிய ஹஜ்ஜத்துல் விதாஃ செய்து கொண்டிருந்த காலையில் மக்காவில் இவ் அத்தியாயம் எழுந்தது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதினமாநகர் சென்றடைந்த பின்னர் இது வெளியானதால் மதனியென்றும், நபிகள் நாயகமவர்கள் மக்காவில் ஹஜ்ஜுச் செய்தபோது வெளியானதால் இதனை மக்கீயென்றும் கூறுகின்றார்கள். என்றாலும், நபிகள் நாயகமவர்கள் மக்காவில் வாசஞ்செய்த காலத்தில் வெளியான எல்லா அத்தியாயங்கட்கும் மக்கீ என்றும், ஹிஜ்றத்செய்து மதீனாவைத் தம் வாழ்க்கைத் தலமாக்கிய பின்னர் வெளியான வேத மொழிகள், அத்தியாயங்கள் ஆகியவைகளுக்கு (அவை வெளியாக்கப்பெற்ற ஊர் யாதா யிருப்பினும்) மதனீ யென்றும் பிரித்திருப்பதே வழக்கில் இருந்து வருவதால் இந்த அத்தியாயம் மதனீ என்ற பெயரால் பிரபல்யமாக வழங்கப்படுகின்றது.

இந்த அத்தியாயத்தில் 'உதவி' யைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதால் இதற்கு ஸூறத்துன்னஸ்ர் (நஸ்ஸர் = உதவி) என்றும், வெற்றியைப் பற்றிக் கூறப்பட்டிருப்பதால் இதற்கு ஸூறத்துல் பத்தஹ் (பத்தஹ்=வெற்றி) என்றும், நபிகள் நாயக மவர்களின் உலகவாழ்க்கைக் கடிதில் பூரணமாகப் போகின்ற தென்

பதை இவ்வத்தியாயம் சமிக்ஞை செய்வதால் இதற்கு ஸுறத்துத் தௌதீஆ (தௌதீஆ— செலவுதந்தனுப்புதல்) என்றும் முப்பெயர்கள் தாங்கி நிற்கின்றது. நிற்க; நபிகள் பெருமான்(ஸல்) இவ்வுலகின்கண் அவதரித்ததெல்லாம் மக்களின் இம்மை மறுமையின் வாழ்க்கையின் நேரான வழியைக்காட்டி, அம்மக்களை ஆண்டவன் சார்பு அழைத்துச் செல்வதற்கே யாகும். இத்தகைய காரியங்களில், எத்துணை யார் யாரிடம் ஒப்படைக்கப்பட்டதோ, அத்துணை அளவுக்கு அவர்கள் வேலைசெய்து முடிந்தவுடன் இவ்வுலக வாழ்க்கையைவிட்டு அவர்கள் செல்ல வேண்டியவர்களாகவே இருக்கின்றனர். அதற்கிணங்க, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் இறைவனால் தங்களிடம் ஒப்பு விக்கப்பெற்ற அருந்தொண்டையாற்றியதும் இவ்வுலக வாழ்க்கையைத் துறக்க வேண்டியவர்களே யாவர்கள். ஏனெனில், நபிமார்களாகிய அப்பரிசுத்த மகான்கள் பாப உலகாகிய இப்பூவுலகில் அவசியமில்லாமல் இருக்கமுடியாது. ஆதலின், அவர்கள் அவசரத்தையும் அவசியத்தையும் முன்னிட்டு அவ்வக்காலங்களிற் பிறந்து தாங்களாற்றவேண்டிய கடன்களை ஆற்றி முடிந்ததும், இனி இவ்வுலகில் அவர்கள் இருத்ததற்கு அவசியமில்லை யென்ற விஷயத்தை இறைவனால் முன்னெச்சரிக்கையாக அறிவிக்கப்படுவதும், அவர்களும் அப்பரலோக யாத்திரைக்கு முன்னதாகவே சித்தமாக இருந்து கொள்வதும் வழக்கமாக யிருக்கிறது. இவ்வுண்மையை நபிமார்களின் சரித்திரங்களில் அறியலாம். ஆகவே, நபிகள் நாயகமவர்களும் இந்த அத்தியாயத்தின் வாயிலாய் எச்சரிக்கை செய்யப்பட்டிருக் கிறார்கள். அதாவது:—உண்மையான நெறிக்கு ஊறுசெய்து நேரான வழியினின்றும் மக்களைப் பிறழச்செய்யக் கூடிய செயல்கள் பலப்பல இருப்பினும், அவைகளில் முக்கியமானவை அகங்காரம், ஷைத்தான், அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் வைத்துக்கொண்டிருக்கும் காபிர்கள், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசித் திரியும் நயவஞ்சகர்களாய முனாபிக்குகள், இந்நான்கு பேர்களுமாகும்.

முன்னுள்ள நபிமார்கள் அகத்தினுடையவும், ஷைத்தானுடையவும் தீங்கைவிட்டு ஜனங்களைக் காத்து நேரான விழியில் கொண்டு வருவதில் அரும்பாடு பட்டிருக்னார்கள். ஏனெனில் இவ்விரண்டும் தாம் சகல தீமைகளுக்கும் ஆணிவேர்போலிருக்கின்றன. முனாபிக்குகளும், காபிர்களும் இவ்விரு ஆணிவேர்களுக்கு நீர் பாய்ச்சி ஆக்கமளிக்கும் நிலைமையிலிருந்து வருகின்றனர். ஆதலின், அவ்விரண்டிலேயே முன்னுள்ள நபிமார்கள் கண்ணோட்ட மிட்டு வந்தனர். ஆனால், நமது நபிகள் நாயகமவர்களோ நபிமார்களுக்கு முத்திரையாகவும், இறுதி நபியாகவும், அதிபராகவும் உள்ளதால் அவர்கள் இந்நான்கு காரியங்களையும் பரிபூரணமாகச் செய்யத் தக்கவர்களாவார்கள். அதற்கிணங்க அவர்கள் இந் நான்கு காரியங்களையும் கவனித்தார்கள். அவர்கள் துவக்கத்தில் மக்கள் துணை யின்றி இஸ்லாம் மத போதனையை ஆரம்பித்து மக்காவிலுள்ள குறைஷியர்களின் பகைக்கு இலக்காகிப் பல இடர்பாட்டினுக்குட்பட நேர்ந்ததாலும், ஹிஜ்றத் செய்து மதீனா ஏகிய பின் நபித்துவத்தோடு நாடாளும் பொறுப்பும், காபிர்களை எதிர்த்துப் போராடும் பொறுப்பும், நயவஞ்சகர்களான முனாபிக்குகளை இன்னார் எனக்கண்டு அவர்களினின்றும் முஸ்லிம்களைக் காப்பாற்றும் பொறுப்பும் நேர்ந்து கொண்டன. இச்செயல்களை நாயகமவர்கள் ஈடேற்றியமை அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தில் தெளியக் காணல் கூடும். இச்சிறிய வியாசத்தில் அவைகளை பரக்கக் கூற இயலாவிடினும், இதே வெளியீட்டில் நாயகமவர்களின் அரிய தொண்டுகளைப் பற்றிய கட்டுரைகளும், அவர்களின் சரித்திரச் சுருக்கமும் வெளிவருவதற்குச் சந்தர்ப்ப மேற்பட்டு, இந்த வெளியீடு நாயகமவர்களின் மாதமாகிய றபீஉல் அவ்வலில் வெளிவருவது கண்டு மகிழ்ச்சி யடைதற்கு ஏதுவாயுளது.

நபிகள் நாயகமவர்கள் ஹிஜ்றத் செய்து மதீனாவைச்சென்றடைந்த பின்னர், முதலில் குறைஷியர்களுடன் போர் செய்யவேண்டிய நிலைமை யேற்பட்டு விட்டது. அதைத் தொடர்ந்து யூதர்களும், அறபி நாட்டு முஷ்ரிக்குகளும் யுத்தத்திற்கு வந்தனர். அவர்களுடனும் போராட நேர்ந்தது. இந்த நிலையில் முனாபிக்குகளும் தோன்றி முஸ்லிம்களுக்கு வஞ்சகம் செய்யத் தலைப்பட்டனர். ஆகவே அவர்களையும் இன்னார் எனத் தெரிந்து அவர்களால் முஸ்லிம்களுக்குத்

தீங்குண்டாகா வண்ணம் காப்பாற்ற முயற்சி செய்யவேண்டியதாயிற்று. ஆகவே, இம் முயற்சிகளில் நாயகமவர்கள் இறைவனின்கட்டளைக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து முனைந்து நிற்கவே, இறைவனின் உதவியும் உண்டாயிற்று. இவ்வுதவியைத் தொடர்ந்ததின் பலனும் வெற்றியும் நாயகமவர்களுக்குக் கிடைத்தது. இதைத்தான் இறைவன் தனது திருமறையில் இவ் அத்தியாயத்தின் ஆரம்பத்தில் 'அல்லாஹ்வின் உதவியும், அதன் பயனாகிய வெற்றியும் வந்தால்' எனக்கூறியுள்ளான். எனவே, ஒருவருக்கு வெற்றி ஏற்படின் பகைவர்கள் அடங்குவதும் துணைவர்கள் பெருகுவதும் இயல்பே. அதுபோலவே நாயகமவர்களுக்கும் உண்டாயின. அதாவது, யூதர்கள், முஷ்ரிக்குகள், குறைஷியர்கள் அடக்கப்பட்டனர். மக்காவும் பிடிபட்டது. பொது ஜனங்களும் இஸ்லாத்தின் உண்மையை உணர்ந்து கூட்டங் கூட்டமாக இஸ்லாத்தைத் தழுவினர். நயவஞ்சகர்கள் தங்கள் நயவஞ்சகம் பலிக்காமல் ஒழிந்தனர். ஆகவே, இதைத்தான் இறைவன் இரண்டாவது உரையில் 'மக்கள் அல்லாஹ்வின் நெறியில் கூட்டங் கூட்டமாக நுழைவதைப் பார்த்தீராயின்' எனச் சுட்டுகின்றான்.

இனி நாயகமவர்கள் முக்கியமாகச் செய்யவேண்டிய பணிகள் பெரும்பாலும் முற்றுப் பெற்று விட்டதால் எஞ்சியுள்ள காரியத்தையும் முடித்துவிட்டு இவ்வுலகை விட்டுவிட வேண்டியவர் களாகின்றார்கள். அதற்கு முன் எச்சரிக்கையாய் ஆயத்தமாக இருக்கவேண்டியதற்காக இறைவன் தன்னைத் துதிக்கச் செய்யவும், மக்களின் பாபத்திற்காகத் தன்னிடம் பிழை பொறுக்கத் தேடவும், கட்டளை யிடுவதோடு, அவன் பிழை பொறுக்கக் கூடியவன் என்பதையும் கூறி இருக்கிறான். நாயகமவர்களும் இம் முன் எச்சரிக்கையை உணர்ந்து பரலோக யாத்திரையைப் பற்றி அந்த ஹஜ்ஜிலேயே மக்கட்கு அறிவுறுத்தியதோடு, அன்று முதல் சனங்கள் தங்களுக்குப்பின் நடந்துகொள்ள வேண்டிய முறையையும், பொது சனங்களை அரசர்கள் எவ்வாறு நடத்த வேண்டுமென்ற விவரத்தையும் அறிவிக்கத் தங்களுக்குப் பின் கிலாபத் அரசாங்கம் எத்துணை யாண்டுக் காலம் வரை நீடிக்குமென்றும், அதற்கான திட்ட மின்னதுயென்பதை வரையிறுத்தும், ஆண்டவனைத் துதிசெய்து கொண்டுமிருந்தார்கள். நாயகமவர்களுக்குப் பின் முறையே நான்கு தோழர்களான ஹஜ்றத் அபூபக்கர், உமர்பாறூக், உதுமான், அலீ முர்த்தஜா (றில்வானுல்லாஹி அலைஹிம்) ஆகியவர்கள் கிலாபத் தாட்சியைத் தாங்கி அதனை நிறை வேற்றினர். நாயகமவர்களுக்கு இறைவன் அளித்த பொறுப்புகளும் நிறைவேறின.

இந்த அத்தியாயம் தான் நபிகள் நாயகமவர்களுக்குக் கடைசியாக வெளியாக்கப்பெற்ற திரு அத்தியாயமாகும். இதற்குப் பின்னும் நாயகமவர்களுக்கு வஹி வந்ததாயினும் அவைகள் பூரணமான ஒரு அத்தியாயமாக இருக்கவில்லை; ஒரு அத்தியாயத்தைச் சார்ந்த சில உரைகளேயாம். இந்த அத்தியாயம் வெளியாக்கப்பட்ட பின்னர், நாயகமவர்கள் எப்பொழுதும் அடிக்கடி, ஸுப்ஹானக் கல்லாஹும்ம பிஹம்திக அல்லாஹும் மஃபிர்லி, அதாவது 'இறைவனே! நான் உன் புகழைக் கொண்டு உன்னைப் போற்றுகின்றேன் அல்லாஹ்வே! என்னுடைய பாபத்தைப் பொறுத்தருள்' என்று துதிபுரிந்து கொண்டிருந்தார்கள் என ஹதீது ஷரீபுகளில் கூறப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயம் நாயகமவர்களின் மரணத்தை முன்னெச்சரிக்கை செய்கிறதென்பதை அவர்கள் அறிந்திருந்தார்களெனினும், அதைப் பொது சனங்களுக்கு அவர்கள் வெளிப்படையாக அறிவித்தார்களல்லர்; குறிப்பாகக் கூறினார்கள். ஆயினும், இத் திரு அத்தியாயத்தின் உட்கருத்தை முக்கிய ஸஹாபிகளிற் சிலர் அறிந்து கொண்டிருந்தனர் என்பதும், ஹஜ்றத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இவ் வத்தியாயத்தைக் கேட்டதும் அழுததுடன் நாயகமவர்களின் மரணம் கடிதில் இருக்கிறதென்பதை இவ்வத்தியாயம் அறிவிக்கிற தெனக் கூறியதாகவும் ஹதீது ஷரீபில் விளக்கமாய்க் காணலாம்.

நாயக வாக்கியம்

எவன் என்னுடைய சொல்லைக்கேட்டு, அதை மனனஞ்செய்து, (அதை மறந்து போகாமல்) பேணி, அதை நிறைவேற்றினனே, அத்தகைய அடியானை அல்லாஹுத்தஆலா செழிமை யாக்கிவைப்பானாக.

இமாம் ஷாபிஈ, பைஹகீ, அஹ்மது, திர்மதி, அபூதாவூத், இப்னுமாஜா, தாரமீ, (ரஹிமஹுமுல்லாஹ) ஆகியவர்கள் இந்த ஹதீதை உறுதி செய்திருக்கின்றார்கள். இந்த ஹதீதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது யாதெனில், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கூறிய ஹதீதுகளைக் கேட்டவர்கள், அதனை மனனஞ் செய்வதுடன், அதனை மறந்து போகாமல் பேணுவதுடன், அதனை மற்றவர்களுக்குப் போதிப்பதன் வாயிலாகவும், தானே அதன்படி நடப்பதன் வாயிலாகவும், அதனை நிறைவேற்றுவோருக்கு இறைவன் வளப்பத்தையும், செல்வத்தையும், களிப்பையும், அளிக்க வேண்டுமென நாயகம் (ஸல்) அவர்கள் பிரார்த்தித்திருக்கிறார்கள். ஆகவே, ஹதீதுகளை நன்றாக மனனஞ்செய்து போதிப்பதானது நாயனுக்கும், நாயகமவர்களுக்கும் சந்தோஷத்தையும் திருப்தியையும் அளிக்க வல்லதாக இருக்கிறது. நபிகள் நாயகமவர்களின் ஹதீதைக் கேட்டு மனனஞ் செய்வது மேன்மை என்பதனால், முற்காலத்தைய பெரியார்கள் நாயகமவர்களின் ஹதீதைத் தெரிந்த ஸஹாபிகள் இருக்குமிடங்களை நாடித் தேடித்திரிந்து மனனஞ்செய்து அதை மற்றவர்களுக்கும் போதித்திருக்கின்றார்கள். இவர்கள் இவ்வாறு நாடித் தேடிக் கேட்டுப் போதித்ததற்கு நாயனின் திருப்தியும் சந்தோஷமும் ஏற்படுவதுடனல்லாது, விலை மதிக்க முடியாத நல்லுபதேசங்களும், இம்மை மறுமைப் பலன்களும் கிடைத்திருக்கின்றன. இதனாலேயே நாயகமவர்கள் மார்க்க சட்டத்தைப் படித்த (சுமந்த) எத்துணைப்பேர்கள் அதனை அறியாதவர்களாக (பக்கீஹு அல்லாதவர்களாக) இருக்கிறார்கள் என்று கூறி இருக்கின்றார்கள். ஏனெனில், ஒருவர் ஒரு ஹதீதைக் கேட்டிருக்கலாம்; அதனைப் பாடமும் செய்திருக்கலாம்; அதனை மறந்து போகாமல் மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வரவும் செய்யலாம் எனினும் ஹதீதில் கூறப்பட்ட விஷயங்களைச் சரியாக உணர்ந்து கொள்ளாமலிருக்கக்கூடும். ஆகவே, ஹதீதுகளைக் கேட்டுப்பாடம் பண்ணுவதும், மனனஞ் செய்வதுமட்டும் போதியதன்று; அதன் கருத்துகளை தெள்ளத் தெளிய வுணர்ந்து பிறர்க்கும் போதிக்க வேண்டும்.

ஏனையோர்க்கும் போதிக்கவேண்டும் என்றால், அந்த ஹதீதிலுள்ள கருத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு போதிப்பதா? அன்று; அன்று! அவ்வாறு பொருளை மாத்திரம் போதிப்பதால், நாயகமவர்களின் சொல்லிலிருந்து பெறப்படுகிற அருமையான உபதேச மணிகளின் சரியான உட்கருத்தைத் தெரிந்துகொள்ள மற்றவருக்குச் சந்தர்ப்பம் வாய்க்காமற்போம். தவிரவும், நாயகமவர்களின் ஹதீதின் பொருளைக் கூறுபவர் அதன் சரியான பொருளை உணர்ந்துகொண்டனரா என்பதும் புலனாகாது. ஆதலால்தான் நாயகமவர்களின் ஹதீதைக்கேட்டு, கேட்டது போல் பதம் பதமாகப் பாடம்செய்து அவ்வாறு பாடம் செய்ததனைத் தான் மற்றவருக்கும் போதிக்கவேண்டும். இம்மூன்று காரியங்களுமிருந்தால் தான் அதிலுள்ள உட்பொருள்களை மற்றவர்களும் தெரிந்து கொள்ள முடியும். இதனால்தான் ஸஹாபிகளிற் சிலர் நாயகமவர்களின் ஹதீதுகளை அவ்வப்போது எழுதிவைத்து வந்தனர். அவ்வாறு எழுதி மனனஞ் செய்தவர்கள் அதை மற்றவருக்குப் போதிக்கும்போது தங்கள் ஞாபக சக்தியில் சந்தேக மேற்பட்டக்கால், விஷயத்தைக்கூறி, இவ்விதமாகவோ

இது போலவோ நாயகமவர்கள் கூறினார்கள் எனக் கூறி வந்திருக்கின்றனர்.

பிற்காலத்திலேற்பட்ட முஹத்திதுகளும், நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீதுகளில் பதம்பதமாகப் பாடம் செய்து ஒப்புவிக்கப் பட்டவைகளுக்கும், பொருள்களை மாத்திரம் கூறப்பட்டவைகளுக்கும் வித்தியாசத்தை ஏற் படுத்தி வைத்திருக்கின்றனர். இன்னும் இதன் தொடர்பாக அநேக சட்ட திட்டங் களை ஏற்படுத்தி இதனை யோர் தனிக்கலையாக வும் அமைத்து வைத்திருக்கின்றனர். இவ் வாறு நபிகள் நாயகமவர்களின் திருவாக் கிற்கு மதிப்புக் கொடுத்துப் பேணி வந்தமை யாற்றான் இஸ்லாம் மதத்தின் தத்துவங்கள் எதிர்மத வாதிகளாலும், மதப் புரட்டர்களா லும் மாறுபடக் கூறப்பெறாது உண்மைப் பொருள் காணமுடிகின்றது. எனவே, முஸ்லி மாகப் பிறந்த ஒவ்வொருவரும் நபிகள் நாயக மவர்களின் இந்த ஹதீதிற் கியைய, நாயக வாக்கியத்தைப் பதம் பதமாகப் பாடம் செய்து, பேணி, பிறர்க்குப் போதிப்பது அவசியமாகும். அவ்வாறின்றி தங்கள் சொந்த கற்பனைக்கிசைந்து மொழி பெயர்த்து வைத்திருக்கும் ஹதீதுகளிலிருந்து நாயக வாக்கியத்தின் உண்மைக் கருத்தைச் சரி யாக அறிய முடியுமென்று நினைக்கின்றீர் களா? நாயக வாக்கிய மொழி பெயர்ப்பு களைப் படிப்போர், அதன் மூல நூல்களி லுள்ளவற்றையும் கேட்டுத்தெரிந்து கொள் வதுடன், அவ் அறபி வாக்கியங்களின் பொருள்களைத் தெரிந்து கொள்வதற்காக அறபிக்கலைகளையும் பயிலுவதவசியமாகின்ற தென்பதை எடுத்துக் கூறுகின்றோம்.

நபி பெருமானவர்களின் திருமொழிகள்

ஈமான்

1. பகிரங்கப் படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் தொழுதவன் ஷிர்க் (ஆண்ட வனுக்கு இணைவைப்பது. இஸ்லாத்தில் இதுவே மிகக்கொடிய பாவம்) செய்தான் வெளிக்காட்ட வேண்டுமென்ற நோக்கத் துடன் நோம்பு வைத்தவன் ஷிர்க் செய்தான். வெளிக்காட்ட வேண்டுமென்ற நோக்கத் துடன் தருமம் செய்தவன் ஷிர்க் செய்தான்.

2. அண்டை வீட்டார் பசித்தவர்களா யிருக்கும் பொழுது தான் வயிறு நிறையச் சாப்பிடுகிறவன் மூமினல்ல.

3. "ஆண்டவன்மீது சத்தியமாக மூமினாக மாட்டான்" என்று ஒருசமயம் நபிபெருமா னவர்கள் மூன்றுதடவை கூறினார்கள் அப் போது அங்கிருந்தவர்கள் "ஆண்டவ னுடைய தூதரே எவன் (மூமினாகமாட் டான்)" என்று வினவ "துன்பங்களிலிருந்து தன் அண்டை வீட்டாரை எவன் பாது காவாம லிருப்பானோ அவனேதான்" என்று நபி பெருமானவர்கள் பதில் சொன்னார்கள்.

4. கட்டிடத்தின் ஒருபாகத்தை மற்றொரு பாகம் கட்டிப் படுத்துவதுபோலவே ஒரு மூமினுக்கு மற்றொரு மூமினிருக்கின்றான்.

5. சபித்துக்கொண்டிருப்பது மூமினுக்கு ஏற்றமல்ல.

6. ஒரு வஸ்துவினிடம் நீ பிரியம்கொள் வது உன்னைக் குருடனாகவும் செவிடனாகவும் ஆக்கிவிடும்.

7. மூமினுடைய காரியங்களெல்லாம் ஆச் சரிய மாகவே யிருக்கின்றது அவனுடைய ஒவ்வொரு காரியமும் அவனுக்கு நல்ல தாகவே யிருக்கும் அவ்விதமாக மூமினைத் தவிர மற்றவனுக்கு ஏற்படமுடியாது ஏனெ னில், அவனுக்கு (மூமினுக்கு) சந்தோஷம் வந்தகாலத்தில் அவன் ஆண்டவனைத் துதிக் கின்றான். அவ்வாறு துதிப்பது அவனுக்கு நல்லதாகவே யிருக்கிறது. அவனுக்குத் துன் பம் வந்தகாலத்தில் பொறுமை செய்து கொள்கின்றான். அவ்வாறு பொறுமை செய் வதும் அவனுக்கு நல்லதாகவே இருக்கிறது.

حفاظة الإسلام مدراس

நபிகள் திலகம்

"நிச்சயமாக அல்லாஹ்வின் திருத்தூதர் (வாழ்க்கைச் சரிதையில்) பின்பற்றக்கூடிய அழகிய நடக்கைகள் உண்டா யிருக்கின்றது." குர்ஆன்.

இப் பிரபஞ்சத்தின்கண் தற்சமயம் தலைப்பெருந் தன்மை படைத்துத் தழைத் தோங்கி வருவது எல்லா மதங்களுள் இஸ்லாம்மதம் ஒன்றே என்பதை யாரே அறியாதார்.

இறுதியிற் தோன்றிய இவ்விணையிலா மதம், இன்றைக்கு வளர்மதி போன்று அழகும் வளப்பமும் பெற்று இவ் வையகத்தே நிலுவதல் கண்கூடாகும். இம்மண்ணுலக மக்களின் நான்கிலொரு சாரார் நலன்பரவத் தழுவிய அத்துணை சிறப்பு வாய்ந்தது இவ்விஸ்லாம் மதம் ஒன்றேயாம். எதிர்காலத்து அகில உலக மதமாவதற்கு வேண்டிய அந்தஸ்துகளையும் சிறப்புகளையும் இஸ்லாம் அடைந்திருக்கிற தென்பதை எதிரிகளும் ஒப்புக்கொள்ளுகின்றனர். எனினும் பிற மதத்தினர் பலரும் தத்தம் மதங்களைப்பரப்புவான் பாரெங்கணும் பரவிய முயற்சிகளைப் புரிந்து வர, நம்மவரோ தக்க கட்டுப்பாடின்றியும், ஊக்கமின்றியும் வீணே பொழுது போக்குகின்றனர். பிறர் கோடிக்கணக்கில் தம்செல்வத்தைத் தம்தம் மதத்தின் பொருட்டாய்ச் செலவிட, நாம் இத்துறையிலும் சிக்கனம் சாதிக்கின்றோம். என்றாலும் பரந்து ஆழ்ந்த முயற்சி இன்றியே, நம் மதத்தைப் பிற மதத்தினர் நாடோறும் நூற்றுக் கணக்கில் கூட்டங்கூட்டமாய்ப் பின்பற்றி வருதலும், இஸ்லாம் மெய்நெறியை நன்னெறியெனக் கடைப் பிடித்தொழுகுதலும் நாம் கண்கூடாய் காண்கின்றனம்.

புறம்பே ஒதுங்கி நின்ற மக்கள் நம் இஸ்லாத்தில் நுழையவும், அகத்தே உள்ள முஸ்லிம்களோ, நம் உயரிய நெறியினை முற்றினும் வளர்க்காது நாளடைவில் பிற்போக்கிடுகின்றமை வருந்தத் தக்கதோர் நிகழ்ச்சியாம். இதனாலன்றோ நாம் நமது முன்னோர்களின் நிலையினின்றும் இன்றைக்கு மிகவும் கீழ்நிலை அடைந்துவிட்டோம். நம் சமுகம் தற்காலத்தில் வறுமையானும், கல்வியின்மையானும், தொழிலின்மையானும் ஒடுங்கிக் குன்றி நலிந்துபோய்விட்டது. உயரியதோர் மதத்தைத் தழுவிய ஓர் பெருமை உளதே தவிர, அதன் கோட்பாடுகளை முற்றும் கைக்கொண்டொழுகாததின் பயனாய், நம்மவர் நாடிழந்தனர்; அரசிழந்தனர்; இறுதியில் அடிமைகளாயினர். அந்தோ! அந்தோ!!

நம் மார்க்கத்தில் எல்லாப் போதனைகளும் அளவிறந்து கிடக்கின்றன. நம்மவர் தம் சீர்திருத்தத்திற்கென்று பிறர்பால் போந்து அடி பணிந்து முடிவணங்கி எத்தகைய படிப்பினையையும் பெறுதற்கு நம்மில் ஒன்றுமில்லாமற் போகவில்லை. நம்மிடத்திலேயே எல்லா நலன்களும் எல்லாத் துறைகளும் எல்லாப் படிப்பினைகளும் உள்ளன. அவைகளை யார் நமக்கு ஊட்டுவித்தார்களோ, அவ்வழிகாட்டியை மட்டும் நாம் பின்பற்றி நடப்போமாயின், அதுவே நமக்கு மீண்டும் எல்லாச் சிறப்பையும் நல்கும். நாம் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உண்மை முஸ்

லிமாகவும் மூமினாகவும்வாழவேண்டும். இஃது ஒன்றே எல்லா நலன்களையும் தரவல்ல நல்ல வழியாகும். எனவே நாம் செய்யவேண்டுவது யாது? நாம் நம் ஒழுக்கத்திலும் வாழ்க்கை நலத்திலும் உண்மை மூமின்களாக நடந்துகொள்ளுவதோடு, நமக்கு அளவிலாச் செல்வத்தை அளித்த நமது நபிகள் திலகம் அவர்கள்பால் பூரண மதிப்பும், அன்பும் கொள்ளல் வேண்டும். "தன்னையும் தன்னுடைய மாதா, பிதா, மகன், மற்றைச் சனங்களையும், மற்றும் தன் பொருள்களையும், யாவற்றையும் விட என்னை (நாயகமவர்களை) அதிகமாக அன்பு வைக்கும் வரை உங்களில் ஒருவனும் (உண்மையான) ஈமான் கொண்டவனாகமாட்டான்" என நம் பெருமானவர்கள் திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள். இதனைச் சிரமேற்கொண்டு இக்கட்டளைப்படி, நபிகள் திலகமவர்களை, நம் உற்றார் உறவினர் செல்வம் இவற்றினும் மேலாக மதித்துப் போற்றி அன்பு செய்தாலன்றி நாம் உண்மையான ஈமான் கொண்டவர்களாதல் எங்ஙனம்? எனவே நாம் நாயகமவர்கள் பால் பூரண அன்பு வைப்போமாக.

நிற்க; நபிகள் திலகம் (ஸல்) அவர்கள்பால் ஒவ்வொரு முஸ்லிமும் அவசியம் அன்பு வைக்கவேண்டும் என்பதற்கு எண்ணிறந்த சான்றுகளை எடுத்துக் காட்டல் கூடும். தலைமையாக நாம் யாரை அதிகமாக நேசிக்கின்றோமோ, அவரைப் போன்று நாம் ஒழுகத் தலைப்படுகின்றோம் என்பதை உய்த்துணர்வோமாக. இதற்கெடுத்துக் காட்டாகக் கூறுதும்:—ஜெர்மன் பெரு மன்னர் கெய்ஸர் அவர்களை சமீப காலத்தே எல்லா மக்களும் உயர்வாக மதித்தனர் என்பதையும், இவ்வாறு மதித்தமை காரணமாக பலர் கெய்ஸரைப் போன்றே மீசை முதலியனவற்றையும் புறக் கோலமாய்ப் பூண்டனர் என்பதையும் நாமறிவோம். அஃதேபோல் நெப்போலியன் என்னும் பிரஞ்சு மகா மன்னரை மக்கள் ஒரு காலத்தே அளவு கடந்து மதித்தமையால் அவர்கள் நெப்போலியனைப் போன்றே உடையணிவதும், புறங்கை கட்டி உலவுவதும் வழக்கமாய்க் கொண்டனர். எனினும் இவ்வழக்கங்கள் பலவும், அந்தந்த மன்னர்களின் கீர்த்தி மண்ணுய காலத்து மக்களும் கைவிட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். இவைகளினின்றும் நாமறிவது யாதெனில், மக்கள் யார்யாரைப் பற்றுக்கொள்ளுகின்றனரோ, அவரவர்களின் அகப்புறக் கோலங்களையும் அன்பு கொள்வது இயற்கையா யுள்ளது என்பதுவே. ஆதலின் உலகத்தில் ஒப்புயர்வற்ற பெரியாராய நமது நாயகம் (ஸல்) அவர்களை, நாம் எல்லா வகையிலும் பின்பற்றி ஒழுகுவதானால் சகல நலன்களை நாம் அடைதல் கூடும் என்பது ஏற்படுகின்றது. மனிதன் தன் வாழ்க்கையில் வெற்றி பெற வேண்டுவானெனின், அவன் நாயகமவர்களைப் பின்பற்றுவதினும் பிறிதோர் செயலுமுளதோ? இதனாலன்றோ நாயகமவர்களும் தம்பால் அன்பு செலுத்துதலைப் பற்றி அறிவுறுத்தியதுவும். ஆதலான் நாம் நமது நாயகமவர்களை அகத்தில் அன்பொழுகப் பற்றுக்கொண்டிருப்பதோடு, புறத்திலும் அவர்களைக் கொண்டாடுதல் இன்றியமையாததாய் இருக்கின்றது. நாயகமவர்கள்பால் அன்பு மிகைப்படுவதற்கென்றே நம் முன்னோர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்த நாளை ஓர் சிறந்த நாளாகக் கருதி விழாக் கொண்டாடினர். இதனை இவ்வுலகத்தில் எல்லா முஸ்லிம்களும் கொண்டாடுகின்றனர் எனினும் அவர்கள் தத்தம் கால தேச வர்த்தமானத்திற் கேற்ப நிகழ்ச்சிகளை அமைத்து வைத்துக்கொண்டுள்ளனர். ஆங்காங்கு கூட்டம் கூடப்படுகின்றது; "மௌலிதுஷரீப்" "சலவாத்து" இவைகள் ஓதப்படுகின்றன; நாயகமவர்கள் திருநாமத்தால் அறம் வழங்குகின்றார்கள்;

விருந்தோம்புகின்றார்கள். என்றாலும் இவ்வுலக முஸ்லிம்கள் அனைவரும் கட்டுப்பாடாக, அன்று நாயகமவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை மக்கள் நன்கறியுமாறு பிரசுரம் புரிந்து, அதனால் நம்பெருமானார் (ஸல்) அவர்களின் அளவிலா அன்பு, ஈகை, இணையிலா எளிமை, கரையில்லா கருணை, தடையிலாச் சமத்துவம் இவைகளாய குணாதிசயங்களையும் பிறரும், தாமும் ஓர்ந்து உணரும்படிக்குச் செய்வது கடமையாகின்றது.

எனவே நாயகமவர்கள் இவ்வுலகத்தே சனித்த ரபீஉல் அவ்வல் மாதம் 12-ம் நாளை (8—8—30) நாயகத் திருநாளாகக் கருதி, அன்று மேற்கூறிய வாங்கு நாயகச் சரித்திரமும், நாயக நல்லொழுக்கமும் மக்கள் அனைவரும் அறியுமாறு தக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். ஆங்காங்கு மகாநாடுகள் கூட்டப்பெற வேண்டும்; நபியவர்களின் வாழ்க்கைச் சரிதையினை அம்மேடைகளினின்றும் சொற் பெருக்கால் எல்லோரும் அறிய எடுத்தோத வேண்டும்; அவர்கள் மேம்பாடுகள் திகழும் அரிய நூல்களையும் பிரசுரங்களையும் வழங்குதல் வேண்டும்.

நபிகள் திலகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரிதை எண்ணிறந்த படிப்பினைகளை ஊட்டுவிக்கும் ஆற்றல் பொருந்தியது. அவர்களது திருவாழ்க்கை எங்ஙனம் ஆரிருளில் மூழ்கிக் கிடந்த நாகரிகமற்ற அக்காலத்து அராபியர்களைத் தட்டி யெழுப்பி உயிர்ப்பித்ததோ, அங்ஙனமாகவே இக்காலத்தும் அவர்களது சரிதை எல்லாச் சமூகத்தினருக்கும் நலன் பயக்குமன்றோ? மேலும், ஒவ்வொரு மனிதனும் இவ்வுலக வாழ்க்கையை இனிது நடத்துவதற்கு, நாயகமவர்களின் சரிதை ஓர் கைவிளக்காகும் என்பதில் ஐயமுளதோ? அவர்கடம் வாழ்க்கையில் எல்லா மக்களுக்கும் ஏற்ற பல நிகழ்ச்சிகள் பொதிந்து தோற்றுவதால், அவர்கடம் வாழ்க்கை பரிபூரணம் பொருந்தியதோர் வாழ்வாதலால், ஏழைமுதல் பணக்காரன் இறுதியாக, அடிமை முதல் அரசன் இறுதியாக, ஆண் பெண் எப்பாலரும் தங்கள் தங்கள் வாழ்க்கையைப் பண் படுத்திக் கொள்வதற்கு அதனினும் சிறந்ததோர் படிப்பினை யாண்டுளது? அரசியல் துறை முதல் தொழிலாளர் துறைவரைப் பல துறைகளுக்கும் நாயகமவர்களின் சரித்திரம் ஒன்றே போதிய படிப்பினையைப் புகட்டவல்லதாய் ஓர் கலங்கரை விளக்கே போல் மிளிர்கின்றது.

இந்நிலையில் நமது நாயகமவர்கள் சரிதையைப் புறமதத்தாராய கிறிஸ்துவர்களும் பிறரும் திரித்தும், உண்மையை மறைத்தும் மொழி பெயர்த்திருக்கின்றனர். இதனால் நம் லோகநாதர் (ஸல்) அவர்களைப் பற்றி நேர்மையாகப் பிறரால் அறிந்து கொள்ளற்கியலாமற் போயிற்று. ஆதலால் நாமே பிறரின் துணையின்றி நம் நாயகமவர்கள் சரிதை பரவி வழங்குதற்கு ஏற்ற முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியவர் களாகின்றோம். நாம் ஆங்காங்கு வழக்கத்தில் அமைந்துள்ள மொழிகளில் நாயக சரிதையை மொழி பெயர்த்து வழங்க வேண்டும். இதனால் நாயகமவர்கள்பால் எல்லா மக்கட்கும் பற்றுண்டாவதோடு, அவர்கள் இஸ்லாத்தின் உயரிய நெறியினையும் கடைப்பிடித்தொழுகத் தக்க ஆர்வமும் உண்டாகும் என்று நம்புகின்றோம்.

ஆங்கில பிரபுவாய 'லார்டு ஹெட்லி' அவர்கள் இஸ்லாத்தைத் தாம் தழுவியதற்கு நாயகமவர்களின் வாழ்க்கைச் சரிதையிற் கண்ட தூய ஒழுக்கமே காரணம் என்றும், இதனாற்றான் 20 ஆண்டுக்காலமாக எல்லா மதங்களையும் ஆராய்ந்து இறுதியில் இஸ்லாத்தைத் தழுவ நேர்ந்தது என்றும், கிறிஸ்துவர்கள் நாயக சரித்திரத்தைப் பிறழ்ந்து மொழி பெயர்த்து இருக்கின்றனர் என்றும் கூறியிருக்

கின்றார். மேலும் ஜனப் லார்டு ஹெட்லி அவர்கள் அகில இந்திய தப்லீக்மகாநாட்டில் தலைமை வகித்த காலையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்:—

"நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான சரிதையை உலக மக்கட்கும் உண்மையாகவே வெளிப்படுத்தப் பெறுமாயின், மனிதத் தன்மையினை உடைய ஒவ்வொருவனும் நாயகமவர்கள் மீது அன்பு கொள்ளாதிருக்கமாட்டான் என்பது திண்ணம். நபிகள் திலகமவர்களின் தூய வாழ்க்கைச் சரிதையில் பல தவறுதல்களைப் புகுத்தி உண்மையை மறைத்துவிட்டனர். ஆனால் நபி அவர்களின் வாணுளோ எட்டுணையும் மாசற்றது; சில விஷமிகள் வேண்டுமென்றே அவர்களது வாழ்க்கைச் சரிதையில் தகாத பல பொய்க்கூற்றுக்களை நுழைத்து விட்டனர். எனவே, நாயகமவர்கள் உண்மையைச் சரிதையை உலக மக்கள் அறிவரேல், திண்ணமாய் இவ்வுலகமே இஸ்லாத்தைத் தழுவும்."

இவ்வாறாக நாம் ஆற்றற்குரிய கடன் இதனால் நன்கறியக் கிடக்கின்றது. நாயகமவர்கள் உண்மைச் சரிதையை உலக மக்கள் அறியுமாறு ஒவ்வொரு முஸ்லிமும் தன்னாலியன்ற வாறு ஊக்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதன்பொருட்டு நாயகமவர்கள் பிறந்த நாளன்று, அவர்களின் தூய்மையின் மிக்க வாழ்க்கைச் சரிதையை எல்லா மொழிகளிலும் அச்சிட்டு ஆங்காங்கு வழங்கப்படுமாறு தலைவர்களால் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளது. நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தினரும் நம் தமிழ் மொழியில் நாயகச் சரிதையை மொழிபெயர்த்து அச்சிட்டு யாவருக்கும் வழங்குமாறு முயற்சி யெடுத்துக் கொண்டிருக்கின்றனர். எல்லா மக்களும் அத்திருநாளன்று நாயகத் தினத்தை கொண்டாடுவதோடு, அவர்களின் சரிதையைப் பரப்புவதிலும் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும் என்பதே எம் பேரவா. ஈதன்றி, நாயகமவர்களின் வாணுட்களின் பல நன்நிகழ்ச்சிகளும் நம் அரும் பத்திரிகையில் ஆங்காங்கு விரித்துக் கூறப்பெற்றுள்ளன, கண்டு பயன் பெறுக.

ஜீவிய சரித்திர வரலாறு

(மௌலவி S. A. முஹம்மது அலி சாஹிப் பாக்கவீ எழுதியது)

நற்குணம், நல்லொழுக்கம், நன்னடக்கைகள் இன்னின்னவை என வகுத்து அவைகளை மானிட சமுகத்தே பரவச் செய்வது மனிதனுற்றற்குரிய தொண்டுகளில் முதன்மையும், முக்கியமானதுமாகும் எனக் கூறின் அது மிகையாகாது.

நன்னடக்கை, நல்லொழுக்கம், நற்குணங்களை உபதேசத்தின் மூலமாகவும் பிரசங்கத்தின் மூலமாகவும் பரவச் செய்யலாம் ஆயினும் நற்குண நன் நடத்தைகளையே உருவாகக் கொண்ட ஒருவர், மக்கள் முன்தோன்றி அவைகளைச் செய்கையில் நடத்திக்காட்டுவாராயின், அம்முறையானது ஆயிரம் நூல் எழுதி வெளியிடுவதைப் பார்க்கினும், ஆயிரம் பிரசங்கிகள் போதிப்பதைப் பார்க்கினும் நன்மையை யளிப்பதாக யிருக்குமென்பதில் ஐயமில்லை. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணத்தைப்பாராட்டி திருகுர்ஆனில் கூறப்பட்டிருக்கிறதே அது யாது என்று ஆயிஷா நாயகி (ரலி) அவர்களிடம் வினவப்பட்டது; அஃது திருகுர்ஆன் தான் என விடையளித்தார்கள். அதாவது திருவேதத்தில் கூறப்பட்டிருக்கும் நற்குண நன்நடக்கைகள் யாவையும் நாயகம் (ஸல்) அவர்கள் செய்து காட்டினார்கள் என்பதேயாம்.

உலகத்தில் தோன்றிய பெரியார்களில் இவ்அரிய உதாரணத்திற்கு இலக்காக நின்று வழிகாட்டக்கூடியவர்கள் எனப் பாராட்டத் தக்கவர்கள் மிகச்சிலரே யாவர். ஆயினும், அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பிரித்து அவர்களின் சரித்திர வரலாற்றைப் படித்துப் பார்க்கின் அவர்களிடத்தில் நற்

குணங்கள் என்று சொல்லப்படுபவைகள் யாவும் நிறைந்து தோன்றக் காணலரிது. உதாரணமாக, ஹஜ்ரத் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாமவர்களை எடுத்துக்கொள்வோம். அவர்கள் அல்லாஹ்வின் நபி என்பதிலும், றஸூல் என்பதிலும் எவருக்கும் ஐயமில்லை. எனினும் அவர்களுடைய 33 வருஷகால வாழ்க்கைச் சரித்திரத்தில், மூவாண்டின் வாழ்க்கை நிலைமைகள்தான் மக்களால் தெரிந்துகொள்ள முடிந்தன. மற்றவைகளின் விவரம் சரியாகத் தெரியவில்லை. இம்மூவாண்டு வாழ்க்கை நிலைமையிலிருந்தும், இவர்கள் செய்த போதனைகளிலிருந்தும் பொறுமை, சகிப்புத்தன்மை, மன்னிக்கும் தன்மை, கருணை, ஈகை, இரக்கம், திருப்தியடைதல், சாந்தம், சமாதானம் இவைபோன்ற அருங்குணங்களே பெரும்பாலும் தெரிந்துகொள்ளக் கூடியனவாக இருக்கின்றன. அரசுபுரிபவனுக்கும், அரசாங்கத்தை நடத்துபவனுக்கும், பத்துப் பேருக்குத் தலைமை வகிக்கக்கூடிய வனுக்கும் இருக்க வேண்டிய பல முக்கிய அம்சங்களும், தன்மைகளும், குணங்களும் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சரித்திரத்திலிருந்தோ, உபதேசத்திலிருந்தோ தெரிந்துகொள்ள முடியாது. ஏனெனின், ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் அரசராகவோ, தலைவராகவோ அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவராகவோ இருக்கவில்லை. அவ்வாறிருந்தாலன்றோ, அவர்கள் எவ்வாறு நடந்துகொண்டார்களென்பதைத் தெரிந்துகொள்ளலாம். இஃதேபோல் ஹஜ்ரத் நூஹ் (அலை) அவர்களின் சரித்திரத்தை எடுத்துப் பார்ப்போமாயின் அதில் மக்களுக்குப் பொது மன்னிப்பளித்ததைப் பார்க்கமுடியாது. ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களின் சரித்திரமோ, தற்காலமுள்ள "தௌராத்" வேதத்தின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ள வேண்டியதாக இருக்கின்றது. அதுவும் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு 300 வருஷங்களுக்குப் பின் எழுதப்பட்டது. இவர்களையன்றி அலக்ஸாந்தர் போன்ற சேனாதிபதிகளின் சரித்திரங்களைப் பார்த்தாலோ சேனைகளைத் திரட்டுவதும், தேசங்களைப் பிடிப்பதும், படைகளைச் சேர்ப்பதும், பாராளும் மன்னரை மடிப்பது மாகவே இருக்கின்றது. இதனால் வீரம், துணிவு, முதலிய தன்மைகளைப் படித்துக் கொள்ளலாமே யன்றி ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்களின் சரித்திரத்தி லுள்ள தன்மைகளைக் கற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, உலகச் சரித்திரத்தை உற்றுநோக்குமிடத்து சகல நற்குணங்களையும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரே பெரியாரின் உண்மைச் சரித்திரம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சரித்திரம் ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை என நன்கு துணிந்து கூறலாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சரித்திரத்தை அரசன் முதல் ஆண்டிவரை, தோட்டி முதல் தொண்டமான்வரை எத்தகைய நிலைமையிலுள்ளோர் படித்திடினும், அவரவர் சீர்திருத்த மடைவதற்குரிய எல்லாப்பொருள்களும் சங்கையற அதிலிருக்கக் காணலாம். ஏனெனில் நபிகள் நாயகமவர்கள் தந்தை தாயிழந்த அனாதையாகவும், படிப்பில்லா உம்மியாகவும், வியாபாரியாகவும், துறவியாகவும், இல்லறவாசியாகவும், சீமானாகவும், அரசராகவும் பலவித நிலைமைகளையும் இவ்வுலகத்தி லடைந்திருக்கின்றார்கள். சுருங்கக் கூறுமிடத்து மக்களுக்கு இவ்வுலகில் என்னென்ன நிலைமைகள் எவ்வெவ்விதமாக ஏற்படக்கூடுமோ அவைகள்யாவும் நபிகள் நாயகமவர்கள்பால் அமைந்திருந்தன. அந்நிலைமைகள் பலவற்றையும் அவர்கள் பூரணமாக அநுபவித்ததோடு அவர்கள் அவற்றால் மாறுபடாது, ஆண்டவனுக்கோர் அடியாராகவே இருந்து வந்திருக்கின்றார்கள்.

இது நிற்க; நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம்போல், சகல விபரங்களும் தவறாமல் எழுதப்பட்டதும், கவனிக்கப்பட்டதுமான சரித்திரம் உலகில் ஒன்றுமே இல்லை என்பது மறுக்கப்படாததோர் உண்மை. எவ்வாறெனின், தற்சமயம் உலகத்தில் சிறந்தோராகக் கருதப் படுபவரெல்லாம் துவக்கத்தில் மக்களால் ஆதரிக்கப்படவில்லை. தவிரவும் அவர்களுக்கு ஏற்பட்ட சீரும் சிறப்பும் அவர்களின் ஜீவியகாலத்திலேயே ஏற்பட்டவைகளுமல்ல. அல்லது அவர்கள் தங்கள் வாணாட்களில் அத்துணை உயர்ந்தோராகக் கருதப்பட்டிராமல், அதற்குப் பின்னரே பிற்காலத்தவரால் கொண்டாடப் பெற்றிருக்கின்றனர். இதனை அவரவர்களின் ஜீவிய சரித்திரங்களால்நன்கறியலாம்.

ஆயினும், நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, பிறந்தது முதல் அறபியர்களால்

மதிக்கப்பட்டும், கொண்டாடப்பட்டும், பின் பற்றப்பட்டும், நடையுடை பாவனை முதலிய யாவும் கவனிக்கப்பட்டும் வந்திருக்கிறார்கள். தங்களுடைய ஜீவிய காலத்திலேயே அறபிதேசம் முழுதும் அவர்களை இறுதி நபியென ஒப்புக்கொண்டு இஸ்லாத்தைத் தழுவியதால் அவர்களின் ஆரம்ப வாழ்க்கை முதல் இறுதிவாழ்க்கைவரை மக்களால் துருவி ஆராயப்பட்டதுடன் அவர்களின் வம்ச பரம்பரையிலுள்ள ஏனையர்களின் வரலாறும் கூட எழுதப் பெற்றுள்ளது. இத்தகைய பூரண வெற்றி மற்றவர்களுக்கு அவர்களின் ஜீவிய காலத்திலேயே ஏற்படவில்லை. ஆதலால் மற்றவர்களின் ஜீவிய சரித்திரமும் பரிபூரணமாக எழுதப்படாமலும், உண்மையான ஆதாரங்களைக் கொண்டதாகவுமிருக்கவில்லை. ஆகவே, நபிகள் நாயகமவர்களது ஜீவிய சரித்திரமானது, மக்களின் ஒழுக்கங்களைத் திருத்தி அவர்களை நற்குண சீலர்களாக்கவும், நன்நடக்கை யுள்ளவர்களாக்கவும், எல்லாத் தேசத்தவருக்கும் எல்லாக்காலத்தும் எல்லாவித நிலைமையுடையவர்களுக்கும் சிறந்தவழி காட்டியாக இருந்து விளங்குகின்றது.

ஆனல், கல்வி, நாகரீகமற்ற அறபி தேசத்தில் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்பேக் கல்வி, நாகரீகம் ஏற்பட்டிருக்க, அவர்களது ஜீவிய சரித்திரம் மாத்திரம் எங்ஙனம் முதலாவதாக தவறுபடாது எழுதப்பட்டது எனச் சிலர் ஐயுறுதலும் கூடும். சரித்திரமறிந்த பெரியார்கள் இதன் விபரத்தை நன்கறிவர். ஆயினும் பொதுஜன நன்மையை நாடி அவ்விவரத்தையும் ஈண்டு சுருக்கமாகக் கூறுதும்.

அறபிதேசத்தில் எழுதப் படிக்கத்தெரியாதவர்கள் பெருப்பான்மையாக இருந்தனர் என்பதுண்மை. எனினும், எழுதுவதும் படிப்பதும் அறவே இல்லை என்று கூறுவது பொருந்தாது. நபிகள் நாயக மவர்களின் பாட்டனாரான அப்துல் முத்தலிப் அவர்கள் கைப்பட எழுதிய பத்திம் முதலியவைகளும், அவருக்கு முன் அறபிதேசத்தில் எழுதப்பட்டவைகளும் தற்சமயம் ஐரோப்பியர்களால் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன.

என்றாலும், நபிகள் நாயகமவர்கள் கூறும் ஒவ்வொரு சொல்லும், செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் தவறாமல் எழுதிவைக்கப்பட்டனவா என்பதில் சிறிது சந்தேகமெழலாம் எவ்வாறாயினும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபியாக வந்த காலத்தில் குறைஷியர்களில் மாத்திரம் 17 பேர்கள் எழுதப் படிக்கத் தெரிந்திருந்தனர் என்றும், அவர்களில் ஹஜ்றத் உமர், ஹஜ்றத் அலீ, ஹஜ்றத் உதுமான், ஹஜ்றத் அபூ உபைதா, தல்ஹா அபூஹுதைபா, ஜைத்து, அபூஸுப்யான் (ரிழுவானுல்லாஹி அலைஹிம்) முதலியவர்களும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் என்றும் அறிகின்றோம். மேற்கூறப்பட்ட 17 பேர்களில் இஸ்லாத்தைத் தழுவியவர்கள் நீங்க, இஸ்லாத்தைத் தழுவாமல் எஞ்சி இருந்தவர்களில், பத்று யுத்தத்தில் முஸ்லிம்களால் சிறைப்படுத்தப்பெற்ற குறைஷியர்கள் சிறை மீட்சிப் பணம் கொடுத்து விடுதலை பெற்றனர். பணங்கொடுக்க வகையற்ற குறைஷியர்களிற் பதின்மர் எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து விடுதலையடைய அனுமதி பெற்றனர். இதனல் முஸ்லிம்களிற் பலர் எழுதப் படிக்கப் புதிதாகக் கற்றுக்கொண்டனர். இவ்வாறு கற்றுக்கொண்டவர்களில் வஹீயை எழுதி வைப்பவர்களில் ஒருவரான ஸைதுப்னுதாபித் (ரலி) அவர்களும் ஒருவராவார். இதுவுமல்லாமல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலேயே அவர்களின் கட்டளைப்படி திரு குர்ஆன் வாக்கியங்கள் அவ்வப்போது எழுதி வைக்கப்பட்டு வந்ததாகவும் தெரிந்துகொண்டிருக்கிறோம். ஆதலால், நபிகள் நாயகமவர்கள் காலத்திலேயே முக்கிய விஷயங்கள் முஸ்லிம்களால் எழுதி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதிற் எட்டுணையும் ஐயமின்று.

என்றாலும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறும் ஒவ்வொரு சொல்லும், செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் தவறாமல் எழுதி வைக்கப்பட்டனவா என்பதில் சிறிதும் சந்தேகமெழலாம். எனினும் அவைகளும் எழுதி வைக்கப்பட்டதாகவே தெரிய வருகிறது. அதாவது நபிகள் நாயகமவர்கள் ஹதீது களை எழுதி வைப்பதை விலக்கி இருக்கிறார்கள் என “ஸஹீஹுமுஸ்லிம்”ல் கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து திரு குர்ஆனை எழுதி வைத்ததுபோல் நாயகமவர்களின் ஹதீதுகளையும் ஸஹாபிகள் எழுதி வைத்திருக்கிறார்கள் என்றேற்படுகிறது. ஈதன்றி நாயகமவர்கள் இவ்வாறு தடைசெய்தது ஆரம்பக்காலத்தில்தான் என்றும், பின்னர் அத்தடையை

நீக்கிவிட்டார்கள் என்றும் புகாரி முதலிய கித்தாபுகளின் ஆதாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. அதாவது "ஸஹீஹுல்புகாரி" யில் கல்வியைப்பற்றிய பாடத்தில் அபூ ஹுறைரு (றலி) அவர்களின் ரிவாயத்து ஒன்று காணப்படுகிறது. அந்த ரிவாயத்தில் ஹஜ்றத் அபூஹுறைரு (றலி) அவர்கள் "ஸஹாபிகளில் என்னைப் பார்க்கிலும் அதிகமாக ஹதீதுகளைப் பாடம் செய்தவர்கள் ஒருவருமில்லை. ஆனால் அப்துல்லாஹிப்னு உமர் (றலி) அவர்கள் இதில் விலக்கப்பட்டவர்களாவர். ஏனெனில் அவர்கள் நாயகமவர்களின் ஹதீதுகளை எழுதி வைத்துக் கொண்டிருந்தார்கள். நான் எழுதிவைத்துக் கொள்வதில்லை" எனக்கூறி இருக்கிறார்கள்.

நபிகள் நாயகமவர்களிடமிருந்து எதைக் கேட்ட போதிலும் அவைகளை எல்லாம் ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு உமர் எழுதிவைப்பது வழக்கமாக இருந்தது. இதைக் குறைஷிகள் தடுத்து "நபிகள் நாயகமவர்கள் சில சமயங்களிற் சந்தோஷமாகவும், சில சமயங்களிற் கோபமாகவும் இருப்பார்கள், நீங்கள் யாவையும் எழுதி வைக்கிறீர்கள்; ஆதலால் நீங்கள் அவைகளை எழுதக்கூடாது" என்று கூறினர். ஆகவே அவர் எழுதிவைப்பதை நிறுத்திக் கொண்டாராயினும் இவ்விஷயத்தை நாயகமவர்களிடம் அறிவித்தார். அறிவிக்கவே, நாயகமவர்கள் எழுதி வரும்படியாகவே அவருக்கு சமிக்கை செய்தார்கள். அதிலிருந்து அவர் மீண்டும் வரையத் துவங்கினர். இவ்வாறு எழுதிவைக்கப்பட்ட அந்த ஹதீதுகள் பின்னர் "ஸாதிகா" என்ற பெயருடன் தனி நூலாயிற்று.

இது போலவே அனஸ் (றலி) அவர்களிடத்திலும் நாயகமவர்களின் ஹதீதுகளில் எழுதிவைக்கப்பட்ட கட்டு ஒன்றிருந்ததாகவும் அதை விரித்து அவைகளில் எழுதப்பட்ட ஹதீதுகளை அவர்கள் ஜனங்களுக்குப் படித்துக் காட்டி இவைகளை நான் நாயகமவர்களிடமிருந்து கேட்டு எழுதி வைத்தேன் என்று சொல்லி வந்ததாகவும் தெரிய வருகிறது.

இவைகளை அல்லாமல் அயலகத்து அரசர்களுக்கும் சக்கரவர்த்திகளுக்கும் இஸ்லாத்தின் அழைப்பு நிரூபம் எழுதி விடுத்ததாகவும்-தெரியவருகிறது. நாயகமவர்களுக்கும் குறைஷியர்களுக்கும் நடைபெற்ற "ஹுதைபிய்யா" உடன்படிக்கையும் எழுத்து மூலமாகவே ஏற்பட்டதென்பதைச் சரித்திரம் கூறுகிறது. இச்சான்றுகளிலிருந்து நாம் தெரியவேண்டியது யாதெனின், குர்ஆன் ஷரீப் அல்லாமல் ஹதீதுகளும், நாயகமவர்கள் செய்த உடன்படிக்கை, இஸ்லாமிய அழைப்புப் பிரகடனம், கட்டளை முதலியவைகளுங்கூட எழுத்து மூலமாகவே அச்சமயத்திற்குப் போதுமான அளவு இருந்திருக்கிறது என்பதே.

இவ்வாறாக, எழுத்து வேலைகள் நாளுக்கு நாள் தொடர்ச்சியாகவே வளர்ந்து வந்திருக்கின்றன. இவைகளல்லாமல் பனூஉமய்யா சந்ததியார்; கிலாபத் பதவியை அடைந்த போது அவர்கள் கற்றறிந்த பெரியார்களை அழைத்து நூல்களை எழுதும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். அமீர் முஆவியா அவர்கள் யமன் ராஜ்யத்திலிருந்த உபைதுப்னு ஷரிய்யா என்பவரை அழைத்து அறபி தேசத்திலிருந்த முன்னோர்களின் சரித்திரங்களை எழுதுமாறு கட்டளையிட்டிருக்கிறார். அங்ஙனம் எழுதப்பெற்ற நூலுக்கு "அக்பாருல் மாலிய்யீன்" என்ற பெயரும் வழங்கப் பெற்றது.

அமீர் முஆவியாவுக்குப் பின் வந்த அப்துல் மலிக் இப்னுமர்வான் என்பார், சகல கலைகளிலும் வல்லுநர்களாக இருந்தவர்களை அழைத்து ஒவ்வொரு கலை சம்பந்தமாகவும் நூல்களை எழுதுவித்திருக்கின்றார். பின்பு உமறுப்னு அப்துல்அஜீஸ் காலத்தில் நூல்கள் எழுதும் வேலை இன்னும் அதிகமாக வியாபித்தது. நபிகள் நாயகமவர்களின் ஹதீதுகளை எழுதி வைப்பதிலும் அவைகளை நூல்களாகத் தொகுப்பதிலும் அவர் அதிக ஊக்கத்தைஎடுத்துக்கொண்டிருந்தார். அவர் கட்டளைப்படி பல அறிஞர்கள் தங்கள் தங்களுக்குத் தெரிந்த ஹதீதுகளை நூல்களாக எழுதி இருக்கிறார்கள். இத்துடன் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த யுத்தங்களைப் பற்றியும் அவர் புத்தகங்களை இயற்றுவித்திருக்கின்றார். எனவே, பல்வேறுபட்ட இத்தகைய ஆதாரங்களையும் ஊன்றி நோக்குங்கால், ஸீரத்து (நாயகசரித்திரம்) கள் எழுதுவதானது ஆரம்பம் முதற்கொண்டே கவனிக்கப்பட்டதாக இருந்து வந்ததென்பதோடு, ஒரு நூறு வருஷங்களுக்குள் பூரணமான ஸீறத்து எழுதப்பெற்றதென்

பதாகவும் தெரியவருகிறது. இதுகாறும் கூறியவை எல்லாம் எழுதிவைக்கப்பெற்ற வையின் சம்பந்தமானவையாம். இவைகளை யல்லாமல் ஸஹாபிகளும் தாபியீன்களும் வாய்ப்பாடமாக மனனஞ் செய்துவைத்த வைகளும், பிற்காலத்தில் அச் சரித்திரங்களை விரிவாக எழுதுவதற்கு உதவியாக இருந்தன என்பதை நாம்கூறவும்வேண்டுமோ? ஆகவே பிறரின் சரித்திரங்களைப்போலாது நமது நாயகமவர்களின் சரித்திரமானது ஆரம்ப முதல் கவனிக்கப்பட்டும், எழுதி வைக்கப்பட் டும் வந்திருக்கின்றன என்பது மலையிலக்காம். ஈதன்றி நாயகமவர்களின்சரித்திரமும் ஹதீது களும் மிகமிக ஜாக்கிரதையாகப் பேணப் பட்டு வந்தன என்பதையும், அவைகளில் ஒருபதம்கூட மற்றவர்களால் கூட்டவோ குறைக்கப்படவோ இல்லையென்பதற்கும் தக்க சான்றுகளுள. ஆகவே, நாயக சரித்திரத்தில் பொய் கலப்பில்லை என்பதையும் அவைகள் உண்மையானவை என்பதையும் மறுக்க முடியாது.

வீறத்துன்நபவி எழுதப்படும்வேலை, நபி கள்நாயகமவர்களுக்கு நபிப்பட்டம் வந்த ஒரு நூற்றுண்டுக்குள் பூரணமாக முடிவுபெற்றது என மேலே கூறப்பட்டுளது. ஆகவே, அந்த நூல்களை எழுதிய ஆசிரியர்கள் தற்காலத்து நூலாசிரியர்களைப்போல் பல நூல்களையும் ஆராய்ந்து துருவி ஒன்று திரட்டி எழுதுவது போல், அக்காலத்தவர்களுக்கு அவ்வளவு ஏராளமான நூல்கள் எளிதாகக் கிடைக்க வில்லை. சிற்சில ஸஹாபிகள் எழுதி வைத்த ஹதீதுகளெவ்லாம் மிகச் சொற்பமான வைகளாகவே இருந்தன. தவிரவும் அவை கள் தற்காலத்தைப் போல் அச்சிலேற்றி ஆயிரக் கணக்கான பிரதிகள் கிடைக்கு மாறு பிரசுரமாகவுமில்லை. ஆதலின் அந்தநூல் கள் யாவருக்கும் எளிதில் கிடைக்கக் கூடியன வாக இருக்கவில்லை.

இவ்வாறிருக்க, நாயகமவர்களின் ஹதீது களை மனனம் செய்தவர்களிட மிருந்தும் இந்த நூலுக்கு விஷயங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டியதிருந்தது. ஆக வே, அவ்வாறு மனனஞ் செய்தவர்களும் ஒரே இடத்தில் ஒரே காலத்தில் ஒன்றுகூடக் கூடிய நிலைமையிலும், எல்லோரும் எல்லா விஷயங்களைத் தெரிந்தவர்களாகவும் இருக்க வில்லை. ஆதலின் இந்த நூல்களை எழுத முன் வந்த பெரியார்கள் அதிக சிரமமெடுத்து ஊர் ஊராகவும், நாடு நாடாகவும் அலைந்து பலரை யும் கண்டு கேட்டுத் தெளிய வேண்டியதா யிருந்தது. இவ்விதமான நிலைமை இதர சமூ கத்தினருக்கு இருந்திருக்குமாயின் அவர்கள் ஒரே இடத்தில் பலரையும் அழைப்பித்து அவர்கள் கூறுகிற யாவையும் ஒன்று திரட்டி எழுதிவிடுவர். அவர்களுக்கு விஷயந் தெரி வித்தவர் யார் யார் என்பதைக்கூட சீர்தூக்க மாட்டார்கள். சரித்திரத்திற்கு ஒத்ததாகவும், நியாயமாகவும் தோன்றுகிற எல்லாவற்றை யும், பொய்யோ, மெய்யோ அவைகளை கோர் வையாகச் சேர்த்துச் சுலபமாக நூலாக்கி விடுவர்.

ஆனல், முஸ்லிம்களோ அவ்வாறு செய் தார்களல்லர். இச்சரித்திர நிகழ்ச்சிகளைக்கூறு பவர் அந்நிகழ்ச்சிப்போது அங்கிருந்தனரா, அல்லரா? அந்நிகழ்ச்சி நடந்த சமயம் அவர் அங்கில்லராயின் அவருக்கு விஷயத்தை விளக்கியது யார்? அவர் அங்கிருந்தாரா? அல்லரா? இவ்விதமான நிகழ்ச்சிகளைக் கூறு பவர் எத்தகையவர்? எப்படிப்பட்ட தன்மை யுடையவர்? அவருடைய குணதிசயங்கள் யாவை? அவருடைய நடத்தை யாது? ஞாபக சக்தியுள்ளவரா? அல்லரா? நம்பத் தகுந்தவரா? அவருடைய தொழில் யாது? விஷயத்தை யுணரும் திறனுள்ளவரா? படித்த வரா? படியாதவரா? முதலிய விஷயங் களைக் கவனித்து அவர் கூறுபவைகளைச் சுண் டிப்பார்ப்பதும் வழக்கமாகவும், சட்ட மாகவும் கொண்டிருந்தனர். இவ்விதமாகச் சுண்டிப் பார்ப்பதில் ஆயிரக் கணக்கான முஹத்திதுகள் தங்கள் வாணுட்களை எல்லாம் செலவு செய்து ஊர் ஊராக அலைந்து இந்த விஷயதானிகளான "ராவி"களைப் பற்றிய விபரங்களைத்தெரிந்து எழுதி இருக்கின்றனர். இவ்விதமாக விசாரணை புரிந்து எழுதியதன் பயனாக "அபிதான விளக்கம்" என்ற நூல்கள் ஏற்பட்டன. இந்த நூல்களின் உதவியால் ஏறக்குறைய 5 லக்ஷம் மனிதர்களின் ஜீவிய சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது. ஹதீதுகள், ஸியர்கள் எழுதுவதற்கு 5 லக்ஷம் பேர்களின் ஜீவிய விபரத்தைச் சேர்ப்பதென்றால் அந்த நூல்களில் பொய் கலப்பிருக்கக் கூடாதென அவர்கள் எவ்வளவு ஊக்கம் காட்டினர் என் பதை வாசகர்களே சிந்தித்துப் பார்த்தல்

வேண்டும். முஸ்லிம்கள் செய்த இவ்வரும் பெரும் முயற்சியை இக்காலத்திலுள்ள உலக அறிஞர்கள் யாவரும் போற்றுவதோடு நாயக சரித்திரத்தைப்போல் உண்மையான சரித்திரம் உலகத்திலேயே ஒன்றுங் கிடையாதென்ற முடிவுக்கும் வந்திருக்கின்றார்கள்.

நபித்துவத்தின் மாண்பு

மௌலவி A. A. அப்துல் கரீம் சாகிப் பாக்கவீ வரைவது

இவ் வுலகத்தின்கண்ணே தோன்றிய நபிகள் அனைவரினும் நமது நபிகள் நாயகமவர்களுக்கே சிறப்பாகப் பல அரும் பெருந்தன்மைகள் உரியன என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. இதர நபிமார்களிடமில்லாதனவும், நபிகள் நாயகமவர்களிடமே காணப்படுவனவுமாய உயரிய பல குணங்களை பல முக்கிய ஹதீதுகளிலிருந்து அறிஞர்கள் எடுத்தெழுதி இருக்கின்றனர். அவைகளுள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே கூறிய சில ஹதீதுகளுமுண்டு. இவற்றுள் ஸஹீஹ் முஸ்லிம், ஸஹீஹ் புகாரி, ஆகிய நூல்களில் ஹஜ்றத் ஜாபிர் (றலி) அவர்களால் கூறப்பட்ட ரிவாயத்து வருமாறு:—

"முன்னிருந்த எந்த நபிக்கும் கொடுக்கப்படாத ஐந்து அருங்காரியங்கள் எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன என நாயகமவர்கள் கூறினார்கள். அவைகளாவன 1 எனக்கு ஏற்பட்டிருந்த கம்பீரத் தோற்றம் மூலமாக வெற்றியும் உதவியும் அளிக்கப்பட்டது. 2 உலகத்திலுள்ள பூமியின் பாகங்கள் யாவும் எனக்கு ஸஜ்தாச் செய்யுமிடமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. 3 கனீமத் (போர்க்களத்தில் சிறைகொள்ளப்பட்ட) பொருள்கள் எனக்கு ஆகுமாக்கப்பட் டிருக்கின்றன. வேறு எந்த நபிக்கும் அவைகள் ஹலாலல்ல. 4 எனக்கு ஷபாஅத்து செய்யும் (இறைவனிடத்தில் அடியார்களுக்குப் பாபமன்னிப்புக்காகப் பரிந்து பேசும்) பேறு அளிக்கப்பட்டிருக்கிறது. 5 எனக்கு முன்னுள்ள நபிமார்கள் தங்கள் தங்கள் சமூகத்தினருக்கு மாத்திரம் நபியாக வந்தார்கள். நான் உலக முழுவதற்கும் நபியாக வந்திருக்கிறேன்."

இவைகளல்லாமல் "ஸஹீஹ் முஸ்லிம்" என்ற நூலில் ஹஜ்றத் அபூஹுறைறு (றலி) அவர்களின் ரிவாயத்தில் நாயகமவர்களுக்கு ஆறு அருஞ்சிறப்புகள் அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அவைகளில் மேற்கண்ட ஐந்து சிறப்புகளைத் தவிர்த்து நாயகமவர்களுடன் நபித்துவமும் முற்றுப் பெறுவது ஆறுவதாகக் கூறப்பட்டிருக்கிறது. இதர ஹதீதுகளில் இன்னும் பல அருஞ்சிறப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. எல்லா நபிமார்களின் உம்மத்துக்களைப் பார்க்கிலும் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிகமான உம்மத்துகள் உண்டு என்பதும், நபிகள் நாயகமவர்களின் வஹியானது இறுதி நாள் வரை என்றைக்கும் நின்றிலங்கும் படியான அற்புதமாகுமென்பது மாகும். இதனடியில் அவைகளிற் சிலவற்றை விளக்குவாம்.

(ருஃபு) கெம்பீரத் தோற்றம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் உலகிற் றோன்றிய நபிமார்கள் யாவரையும் இருவகையாகப் பிரிக்கலாம். வெளித்தோற்றத்தில் உதவியற்றவர்களைப் போலவும், பலஹீனர்களைப் போலவும் தோற்றியவர்கள் ஒரு வகை. இவர்களுக்கு உலக அதிகாரமெதுவு மிருக்கவில்லை. இவ்வகையினர்தாம் நபிமார்களில் அதிகமாக இருந்திருக்கின்றனர். உலக அதிகாரங்களைப் பெற்றவர்கள் மற்றொரு வகையாயினராகும். இவர்கள் மிகச் சொற்பமானவர்கள். உதாரணமாக ஹஜ்றத் மூஸா, ஹஜ்றத் தாவூத், ஹஜ்ரத் சுலைமான் (அலைஹிமுஸ்ஸலாம்) முதலியவர்களாகும். இவர்களில் ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களோ, பனூ இஸ்ராயீல் களை எகிப்தின் கொடுங்கோலரசனை "பிர்ஔன்" அவன்குழாத்தினர்இவர்களை விட்டுக் காப்பாற்றி ஷாம் தேசத்தின் எல்லைப் புரத்

திற்கு அழைத்துச் சென்றார்கள். ஆயினும், அத்தேசத்திலிருந்த சில வணக்கக் காரர் களோடு எதிர்த்துப் போர் புரிய வேண்டிய தாயிற்று. போர் நடந்து கொண்டிருக்கும் காலத்திலேயே ஹஜ்றத் மூஸா (அலை) அவர் கள் இவ்வுலகை விட்டகல நேர்ந்தது. ஆகவே, இவ்வுலகத்திலேயே பூரணவெற் றியோ, பூரண ஆதிக்கமோ, மூஸா (அலை) அவர்கட்கு ஏற்படவில்லை.

ஹஜ்றத்தாவூத் (அலை) அவர்களோ அர சுரிமையைப் பெற்றார்கள். ஆனால், தங்கள் வாணாள் முழுதும் அழுகையிலும் பிரலாபத் திலுமே கழித்தார்கள் அவர்கள் பால் இரக் கங்கொண்டு அவர்களின் துக்கம் நிறைந்த இஸ்லாமிய அழைப்பிற்குச் செவி கொடுத் தவர் ஒருவருமில்லை.

நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆரம்பக்காலமோ, திக்கற்ற நிலைமையிலிருந் தது. வறுமையோ சொல்லத் தரமற்றதாக இருந்தது. ஆனால், அவர்களின் பிற்கால வாழ்வில், மூஸா (அலை) அவர்களுக்கிருந்த சேனைபலமும், தாவூத் (அலை) அவர் களுக்கு இருந்த அரசாங்க அதிகாரமும், சுலைமான் (அலை) அவர்களுக்கிருந்த ஆதிக் கமும், மகத்துவமும் நிறைந்திருந்தன. எனினும், இத்தகைய அரும் பெரும் பாக்கியங் களெல்லாம் அல்லாஹ்வின் பாதையிலேயே செலவாயின. இதனால் வழிதவறியவர்கள் நேரான பாதையை அடைந்தனர். மறந்தவர்கள் மறதி நீங்கப் பெற்றனர். நாயகமவர்களின் அழைப்பின் தொனியைக் கேட்டவர் அடிபணிந்தனர். உலக ரெக்ஷகர் (ஸல்) அவர்கள் எப் பாதை வழியாகச் சென்றார்களோ அந்தப் பாதையிலுள்ள பாபிகளும் குற்றவாளிகளும் அவர்களுக்குத் தலைவணங்கி வழிப்பட்டனர். தங்களின் பாபமான காரியங்களை நினைத்து நினைத்துக் கரைந்தனர்.

"எனக்குக் கிடைத்த வெற்றிகளும், உதவி களும் எனக்கிறைவனால் அளிக்கப் பெற்றிரு ந்த கெம்பீரத் தோற்றத்தினால் கிடைத்தன" என நாயகமவர்களே கூறியிருக்கின்றார்கள். "என்னைப்பற்றிய அச்சமானது நீண்ட தூரம் வரை ஜனங்களிடமிருந்து வேலை செய்தது" என்றும் அவர்கள் மற்றொரு முறையும் கூறி இருக்கின்றார்கள். பெரும் பெரும் சுத்த வீரர்கள் நாயகமவர்களை வெட்டிவிட வாட் களை உருவிக்கொண்டு வந்தனர். ஆயினும், நாயகமவர்கள் திருமுகப் பிரகாசமானது அவர்கள் மீது பட்டவுடன், அவ்வீரர்கள் விதுவிதிர்த்து நடுநடுங்கி அடிபணிந்துவிட் டனர் என்பதையும், கட்டுக்கடங்காத கபீ லாக்காரர்கள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் தாங்க ளாகவே அடங்கி ஒடுங்கிப் போயினர் என் பதையும் நாயகம் (ஸல்) அவர்கள் சரித் திரத்திலிருந்து அறியலாம். மதீனாவின் அய லகத்திலிருந்த யூதர்கள் வலிய பெரும் கோட் டைகளில் இருந்தனர். அவர்கள் தங்கள் இராணுவ பலத்தையும், கோட்டையின் உறுதி யையும் நம்பி மமதை கொண்டிருந்தனர். எனினும் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை அடக்க ஆரம்பித்தபோது, அந்த யூதர்கள் நாயகமவர்களை எதிர்க்கச் சக்தியற்றவர் களாய் நடுநடுங்கி, போரிடாமலேயே ஒதுங்கி விட்டனர். பலமுறைகளிலும் முஸ்லிம்களை எதிர்த்து யுத்தம் புரிந்தவரும், முஸ்லிம்களு க்கு உயிர்ப் பகைவராக இருந்தவருமான அபூ ஸுப்யான் என்ற குறைஷித்தலைவர் மக்கா வெற்றியன்று அப்பாஸ் (றழி) அவர்களின் புணையாக நாயகமவர்களின் அடைக்கலம் பெற்று மலையின்மீதேறி, நாயகம் (ஸல்) அவர் களின் வீரர்கள் மக்காவை நோக்கிச் செல்வ தைப் பார்த்து விதுவிதிர்த்துப் போனார் என்றக்கால், நாயகமவர்கள்பால் மற்றவர்கள் எத்துணை அச்சங் கொண்டிருந்தனர் என்ப தை விளக்கவும் வேண்டுமோ? இத்தகைய அரிய பல செயல்கள் இதர நபிமார்களுக்கு இருந்ததாகச் சரித்திரம் தான் கூறுமோ? இதர மதத்தவர்தான் மெய்ப்பிக்க வல்லா ரோ?

உலகமெல்லாம் தொழுமிடம்

இஸ்லாமின்றிய, ஏனைய மதத்தினர்பலரும் தங்கள் வணக்க ஸ்தலத்திற்காக நான்கு சுவர்களுள்ள ஒரு கட்டிடத்தை அமைத்து வைத்துக்கொண்டுள்ளனர். யூதர்கள் தங்கள் கோவிலையும், பலி கொடுக்கும் இடத்தையுந் தவிர வேறு எவ்விடத்திலும் இறைவனை இறை ஞ்சமுடியாது. கிறிஸ்துவர்களோ தங்கள் மாதா கோவிலுக்கு வெளியில் இறைவனை வணங்கமாட்டார்கள். விக்கிரஹ ஆராதனைக் காரர்களும் தங்கள் தேவாலயத்திலேயே தங் கள் தேவதைகளை சந்தோஷப்படுத்தும் வழக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

ஆனல், அகில உலக மதமாகிய இஸ்லாத்தின் நாயகனே, மண்ணலும், கல்லாலும், சுண்ணம்பாலும், (தற்காலத்தில்) இருப்புத் தூண்களாலும் இயற்றப்பெற்ற கட்டிடங்கட்குள் கட்டுப்பட்டிருக்கவில்லை. அவன் சர்வ வியாபி. எந்த இடத்திலிருந்தும் அவனை வணங்கலாம். மலை, மடு, காடு, வனந்திரம், மஸ்ஜிது ஆகிய எந்தஇடத்திலும் அவனுக்கு "ஸஜ்தா"ச் செய்யலாம். "உலகம் முழுவதையும் இறைவன் எனக்கு ஸஜ்தாச் செய்யுமிடமாக அமைத்து இருக்கிருன்" என நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளி இருக்கின்றார்கள். இவ்விடயம் மேல் பார்வைக்கு மிகச் சாமான்யமானதாகத் தோன்றியபோதிலும், அதற்குள் இஸ்லாம்மதம் அகில உலகமதமாக இருக்கிறது என்பதும், இதுதான் இறுதி மதம் என்பதுமான உண்மை நுட்பங்கள் மறைந்திருக்கின்றன.

அதிகமான உம்மத்துகள்.

லக்ஷக் கணக்கான நபிமார்கள் இவ்வுலகில் தோன்றி இருக்கின்றனர். ஆயினும், இவ்வுலகில் அவர்களின் போதனையைப்பற்றிய ஞாபகார்த்தம் ஒன்றுகூட தற்போதில்லை. சரித்திரங்களிற் கூட அவர்களில் பெரும் பான்மையோரின் நாமதேயங்களைக் காண முடியவில்லை. ஆனல் சிலருடைய சரித்திரம் மட்டும் இப்பொழுது அறியப்படுகிறது. எனினும், அவர்களின் அழைப்பிற்கிணங்கி அவர்களைப் பின்பற்றியவர் எத்துணைப்பேர்கள் என்பதைக் கணித்துப் பார்ப்பின் அது மிக மிகச் சொற்பமாகவே இருக்கும். ஹஜ்றத் நூஹ் (அலை) முதல் ஹஜ்றத் ஈஸா (அலை) ஈருகவுள்ள நபிமார்களில் ஒவ்வொருவராக எடுத்துக் கணக்கிட்டுப் பார்ப்போமாயின் ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களைத் தவிர மற்றவர்களைப் பின்பற்றியவர்கள் நூறுபேர்கள் வரை இருந்ததாகக்கூடத் தெரியவராது.

ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களின் அபார முயற்சியால் அவர்களைப் பின்பற்றிய சில ஆயிரம் பனூ இஸ்ருயில்களும் அடி அடித்தொறும் வழுவலிலேயே இருந்திருக்கின்றனர். அவர்கள் சில சமயங்களில் காளைக் கன்றை வணங்கியும், சிலசமயங்களில் இறைவனைத் தங்கள் புறக்கண்ணல் நேரில் பார்க்க வேண்டு மென்ற பிடிவாத குணத்திலும், உயிர் தியாகம் செய்து யுத்தம் புரியவேண்டிய அவசியமேற்படுங்கால் பீதியடைந்து யுத்தகளஞ்செல்ல மறுத்து "நீரும் உமதுறப்பும் யுத்தஞ் செய்யுங்கள்" என்று சொல்லிக் கொண்டும் இருந்திருந் திருக்கிருர்கள். ஆகவே சில ஆயிரஞ் சனங்களைக் கொண்ட அந்த பனூஇஸ்ராயீல்களில் இறுதிவரை ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களைப் பின்பற்றி ஸ்திரமாக இருந்தவர்கள் மிக மிகச் சிலரேயாகும்.

ஹஜ்ரத்ஈஸா (அலை) அவர்களின் அற்புத சக்தியின் பயனுக மிகமிகச் சிலரே அவர்களை இறுதிவரை பின்பற்றி இருந்திருக்கிருர்கள் என்பது விவிலிய நூல் களிலிருந்தே தெரிய வருகிறது. ஆதலின் இதுசம்பந்தமாக இவ்விடத்தில் வேறு ஆதாரங் காட்டவேண்டிய அவசியமே இல்லை.

ஆனல் நமது வள்ளல் இரஸூல் (ஸல்) அவர்களின் நிலைமையோ அவ்வாறன்று. தங்களுக்கு நபித்துவம் வந்த ஆரம்பகாலத்தில் மக்கமாநகரின் வீதிகளில் துணைவரில்லாமல், உதவியாளரில்லாமல் தன்னந்தனியே இறைவனின் ஏகத்துவத்தை எடுத்தோதிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் இக் கூப்பாட்டிற்கு மக்காவின் பொது ஜனங்களில் ஒருவர் கூட விடைகூறவில்லை. ஆயினும் நபித்துவம் வந்து 23 வருஷங்கள் பூர்த்தியாவதற்குள் மணல்வெளியான அவ் அறபு தேசம் முழுவதிலும் எங்கும் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற்றஸூலுல்லாஹ் என்ற சப்தம் வானத்தையும் பிளக்கலாயிற்று.

பின்பு நாயகமவர்கள் "ஹஜ்ஜத்துல்விதாஃ"உக்காக அதே மக்கமா நகருக்குச்செல்வதாக விளம்பரம் செய்த காலத்து, மக்கமா நகரின் மைதானத்தில் நாயகமவர்களைச் சுற்றி ஏறக்குறைய ஒன்றரை லக்ஷம் தியாகிகள் குழுமி நின்றனர். இதைப்பார்த்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "என்னுடைய நுபுவத்தின் உண்மையை ஒப்புக் கொண்டதுபோல் வேறெந்த நபிமார்களின் நுபுவத்தையும் பொதுஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. சில நபிமார்களுக்கு அவர்களை உண்மையாளர் என்று சொல்ல அவர்தம் சமூகத்தில் ஒரே ஒருவர் தானிருந்திருக்கிருர்" என்று நாயகமவர்கள் கூறியிருக்கிருர்கள்.

ஒருதரம் நபிகள் நாயகமவர்கள் கூறியதாவது 'எனக்கு எல்லா நபிமார்களின் உம்

மத்துகளும் எடுத்துக் காண்பிக்கப்பட்டார்கள். சில நபிமார்களுக்குப்பின் இரண்டொருவர் மாத்திரமே இருந்தனர். சில நபிமார்கள் அவர்கள் மாத்திரமே தனிமையாகத் தோன்றினர். இதற்குள்ளாக ஒரு பெருங்கூட்டத்தினர் தோன்றினர். இவர்கள் என்னுடைய உம்மத்துகளாக இருக்கலாம் என்ற எண்ணமுண்டாயிற்று. ஆனல் அவர்கள் மூஸா (அலை) அவர்களின் உம்மத்துகள் என்று அறிவிக்கப் பட்டது. பின்பு வேறுபக்கம் பார்க்கும்படி எனக்குக் கூறப்பட்டது. இதைப்பார்க்கிலும் மிகப் பெருங்கூட்டம் தோன்றிற்று. பின்பு மறுபக்கம் பார்க்கும்படி கூறப்பட்டது. அவ்வாறு பார்த்ததில் அங்கும் ஏராளமான கூட்டங்கள் தோன்றின. அப்பொழுது இவர்கள் யாவரும் தங்களுடைய உம்மத்துகள் என்று அறிவிக்கப் பட்டது.'' என நாயகமவர்கள் கூறி இருக்கின்றார்கள். இந்த ஹதீது ஸஹீஹைனி (புகாரி முஸ்லிம்) யில் எழுதப்பட்டுள்ளது. ஆகவே எல்லா நபிமார்களைப் பார்க்கிலும் நாயக மவர்களின் உம்மத்துகள் அதிகமாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை மேற்கண்ட விவரங்களால் நன்கு அறியலாம்.

உலக நபி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உம்மத்துகள் ஏராளமாக இருப்பதற்கு மற்றொரு காரணம் யாதெனில், நாயகமவர்களுக்கு முன்வந்த நபிமார்கள் யாவரும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினர் அல்லது தேசத்தினருக்கு நேர்வழி காட்டவே வந்தனர். அவர்கள் ஆண்டவனளவில் அழைத்த அழைப்புகள் மானிடவர்க்கத்தினர் யாவருக்கும் பொதுவானதாக இருக்கவில்லை. ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள்கூட தவரிப்போன ஆட்டு மந்தையை மேய்ப்பவர் என்றே தங்களைக் கூறிக்கொண்டார்கள். அதாவது மூசா(அலை) அவர்களின் போதனையை விட்டகன்று சென்ற பனூஇஸ்ருயீல் களுக்கு மாத்திரம் நபியாக வந்ததாய் அறிவித்திருக்கின்றார்கள் இவ்விஷயம் விவிலிய நூலிலும் விபரமாகக் கூறப் பட்டிருக்கிறது. அவ்வாறிருந்தும் கிறிஸ்துவர் எனக்கூறிக் கொள்வோர் உலக முழுவதும் நாடுநாடாக அலைந்து பணத்தை வாரி இறைத்து கிறிஸ்துவ மதத்தைப் பிரசாரம் செய்துவருகின்றனர். ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் இத்தகைய பிரசாரம் செய்யும் படி கட்டளை யிட்டதாகவும் தெரியவில்லை. ஆகவே அவர்கள் கிறிஸ்துவ மதப் பிரசாரம் செய்வதானது அவர்கள் மத சம்மந்தமானதாகத் தோன்றவில்லை.

ஆனல், நமது நபிகள்பிரான் (ஸல்) அவர்களோ குறிப்பிட்ட ஒரு சமுகத்தினருக்கு மாத்திரமோ அல்லது ஒரு தேசத்தினருக்கு மாத்திரமோ நபியாக எழுந்தருளவில்லை. உலகம் முழுதுமுள்ள எல்லா சமூகத்தினருக்கும், எல்லா வர்ணத்தவருக்கும், எல்லா வகுப்பினருக்குமே நபியாக அனுப்பப்பட்டார்கள். ஆகவே, அவர்களைப் போற்றும் விஷயத்தில், அவர்களைப் பின்பற்றும் விஷயத்தில், அவர்களின் அழைப்புக்குச் செவி சாய்க்கும் விஷயத்தில் இந்தியர், ஆப்பிரிக்கர், சீனர், ஐரோப்பியர், அமெரிக்கர், நீக்ரோ ஜாதியர், அராபியர், அஜமியர் என்ற பாகுபாடின்றி யாவரும் சம உரிமை பெற்றவர்களாகவே இருக்கின்றனர். இதற்கு ஆதாரமாக இஸ்லாமிய மத சம்பந்தமான நூல்கள் வேண்டியதில்லை. நபிமார்களின் சரித்திரங்களே போதுமானதாக இருக்கின்றன. நாயகம் (ஸல்) அவர்களைத் தவிரவுள்ள எந்த நபியின் சரித்திரத்தை எடுத்துப் பார்த்தாலும் அந்த நபியவர்களின் முயற்சியும் அழைப்பும் அவர்களின் வாணுள் முழுதினும் அவர்கள் சம்பந்தப்பட்ட கூட்டத்தினரிடம் மாத்திரமே இருக்கும். அதற்கப்பாலுள்ள எவரேனும் அந்த நபியைப் பின்பற்றியதாகவோ அல்லது அந்த நபியவர்கள் ஏனையர்களை அழைத்ததாகவோ காணக் கிடைக்காது. ஆயின் நமது நபி பெருமான் (ஸல்) அவர்களின் ஜீவிய சரித்திரத்தைப் படிக்குங்கால் அறபியர்கள்மாத்திரமின்றி, ஸல்மான்பார்ஸீ (றலி) போன்ற பாரசீகரும், ஸுஹைப் றூமீ (றலி) போன்ற உரோமரும், பிலால் ஹபஷீ (றலி) போன்ற நீக்ரோவரும் இஸ்லாத்தைத் தழுவி நாயகமவர்களின் ஸஹாபியாகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்பது தெரியவரும்.

இவைகளை யல்லாமல் நபிகள்நாயகம் (ஸல்) அவர்கள் அறபி தேசத்தினரிடம் மாத்திரமல்லாமல் அந்நிய தேசத்தினரையும் இஸ்லாமின் பக்கல் அழைத்திருக்கிறார்கள். ஹுதைபிய்யா உடன்படிக்கை நடந்தபின் நாயகமவர்களுக்குக் கிடைத்த சாவகாச வேலையை

அவர்கள் அகில உலகமத அழைப்புக்குச் சாதகமாக உபயோகித்து உரோமச் சக்கிரவர்த்தியாகிய ஹிர்க்கல் என்ன, பாரசீக மன்னரான கிஸ்றாவென்ன, அபிஸீனிய நாட்டரசரென்ன, எகிப்தின் அதிபதியென்ன, இவர்கள் போன்ற எல்லா அரசர்களுக்கும் தூது அனுப்பியும் கடிதம் எழுதியும் இஸ்லாமியப் பிரசாரத்தை நடத்தி இருக்கின்றார்கள். இப்பிரசாரத்தில் நாயகமவர்களின் அழைப்பை ஏற்று இஸ்லாத்தைத் தழுவியவர்கள் பலர். நாயகமவர்களின் நுபுவ்வத்தின் உண்மையை உணர்ந்து அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு, அரசாங்கம் போய்விடுமோ என்றஞ்சி இஸ்லாத்தைத் தழுவாமலிருந்தவர்களும் சிலர். அழைப்பை வெறுத்து இஸ்லாத்தின்பால் துவேஷங் கொண்டவரும் இரண்டொருவர். இவ்விவரங்கள் யாவும் நாயக சரித்திரத்தில் (நபிகள் திலகம் என்ற நூலில்) விரிவாகக் காணலாம். ஆகவே நாயகமவர்கள் அகில உலகத்திற்கும் பொதுவாக வந்த நபியென்பதில் எட்டுணையும் ஐயமின்று. ஆயினும் அவர்களைப் பின்பற்றியவர்களாகிய நாம் இதுகாலை, நாயகமவர்களைப் பற்றி உலகத்திற்கு அறிவிக்கவும், அவர்களின் அருந்தொண்டாகிய இஸ்லாமிய ஊழியத்தைக் கவனிக்கவும் செய்யாமல் நம் சுயநலனையே கண்ணுங் கருத்துமாகப் பார்ப்பதில் கவலை கொண்டுளோம். நமக்கு முன்னுள்ள நமது முன்னோர்களோ தங்களது சுய வேலையைப் பார்க்கிலும் அகில உலகத் தொண்டாகிய இஸ்லாமிய ஊழியத்தை தலைமையாகக் கவனித்து வந்தமையால் உலகில் சிறந்தவர்களாகவும் பெரியவர்களாகவும் விளங்கி வந்தனர். அவர்களின் இம்மை மறுமைக் காரியங்கள் ஏற்றமாக இருந்தன. நாம் நமது கடமையைச் செய்யத்தவறியதன் பலனைத்தற்சமயம் அனுபவித்து வருகிறோமாயினும், இதிலிருந்தும் நமக்குப் படிப்பினை ஏற்படாதது வருந்தத்தக்க விஷயமாகும். இறைவன் தான் நமக்கு நேரான வழியைக்காட்டி நம்மைச் சீராக நடத்தி அவனுக்குப் பொருத்தமான அகில உலகத் தொண்டாற்ற அருள்புரியவேண்டும்.

ஜவாமிஉல் கலிம்

(சொற்சுருக்கம் பொருள் விரிவு)

நபிமார்களுக்கு இறைவனா லருளப்பெற்ற வேதாகமங்கள் பல மறைந்துவிட்டாலும், அவைகளின் பெயரால் இன்னுங் கூடச் சில இருந்துவருகின்றன. அவைகளை நோக்குமிடத்து அவைகளில் ஒன்றாகிலும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யப் போதுமானவைகளாகக் காணப்படவில்லை.

‘தௌறாத்’’ வேதமோ சமூகத்தவர்களின் சரித்திரங்களையும் சட்ட திட்டங்களையும் மாத்திரம் கொண்டதாக இருக்கின்றது. ஏக தெய்வக் கொள்கை, நபித்துவம் ஆகியவைகளைத் தவிர்த்து அவைகளுக்கு அனுசரணையான இதர கொள்கையும், குர்பானியைத் தவிர அதற்கு வேண்டிய இதர விதிவிலக்கு விபரங்களையுங் கூறாமல் மௌனஞ் சாதிக்கிறது.

“ஜபூர்’’ வேதமோ பிரார்த்தனைகளாகவும் வேண்டுதல்களாகவும் விண்ணப்பமாகவுமே நிறைந்திருக்கிறது இவைகளைத் தவிர வேறொன்றும் அதில் விளக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. அய்யூப் (அலை) அவர்களின் பிரயாண விபரத்தில் விதிசம்பந்தமான சிலகொள்கைகள் போதிக்கப்பட்டிருக்கின்றன. சுலைமான் (அலை) அவர்களின் உதாரணங்களிலோ உபதேசங்களும்கட்டளைகளு மாத்திரமே கூறப்பட்டிருக்கின்றன.

பனீஇஸ்றாயீல்களிலுள்ள இதர நபிமார்களின் ஆகமங்களில் பாவமன்னிப்புக் கேட்டலும், கருணையும், முன்னறிவிப்புமே நிறைந்திருக்கின்றன.

‘‘இஞ்சீல்’’ வேதத்திலோ ஹஜ்றத் மஸீஹ் ஈஸா (அலை) அவர்களின் அருந்தொண்டுகளும் ஒழுக்க போதனைகளுமே இருக்கின்றன.

ஆனால், நமது நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு வெளியாக்கப்பெற்ற வேதமாகிய திரு குர்ஆனிலோ மேற்கூறப்பெற்ற எல்லா விஷயங்களும் ஒருங்கே அமைந்திருக்கின்றன. இதற்குத்தான் நாயக மவர்களுக்கு “ஜவாமிஉல்கலிம்’’ என்ற விசேஷப் பேறு கிடைத்தது. இவ் வேதத்திலோ தௌராத்தையுங் காணலாம், ஜபூரையும் பார்க்கலாம். இஜ்ஜீலையும் பெற்றுக் கொள்ளலாம். இவைகளல்லாமல் இன்னும் அதிகமான விபரங்களையும் தெரிந்து கொள்ளலாம். இவ்வேதத்திலோ ஜனசமூகத்தின் சரித்திரமுமிருக்கிறது, ஒழுக்கமுமுண்டு, உபதேசமுமுண்டு, பிரார்த்தனைகளுமுண்டு, விண்ணப்பங்களுமுண்டு

பரிபூரணமான மதத்திற்குவேண்டியஎல்லாக் கொள்கைகளும் உண்டு. வணக்கத்திற் குரிய எல்லா விபரமும் விளக்கப்பட்டிருக்கிறது. கொடுக்கல், வாங்கல் போன்ற சகல வியவகாரத்திற் குரிய விவரங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, குர்ஆனில் கூறப்படாமல் விடப்பட்ட விஷய மொன்றுமில்லை ஆகவே, அவ் வொருவேதமே மக்களுக்கு வேண்டிய சகல தேவைகளையும் பூர்த்திசெய்யப் போதுமானதாக இருக்கிறது. ஆதலால் தான் முஸ்லிம்கள் எங்களுக்கு அவ் வேதம் ஒன்றே போதுமானது எனக்கூறும் பெருமையை அடைந்தவர்களா யிருக்கின்றனர்.

திரு குர்ஆன் தான் "ஜவாமிஉல்கலிமா"க இருக்கிறது. அதிலுள்ள ஒரு திருவசனத்திலிருந்து வேதவியாக்யானிகள் நூற்றுக்கணக்கான விஷயங்களை எடுத் தோதுகின்றனர். அதன் ஒவ்வொருபதத்திலிருந்தும்வேதாந்திகளும் சட்ட நிபுணர்களும் எண்ணிறந்த விஷயங்களை விளக்குகின்றனர். ஆத்ம ஞானிகளும் அநேக அபூர்வமான ஞானரத்தினங்களை அத் திருவசனத்திலிருந்தே கண்டுபிடித்தெடுக்கின்றனர், அவ்வாறிருந்தும் திரு குர்ஆனுக்குள் அமைந்திருக்கும் அபூர்வ விஷயங்கள் இன்னும் முற்றுப் பெறவில்லை. கலை ஞானிகள் இன்னும் எத்தனையோ விஷயங்களையும் நுட்பங்களையும் எடுத்தறிவித்துக் கொண்டே இருக்கின்றனர். இத்தகைய பெரும்பேறு வேறெந்த நபிக்கும் இவ்வவனியில் இருப்பதாகத் தெரியவில்லை.

மதப்பூர்த்தியாளர்

இஸ்லாம் மதத்தின் வேதமும், நாயகமவர்களுக்கு இறைவனுலருளப் பெற்றதுமான, திருகுர்ஆன் " ஜவாமிஉல் கலிமா "க இருப்பதால் அவ்வேதம் எந்த மதத்தைப் போதிக்கிறதோ அம்மதமே பூர்த்தியானது என்பது தானே விளங்கும். இதைத்தான் இறைவனும் "இன்று நான் உங்களுக்கு உங்கள் மதத்தைப் பூர்த்தி செய்தேன்" எனக் கூறியுள்ளான்.

குர்ஆன் ஷரிப் கூறுவதற் கேற்ப, இஸ்லாம் மதமானது அந்தந்தக் காலத்தில் தோன்றிய ஒவ்வொரு நபிமார்களும் காட்டியதும், அவர்கள் ஒவ்வொருவரிட மிருந்து அபிவிருத்தி யடைந்ததுமான மதமாகும். இறுதியாக அம்மதமானது நபிகள் நாயமவர்களால் பூர்த்தியடைந்தது. இவ்வாறு பரிபூரண நிலைமைக்குக்கொண்டு வரும் பாக்கியம் எம்பெருமானர் நாயகம் (ஸல்) அவர்களுக்கே கிடைத்திருக்கிறது. இவ் விவரத்தை நாயகமவர்களே ஒரு உதாரணத்தால் விளக்கி இருக்கிருர்கள். அவ்வுதாரணம் வருமாறு:—

எனக்கும் இதர நபிமார்களுக்கும் உதாரணம் யாதெனில், " ஒரு மனிதன் ஒரு வீட்டைக் கட்டினன். ஜனங்களெல்லாம் அதைச் சென்று பார்த்துத் திரும்பி வருகின்றனர். ஆனல் அவர்கள் யாவரும் அவ் வீட்டில் ஒரு செங்கல் வைப்பதற்கு இடம் காலியாக இருப்பதைக் காண்கின்றனர். அத்தகைய கடைசிச் செங்கல்தான் நானுகும்."

அதாவது கட்டிடம் என்பது மதமும், நுபுவ்வத்துமாகும். அதிலுள்ள ஒவ்வொரு செங்கலானது ஒவ்வொரு நபிமார்களையும் அவர்கள் காட்டிய மதத்தையும் குறிக்கும். ஆகவே, அம்மதத்தைப் பூர்த்தி செய்வதும், கடைசி நபியுமாக இருப்பதும் நமது நாயகம் (ஸல்) அவர்களேயாவர். ஆகவே, இதிலிருந்து இனிமேல் வேறு வேதமோ வேறு நபியோ இல்லை என்பது மலையிலக்காம்.

நித்திய அற்புதம்

பற்பல நபிமார்களின் மூலமாகவும் இவ்வுலகில் தோன்றிய மதங்கள் குறிப்பிட்ட சிலகாலத்திற்காகவே இருந்தன. ஆதலின், அம்மதங்கள் உண்மையானவை. அம்மதங்களைக் கொண்டு வந்த நபிமார்கள் ஆண்டவனின் தூதர்களே என்ற விஷயத்திற்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட அற்புத நிகழ்ச்சிகளும் குறிப்பிட்ட அக்காலவரம்பில் தான் இருக்கவேண்டியதாக இருந்தன. ஆதலால் தான் முன்னுள்ள நபிமார்களுக்கு இறைவனுலருளப் பெற்றிருந்த அற்புதங்கள் இப்பொழுது இல்லாமற் போயின. மூஸா (அலை) அவர்களின் அஸாவும், தாவூத் (அலை) அவர்களின் சங்கீத தொனியும், யூஸுப் (அலை) அவர்களின் சொற்பன தார்ப்பரியமும், ஹூத் (அலை) அவர்களின் ஒட்டகமும் இக்காலத்திலில்லை.

ஆனல், நமது நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக வந்த மதமோ இறுதிநாள் வரையுள்ளதாகவும் பரிபூரணமான தாகவுமிருப்பதால், அந்த இறுதி நாள்வரை அம்மதத்தின்

உண்மையை உலகத்தாருக்கு எடுத்தறிவிப்பான்வேண்டி ஆண்டவன் நித்திய அற்புதத்தை நாயகமவர்களுக்கு அளித்திருக்கின்றான். அவ்வற்புதமானது நாயகமவர்கள் காலந்தொட்டு இன்றைவரை இருந்து வருவதோடு, உலக மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையை எடுத்தறிவித்துக் கொண்டும் திகழ்கின்றது இனி மேலும் இறுதிநாள் வரை அவ்வாறே எடுத்தறிவித் திலங்கும். அத்தகைய நித்திய அற்புதமானது இஸ்லாத்தின் திருவேதமாகிய குர்ஆன் மஜிதேயாகும். ஏனைய நபிமார்களுக்கு அளிக்கப் பெற்ற வேதங்கள் இறைவனலருளப் பெற்றவை என்பதிற் சந்தேகமில்லையாயினும், இவ்வேதத்தில் சிறப்புத் தன்மையாக இருக்கிற நித்திய அற்புத சக்தியானது அவ்வேதங்களிலில்லை. அதனுற்றான் அவ் வேதங்கள் மக்களால் புரட்டப்பட்டும், திருத்தப்பட்டும், சிதைவுண்டும் போயின. திரு குர்ஆனே நித்திய அற்புதமாக விளங்குவதால், அத்தகைய சிதைவுக்கு இடமில்லாமல் இறைவனல் காப்பாற்றப் பெற்று வருகின்றது. ஆகவே, வேதங்களில் எத்தகைய மாற்றமோ, திருத்தமோ இல்லாமல், ஆதியில் எவ்வாறு அருளப் பெற்றதோ, அவ்வாறே இற்றை நாள் வரை யிலங்கி வரும் வேதம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப் பெற்ற திரு குர்ஆன் ஒன்றைத் தவிர வேறொன்றும் இக்காசினியிலின்றாம்.

நாயக நல்லொழுக்க நிகழ்ச்சிகள்.

நபியே! (இஸ்லாமிய ஊழியங்களிலும்மற்ற முக்கிய காரியங்களிலிருந்தும்) நீர் சாவகாசம் பெற்றால் (இறைவனை வணங்குவதற்காக) நிற்பீராக. இன்னும் உம்முடைய றப்பினளவில் (மனதைத்) திருப்புவீராக— "திருகுர்ஆன்."

இத்திருவசனத்தின் மூலம் இறைவன் தனது திரு நபியவர்களுக்கு தன்னை வணங்குவதைப் பற்றி அறிவித்திருக்கிறான். ஆகவே இவ்வியாசத்தில் நபிகள் நாதர் அவர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின்றும் அவர்கள் தம் தெய்வ வழிபாட்டைப் பற்றிச் சிறிது விளக்குவாம்.

மக்களுக்கு நேர்வழி காட்டவந்த நபிமார்களில் நமது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களைத் தவிர ஏனைய நபிமார்களின் வணக்கம் எவ்வாறிருந்தது, அவர்கள் வணக்கத்திற்காக எந்தெந்த நேரங்களை ஒதுக்கி வைத்திருந்தனர் என்பன நன்கு தெரியவில்லை. நம்முடைய திருகுர்ஆனில் சில நபிமார்களின் வணக்கங்களைப் பற்றிப் பொதுவாகக் கூறப்பட்டிருப்பினும், நமது கிறிஸ்துவ நண்பர்கள் கையில் இருக்கிற பைபிள் என்ற நூலின்கண் முற்காலத்தைய நபிமார்களின் வணக்கங்களைப் பற்றிக் கொஞ்சமும் விவரித்திருக்கிறதாகக் காண்கிலோம். இஞ்சீல் வேதத்தில் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள்சிலசமயங்களில்துஆச்செய்து கொண்டிருந்தார்கள் என்ற விபரம் மாத்திரம் காணப்படுகிறது. உலகம் முழுவதையுமே கிறிஸ்துவ மயமாக்கவேண்டுமென்று வீண் முயற்சி செய்து பணத்தை விரயஞ் செய்யுங் கிறிஸ்துவ நண்பர்கள் தாங்கள் போற்றும் நபிமார்களின் தெய்வ வழிப்பாடு, தெய்வ வணக்கம் ஆகியவைகளைக்கூட விபரமாக எழுதாமல் விட்டுவைத்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அவர் என் செய்வர்? சரித்திரச் சான்றுகள் கிடைக்கவில்லை! இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்களாகிய நம்முன்னோர் தங்களின் சந்ததியினரும், ஏனைய உலக மாந்தரும் தங்கள் வள்ளல் இரஸூலின் வழிப்பாட்டைத்தெரிந்து அதன்படி நடக்க முற்படுவான், நாயகமவர்களின் ஆரம்பமுதல் இறுதிவரை செய்து வந்த தெய்வ வழிப்பாட்டுடையவும், வணக்கத்தினுடையவும், அவைகள் நிறைவேற்றப் பெற்ற காலத்தினுடையவும் விபரத்தை ஒன்றுகூட விடாமல் எழுதிவைத்திருப்பது போற்றத்

தக்கதாகும். இத்தகைய அரும்பணிக்கு அல்லாஹு தஆலா அவர்களுக்கு நற்கூலியை அளிப்பானாக.

நபிகள் நாயகம்(ஸல்)அவர்கள் நபித்துவத்தைப் பெறுவதற்கு முன்னும் இறைவன் வணக்கத்தில் ஈடுபட்டிருந்தார்கள். "ஹிரு" என்ற மலைப்பொதும்பில் நாட் கணக்காகவும் மாதக் கணக்காகவும் தங்கித் தவமியற்றி வந்தார்கள். அவர்கள் தங்களுக்கு நபித்துவம் கிடைத்தவுடன் இறைவனை வணங்கித் தொழ வேண்டிய விபரமும் இறைவனால் "ஜிப்ரயீல்" (அலை) மூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், நபித்துவம் கிடைத்த ஆரம்பகாலத்தில் அவ்வணக்கத்தை அவர்களால் பகிரங்கமாகச்செய்ய முடியவில்லை. மறைவான இடத்திலேயே தொழுகையை நிறைவேற்றி வந்தார்கள். ஒருமுறை அவர்கள் ஹஜ்றத் அலீ (றலி)யைத் தம்முடன் அழைத்துக்கொண்டு ஒரு கணவாயில் சென்று தொழுதுகொண்டிருந்தார்கள். அதுசமயம் தற்செயலாக அலீ (றலி) அவர்களின் தகப்பனாரும் நாயகமவர்களின் சிறிய தந்தையருமாகிய அபூதாலிப் அவ்வழியே வந்து நாயகமவர்களும் தம் புதல்வரும் தொழுவதைக்கண்டு ஆச்சரியமடைந்து அதன் விபரத்தை கேட்க, நாயகமவர்கள், அவர்களுக்கு இஸ்லாத்தின் போதனையை அறிவித்தார்கள்.

குறைஷியர்கள் "ளுஹா" வுடைய (சுமார் பகல் 10 மணி) வேளையில் தொழுவது பழக்கமாதலால் நாயகமவர்கள் அந்த நேரத்துத் தொழுகையை ஹரம் ஷரீபிலேயே தொழுது வந்தார்கள் ஆனால், அவர்கள் தொழும் முறைக்கும் நாயகமவர்கள் தொழும் முறைக்கும் வித்தியாசமிருந்தது ஆதலின், குறைஷி தலைவர்கள் நாயகமவர்களின் தொழுகையை ஏளனம் புரிந்தனர். ஒருமுறை அபூஜஹ்ல் நாயகமவர்கள் தொழுவதைப்பார்த்து "ஹா! இந்தச்சமயம் எவரேனும் சென்று ஒட்டகத்தின் சாணத்தைக் கொண்டுவந்து தருவார்களாயின் முஹம்மது ஸஜ்தாச் செய்யும் போது அவர்மீது போடலாமே" எனக் கூறினான் இவனுடைய இவ்விருப்பத்தை "அக்பா" என்பவன் நிறைவேற்றித் தந்தனன். தொழும்போது நாயகமவர்கள் "கிரஅத்தை"ஓசையுடன் ஓதினார்களாயின் குறைஷித்தலைவர்கள் நாயகமவர்களை வசை கூறுவர்.

இராக்காலங்களில் நாயகமவர்கள் துயில் நீக்கித் தொழுவதுண்டு. இவ்விராவணக்க சம்பந்தமாகப் பல ஸஹாபிகளும் தங்கள் தங்களுக்குத் தெரிந்த வற்றைக் கூறி இருக்கிறார்கள்' நாயகமவர்கள் இரவு முழுதும் வணங்குவார்கள் எனஒரு விஷயமறிவிப்பவர் கூறியிருக்கின்றார். ஹஜ்ரத் உம்முல்மூமினீன் உம்முஸல்மா நாயகியவர்கள் " நபிகள் நாயகமவர்கள் சிறிது நேரம் தூங்கி எழுந்து தொழுவார்கள்; பின்னர் சிறிது தூங்குவார்கள்; பின்பு எழுந்திருப்பார்கள்; தொழுவார்கள். இவ்விதமாக ஸுப்ஹு வரைதொழுது கொண்டே இருப்பார்கள்" என்று கூறி இருக்கின்றார்கள். நபிகள் நாயகமவர்கள் நடுநிசிக்குப்பின் எழுந்து பதின்மூன்று ரக்அத்துத் தொழுவார்கள் என இப்னு அப்பாஸ் (றலி) ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள். ஒன்பது ரக்அத்துத் தொழுவார்கள் என்று ஆயிஷா நாயகி (றலி) அவர்கள் ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள். இவ்விதமான பற்பல ரிவாயத்துகளையும் பற்றி முஹத்திதுகள், நாயகமவர்கள் பலவிதமாகவும் தொழுதுவந்தார்கள் எனவும் பொதுவாகக் கடைசி காலத்தில் அவர்கள் ஹஜ்ரத் ஆயிஷா, (ரலி) இப்னு அப்பாஸ் (ரலி) ஆகியவர்களின் ரிவாயத்துப்படி செய்து வந்திருக்கிறார்கள் எனவும் விவரித்துக் கூறி இருக்கின்றார்கள்.

ஐந்து நேரத்து பர்லான (கடமையான) தொழுகையைஅல்லாமல் நாயகமவர்கள் அதிகப்படியாக 34 ரக்அத்துத் தொழுகையை தினம் செவ்வனே அநுசரித்திருக்கின்றார்கள் இத்தொழுகைகள் தாம் நமக்குத் தற்சயம் சுன்னத்தாகவும், வித்ராகவும், சுன்னத்துத் ஸவாயிதாகவும் தஹஜ்ஜத் தொழுகையாகவும் இருந்து வருகின்றன. இவைகளை அன்றி நாயகமவர்கள் ஸலாத்துல் அவ்வாபீன், தஹிய்யத்துல் மஸ்ஜிது என்றும் தொழுது வந்திருக்கின்றார்கள்.

றமலான் மாதத்தில் நாயகமவர்கள் இன்னும் அதிகமாக இறைவனை வணங்குவார்கள். "அவர்கள் இயற்கையிலேயே வள்ளலாகஇருந்தார்கள். அதிலும் றமலான் மாதம் பிறந்து, ஹஜ்றத் ஜிப்ரயீல் (அலை) குர்ஆன் ஓதுவிக்க வந்துவிட்டால்,நாயகமவர்களின் வள்ளற்றன்மைக்கு எல்லையே இருப்பதில்லை." என ஹஜ்றத் இப்னு அப்பாஸ் (றலி) ரிவாயத்துச்செய்திருக்கின்றார்கள். றமலான் மாதத்தின் கடை

சிப் பத்துத் தினங்களில் நாயகமவர்களின் தொழுகை மென்மேலும் அதிகரிக்கும். 'றமலான் மாதத்தின் கடைசிப் பத்துத் தினங்கள் வந்துவிட்டால் அவர்கள இரவு முற்றிலும் வணங்குவார்கள்; மனைவியரிடத்தில் சம்பந்தம் வைத்துக்கொள்ள மாட்டார்கள்; தொழுகைக்காக குடும்பத்தினர்களை எழுப்பிவிடுவார்கள்; இந்த கடைசிப் பத்தில் அவர்கள் "இஃதிகாபு"ம் இருப்பார்கள். அதாவது எல்லா நேரமும் மஸ்ஜிதிலேயே இருந்து நாயகனைத் தியானிப்பதிலும் துதிப்பதிலும் வணங்குவதிலும் ஈடு பட்டிருப்பார்கள்" என்று ஆயிஷா நாயகி ரிவாயத்துச் செய்திருக்கின்றார்கள்.

நாயகமவர்கள் நாடோறும் திரு குர்ஆனை ஓதுவார்கள். இஷாவுக்குப் பின் குர்ஆன் ஓதுவதற்கு நேரம் ஏற்படுத்தி வைத்திருந்ததாக "அபூதாவூத்" என்ற ஹதீது கிரந்தத்தின் ஒரு ரிவாயத்து அறிவிக்கின்றது. நாடோறும் இத்துணை அத்தியாயங்கள் ஓதுவதெனக் கணித்து அதற்கேற்ப ஓதி வந்தார்கள். றமலான் மாதத்தில் குர்ஆன் முழுதும் (அதாவது நாயகமவர்களுக்கு வெளியாக்கப்பட்டிருந்தவை களனைத்தையும்) ஓதி முடிப்பார்கள். கடைசியிரவில் எழுந்து திரு குர்ஆன் வசனங்களை ஓதுவார்கள்.

சில சமயங்களில் வீட்டு ஜனங்கள் துயில, நாயகமவர்கள் அரவமில்லாமல்அல்லாஹு தஆலாவை வணங்கிக் கொண்டிருப்பார்கள். இது சம்பந்தமாக ஹஜ்றத் உம்முல் மூமினீன் ஆயிஷா நாயகியவர்கள் கூறுமாறு:—

"ஓரிரவு என் கண்கள் விழித்துக் கொண்டன. படுக்கையில் நாயகம் (ஸல்)அவர்களைக் காணவில்லை. அவர்கள் வேறு மனைவியர்கள் வீட்டிற்குச் சென்றிருக்கலாமென நினைத்து இருட்டிலேயே என் கைகளினால் அங்குமிங்கும் தேடினேன். அப்பொழுது நாயகமவர்களின் பரிசுத்த நெற்றியானது நிலத்திலுற அவர்கள் ஸுஜூது செய்துகொண்டு இறைவனை இறைஞ்சிப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கக்கண்டேன். எனக்கு என்னுடைய எண்ணத்தின்பேரில் வருத்த மேற்பட்டது. "சுப்ஹானல்லாஹ்" நாம் எந்த எண்ணத்தின்பேரிலிருக்கிறோம். நாயகமவர்கள் எந்த நிலையிருக்கிறார்கள் என மனதுக்குள் கூறிக் கொண்டேன்"

சில சமயங்களில் நாயகமவர்கள் நள்ளிரவில் கப்றுஸ்தானுக்குச் சென்று அங்கு இறைவனை இறைஞ்சுவதிலும் பிரார்த்தனை புரிவதிலும் ஈடுபட்டிருப்பார்கள். ஒருமுறை நாயகமவர்கள் நள்ளிரவில் வெளியிற் செல்லவே ஹஜ்ரத் ஆயிஷா நாயகியும் அவர்களைப் பின்றொடர்ந்து மறைந்து மறைந்து சென்றார்கள். ஆனால் நாயகமவர்கள் ஜன்னத்துல் பக்கீஃக்குச் சென்று (இது மதீனாவிலுள்ள கப்றுஸ்தான்) பிரார்த்தனை செய்வதைக் கண்டு திரும்பி வந்தார்கள்.

நபிகள் நாயகமவர்கள் தொழுகை சம்பந்தமாக மாத்திரம் இவ்விதம் இருந்தார்கள் என்பதில்லை; நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத் ஸதக்கா ஆகிய எல்லா விஷயங்களிலும் அதிகப் பற்றுக்கொண்டு அபரிமிதமாகவே அவைகளை அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள்.

அவர்கள் அல்லாஹ்வின் தியானத்தில் அல்லும் பகலும் ஓயாமல் ஈடுபட்டிருந்தார்கள். ஹஜ்றத் ஆயிஷா நாயகி அவர்கள் "நபிகள் நாயகமவர்கள் ஒவ்வொரு க்ஷணத்திலும் இறைவனின் ஞாபகமாகவே இருப்பவர்கள் என்று கூறியுள்ளார்கள்,

உட்காருதல், எழுந்திருத்தல், நடத்தல், திரிதல், உண்ணுதல், பருகுதல், உறங்குதல் விழித்தல், உளுச் செய்தல், புதியஆடைகளை அணிதல், வாகனத்தி லாரோகணித்தல், பிரயாணஞ் செய்தல், வீடு திரும்பிவருதல், மஸ்ஜிதுக்குள் செல்லல், முதலிய ஒவ்வொரு நிலைமையிலும் நாயகமவர்களின் நாவும் இருதயமும் நாயனின் நாட்டத்திலேயே இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்சமாதான காலத்தில் தான் நாயனின் நாட்டத்திலிருந்தார்கள் என்றில்லை. யுத்தகளத்திலும் நாயனின் நாட்டத்தை மறந்தவர்களன்று. முஸ்லிம்களும் பகைவர்களும், ஒருவரை ஒருவர் எதிர்த்துக் கடும்போர் புரிந்துகொண்டிருப்பர். இரண்டுகக்ஷிகளிலிருந்தும் வீசப்படும் வாட்களின் ஒளியால் கண்கள்கூடப் பூத்துப்போம். எனினும் நாயகமவர்கள் இவைகள் ஒன்றையும் மதியாமல்தனித்து நின்று தெய்வ வழிப்பாட்டிலும் பிரார்த்தனையிலு மீடுபட்டிருப்பார்கள். சாமான்ய தளகர்த்தர்கள் இப்படிப்பட்ட சமயங்களில் தங்களின் சேனை வீரர்களின் வீரப்பிரதாபத்தைப் பார்த்துப் பூரிப்படைவர். இஸ்லாமிய சேனைகளின் தள

கர்த்தரான நாயக மவர்களோ இப்படிப் பட்ட சமயத்தும் அகம் என்ற பேய்க்குத் தங்களை இலக்காக்காமல் இறைவனின் வணக்கத்தில் தங்கள் நெற்றியைப் பூமியில் வைப்பதைப் பெருமையாகக் கருதுவார்கள்.

யுத்தகாலங்களில் தளகர்த்தர்கள் தங்களிடமுள்ள தளவாடங்களினுடையவும் சேனை வீரர்களினுடையவும் வீரப்பிரதாபத்தில் நம்பிக்கை வைத்திருப்பர். நாயகமவர்களோ அல்லாஹு தஆலா ஒருவனுடைய உதவியையும் அவனளிக்கும் பலத்தையுமே முற்றும் நம்பியிருப்பார்கள். "பத்று" யுத்தத்தில் பகைவர்களுடன் போர்மூண்டு படுகளம் நடந்துகொண்டிருக்கும்போது நாயகமவர்களின் சிரமானது நாயனின் வணக்கத்திலிருந்து நாவிலோ "நாயனே? இன்று இந்தச் சிறிய கூட்டத்தார் அழிந்துபோவார்களாயின் இறுதிநாள்வரை உன்னை வணங்குபவர்கள் இருக்கமாட்டார்கள்" என்ற பிரார்த்தனையின் தொனி வந்துகொண்டிருந்தது.

"பத்றி"ல் யுத்தம் நடந்துகொண்டிருந்தபோது ஹஜ்றத் அலீ (றலி) அவர்கள் மூன்று முறை நாயகமவர்கள்பால் வந்தார்கள். ஆனால், அம் மூன்றுமுறையும் அவர்கள் ஸுஜூதில் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கவே கண்டார்கள்,

"ஹுனைன்" சண்டையில் 12 ஆயிரம் வீரர்கள் நாயகமவர்களுட னிருந்தார்கள். முதல்தாக்கிலேயே இவ்வீரர்களின் வீரம் பறந்துவிட்டது. பின் வாங்கிச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள். இவ்வீரர்களின்பலத்தை நம்பிய சேனாதிபதியாக இருந்தால் சேனை வீரர்கள் சிதறுண்டதைக் கண்டதும் யாவருக்கும் முதலில் சேனாபதி தன்னைக்காப்பாற்ற முற்பட்டிருப்பர். பதினாயிரம் அம்பெய்வோர் நாயக மவர்களை எதிர்த்து முன்னேறிவர, நாயகமவர்களுடன் சில தியாகிகளைத் தவிர மற்றவர்யாவரும் பின்வாங்கிச் செல்ல, நாயகமவர்கள் நாயனின் பலத்தை நாடி சவாரியிலிருந்து இறங்கி "அனன் நபியு லாகதிப் அனப்னு அப்துல் முத்தலிபு" (நான் நபியாக இருக்கிறேன். இதில் பொய்யில்லை. நான் அப்துல் முத்தலிபுடைய சந்ததி என்ற வீரமொழிகளைக் கூறி இறைவனிடம் இறைஞ்சினார்கள். உடனே நிலைமை மாறிவிட்டது. ஓடிய சேனைகள் திரும்பின; போரில் வெற்றி கிடைத்தது. பதினாயிரம் அம்பெரியும் வீரர்களின் அம்புமாரியை துஆ என்ற கேடயத்தால் நபிமார்களைத் தவிர வேறு யாரே தடுப்பர்? இத்தகைய சந்தர்ப்பம் உஹுத், அஹ்ஸாபு, முதலிய யுத்தங்களிலும் நடந்திருக்கின்றது. அவைகளை நாயக மவர்களின் விரிவான சரித்திரத்தில் காண்க.

தெய்வ பயம்

நாயக மவர்கள் நபிமார்களுக்கு முத்திரையானவர்கள், அல்லாஹ்வின் ஹபீபு, அவன் திரு தூதர், நபிமார்களின் தலைவர், சிருஷ்டிகளில் மிக்கார். ஆயினும் ஆண்டவன்மீது அளவிலா அச்சம் கொண்டவர்கள். எனக்கு யாது நேரும் என்பதைப்பற்றி எனக்கு ஒன்றுந் தெரியாது' என்று அவர்கள் கூறுவார்கள். ஹஜ்றத் உதுமானுப்னு மதுஊன் எனும் ஸஹாபி வபாத்தானார்கள். நாயகமவர்கள் தஃஸியத்திற்காக (துக்கம் விசாரிக்க)ச் சென்றார்கள். ஜனாஸா வைக்கப்பட்டிருந்தது ஒரு பெண்பிள்ளை ஜனாஸாவைப் பார்த்து "இறைவன் உமக்குக் கிருபைசெய்தான் என்பதற்கு அவனே சாக்ஷி" எனக் கூற, நாயக மவர்கள் அப் பெண்பிள்ளையைப் பார்த்து "அஃது உமக்கு எப்படித் தெரிந்தது" எனக் கேட்டார்கள். அதற்கு அப்பெண் "இறைவன் அவருக்கு அருள் புரியாமல் வேறு யாருக்கு அருள் புரியப்போகின்றான்" எனக் கூறவே, நாயகமவர்கள் அதற்கு மறுமொழியாக "ஆம்! எனக்கும் கூட, அவருக்கு நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு. எனினும் நான் நபியாக இருந்தாலும் என்மீது என்ன சம்பவிக்கும் என்பதே எனக்குத் தெரியாது" எனக் கூறினார்கள். காற்று பலமாக அடித்தால் நாயகம் (ஸல்) அவர்கள் உடனே கிப்லாவின் பக்கமாகத் திரும்பி "நாயனே! நீ அனுப்பிய மூஸீபத்தை விட்டு உன்னிடம் அபயந்தேடுகிறேன்" எனப் பிரார்த்திப்பார்கள்.

ஹஜரத் ஆயிஷா நாயகி அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களைப் பார்த்து தாங்கள் ஏன் இவ்வாறு சஞ்சலப்பட்டீர்கள் எனக் கேட்க, அதற்கு நாயகமவர்கள் "காற்று" எனக் கூறி, தம் அருமை மனைவியை நோக்கி "ஆயிஷாவே! உனக்கு என்ன தெரியும்? ஹூது (அலை) அவர்களின் உம்மத்துகளுக்கு நடந்த சம்பவம் வந்துவிடாதா? அவர்கள் மேகத்தைப் பார்த்ததும் இது நம்முடைய வெள்ளாண்மை

களுக்குத் தண்ணீர் புகட்டும் என நினைத்துக் கூறினர். ஆனால் அதுவோ அவர்களுக்கு இறைவனலனுப்பப்பட்ட வேதனையாக இருந்தது'' எனக் கூறினார்கள். ஹஜ்றத் அபூபக்கர் ஸித்தீக் (றலி) அவர்கள் நாயகமவர்களை நோக்கி "அல்லாஹ்வின் தூதரே! தங்களுக்கு நரை காணத் துவங்கி விட்டது'' எனக் கூறினார்கள். அதற்கு நாயகமவர்கள் "திரு குர்ஆனிலுள்ள ஸூறத்துஹூத், வாகிஆ, வல்முர்ஸலாத்து, அம்மயத்த ஸாலூன் ஆகிய அத்தியாயங்கள் என்னை நரைக்கச்செய்தன'' என்றார்கள். அதாவது இந்த அத்தியாயங்களில் கியாமத்து நாளைப்பற்றியும், அல்லாஹ்வின் ஆதரவைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் ஸஹாபிகளைப் பார்த்து "ஜனங்களே! நான் அறிந்திருக்கிறவைகளை நீங்களும் அறிந்திருப்பீர்களாகில் நீங்கள் குறைவாகச் சிரிப்பீர்கள இன்னும் அதிகமாக அழுவீர்கள்'' என்று கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நாயனின்மீதிருந்த பயத்தினால் பல சமயங்களில் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாய் ஓடுவதும், மனஉருக்கம் ஏற்படுவதுமுண்டு. அவர்கள் பெரும்பாலும் தொழுகையில் உருகிக் கண்ணீர் வடிப்பார்கள். ஒருமுறை அவர்கள் ஒரு ஜனாஸாவை நல்லடக்கம் செய்யும் காரியத்தில் கலந்துகொண்டார்கள். கப்று வெட்டப்பட்டுக் கொண்டிருந்தது. நாயகமவர்கள் அதன் ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்; மன இளக்கமேற்பட்டு கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடிப் பூமியையுங் கூட நனைத்தது. அப்பொழுது நாயகமவர்கள் அங்கிருந்தவர்களைப் பார்த்து "சகோதரர்களே! இத்தகைய நாளுக்காக வேண்டிய சாமக்கிரியைகளைத் தயார் செய்துவையுங்கள்'' எனக் கூறினார்கள்.

அல்லாஹ்வின்பாலுள்ள அன்பு

உலகத்திலுதித்த நபிமார்கள் இரு வகையினராகக் காணப்படுகின்றனர். ஹஜ்ரத் நூஹ், (அலை) ஹஜ்ரத் மூஸா (அலை) ஆகியவர்களைப்போல் எப்பொழுதும் அல்லாஹ்வுக்குப் பயப்படவேண்டு மென்பதைப்பற்றியே போதிக்கக் கூடியவர்கள் ஒரு சாரார். ஹஜ்ரத் யஹ்யா, (அலை) ஹஜ்ரத் ஈசா (அலை) ஆகியவர்களைப் போன்று அல்லாஹ்வின் பால் அன்பு பூண்டொழுகுவதையும் பக்தியையும் பற்றிப் போதிப்பவர்கள் மற்றொரு சாரார். இவ்விரு வகையினரும் தத்தம் போதனையில் அளவுக்கதிகமாக இருந்தார்கள். முற் கூறப்பட்டவர்களின் உம்மத்துகள் இக்லாஸ், முஹப்பத் என்ற பாதைக்கு வரவில்லை. பின்னால் கூறப்பட்டவர்களின் உம்மத்துகளில் அல்லாஹ்வை வணங்குதல், அவனைச் சங்கைப்படுத்துதல் ஆகியவைகள் குறைந்துவிட்டன. இவ்விரு தன்மைகளையும் கிறிஸ்துவர்கள் கையிலிருக்கிற விவிலிய நூலில் காணலாம். ஆனால் இஸ்லாம் மதமோ இவ்விரு தன்மைகளையும் ஒன்றுபோல் எடுத்துக் காட்ட விரும்புகின்றது. அதனால்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இவ்விரு தன்மைகளும் ஒன்றுபோல் காணப்படுகின்றன.

அவர்கள் இராக்காலங்களில் நெடுநேரம் வரை நின்று வணங்குவார்கள். அதனால் கால்களும் சுரந்து காணும். இதைக்கண்ட ஸஹாபிகளிற் சிலர் "நாயகமே! தங்களுடைய பாபங்களை அல்லாஹ் ஏற்கனவே மன்னித்துவிட்டான். தாங்கள் ஏன் இத்துணைக் கஷ்டம் எடுத்துக் கொள்ளவேண்டும்'' என வினவ, அதற்கு நாயகமவர்கள் "நான் நன்றியறிதலுள்ள அடியானாக இருக்க வேண்டாமா?'' எனக் கூறினார்கள். இவ்விவரம் "ஸஹீஹ் புகாரி''யில் எழுதப்பட்டிருக்கின்றது. அவர்கள் இவ்வாறு இறைவனை வணங்குவதெல்லாம் அவனுக்குப் பயந்தே எனச் சனங்கள் நினைத்துக்கொள்கிறார்கள். அவர்களோ பாபத்தைவிட்டுப் பரிசுத்தப்படுத்தப் பட்டவர்களாதலால் அவர்கள் இவ்வளவுதூரம் வணக்கத்தில் கஷ்டமெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. எனினும் அல்லாஹ்வுக்கு நன்றியுள்ள அடியானாக இருக்கவேண்டு மென்பதற்காகவே நாயகமவர்கள் அவ்வாறு வணங்கினார்கள் என ஸூபியாக்களும் கூறி இருக்கின்றனர். இதனால்தான் நாயகமவர்கள் "என் கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்க வல்லது தொழுகையிலுள்ளது'' எனக் கூறி இருக்கின்றார்கள்.

அல்லாஹு தஆலாவின் அன்பிற்குமுன், உலகத்தையும் உலகத்திலுள்ள மற்றெல்லா விஷயங்கள்மீதுள்ள அன்பினையும் நாயகமவர்கள் ஒரு தூசென மதித்தார்கள். அவர்கள்

மரணமடைவதற்கு ஐந்து தினங்களுக்குமுன் ஸஹாபிகள் நிறைந்த கூட்டத்தில் ஒரு பிரசங்கம் செய்தார்கள். அதில் அவர்கள் கூறியதாவது:—இறைவன் இப்ராஹீம் (அலை) அவர்களைத் தன்னுடைய நண்பராக ஆக்கியதுபோல் என்னையும் தன்னுடைய தோழனாகச் செய்து கொண்டான். ஆதலால் உங்களில் ஒருவர் எனக்கு நண்பராக இருப்பதைவிட்டு நான் நீங்கிக்கொள்கிறேன். எனினும், என்னுடைய உம்மத்துகளில் நான் ஒருவரை எனக்கு நண்பராக ஆக்கக்கூடுமாயின் அத்தகையவர் அபூபக்கரே'' எனக் கூறினார்கள்.

தவக்கல்

மனிதன் முயற்சி செய்யவேண்டும் ஆனால் அதன் பலனை அல்லாஹ்வின்பக்கமே சாட்டி விடவேண்டும். உலகத்தில்எத்தனையோநிகழ்ச்சிகள் நடைபெறும். ஆனால் அதன் முடிவு என்னுமென்பதை அல்லாஹ்வே அறிவான். அவைகளுக்குக் காரணமாக இருந்தவற்றை மனிதன் மறந்துவிடவேண்டும். ஒவ்வொரு காரியமும் அல்லாஹ்வின் அதிகாரத்தின்கீழ் இருக்கிறதெனக்கொள்ளவேண்டும். வெளித்தோற்றத்தில் காணப்படும் காரணங்கள் நமது நோக்கத்திற்கு மாறாகத்தோன்றலாம். ஆனால், அந்த மாறான காரணங்களெல்லாம் நமதுகாரியத்தில் ஒன்றையும் செய்துவிடாது என்றும், அதை முடித்துவைக்கும் சக்தி இந்தக் காரண காரியங்களுக்கெல்லாம் புறம்பே மறைந்திருக்கிறது என்றும் உறுதியாக நம்ப வேண்டும். இதற்குத்தான் ''தவக்கல்''எனப்படும். இந்த ஒரு தவக்கலிலேயே உறுதியும் விடாமுயற்சியும் ஊக்கமும், பயமின்மையும் மறைந்திருக்கிறது. இந்த தவக்கலின் காரணமாகவே மகா கஷ்டமான வேளைகளிலும் பொறுமை ஏற்படும். மிகவும் அபாயகரமான சமயத்து கோழைத்தனம், ஊக்கமின்மை ஆகியவைகள் மனிதனின் உள்ளத்தில் உதிக்காவாம்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒவ்வொரு எழுத்தாக ஊன்றிப் படித்துப் பாருங்கள். இவ் வானத்தின் கீழ் எழக்கூடிய எல்லாவிதத் துன்பங்களும் துயரங்களும் கஷ்டநஷ்டங்களும் நாயகமவர்களுக்குச் சம்பவித்திருக்கின்றனவென்பதை அறிவீர்கள் ஆனால், அவர்களின் திருவுளமானது எந்தச் சமயத்தும் மயக்கமடையவில்லை; வருந்தவில்லை; பதறவில்லை; அஞ்சவில்லை. மக்காவில் தனித்திருந்தகாலையினும், பகைவர்களின் இடர்கள் எழுந்த சமயத்தும், எதிரிகளின் போர் மூண்ட மைதானத்திலும் நாயகமவர்களின் தவக்கலும் நாயன் மீதுள்ள நம்பிக்கையுமே முதன்மையாக பிரகாசித்தன. அபூதாலிப் அவர்கள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி ''சகோதரரின் புத்திர ? இந்த வேலையை விட்டுவிடு'' எனக்கூறினார். அதற்கு நாயகமவர்கள் ''சிறியதந்தையாரே ! நான் தனித்திருக்கிறேன் என நினைத்துத் தாங்கள் இவ்வாறு கூறவேண்டாம். நியாயமும், சத்தியமும் நெடுங்காலம் தனித்திருக்காது. அரபியரும் அரபியல்லாதவரும் ஒருகாலத்தில் அந்த நியாயத்துடனேயே சேருவார்கள்என விடைகூறினார்கள். இஃதே போன்று மற்றொருக்கால் நாயகமவர்கள் '' என்னை இறைவன் தனித்துவிடமாட்டான் என்றார்கள். மக்காவில்கஷ்டப்பட்டு மனமிடிந்த ஒரு ஸஹாபியை நோக்கி நாயகமவர்கள் ''இறைவன்மீது சத்தியமாக இந்தமதம்பூரணமடையும் காலத்தில் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறொருவரின் பயம் முஸ்லிம்களுக்கு இருக்காது. அத்தகையகாலம் சீக்கிரம்வரும்'' எனக் கூறினார்கள்.

ஒருமுறை காபிர்களெல்லாம் ஹரத்தில் கூடி, நாயக மவர்கள் இவ்விடம் வந்தால் அவர்களைத் துண்டந்துண்ட மாக்கிவிட வேண்டுமெனச் சதியாலோசனை செய்து கொண்டிருந்தனர். இதை நாயகமவர்களின் செல்வப்புதல்வியாகிய ஹஜரத் பாத்திமா (றலி) அவர்கள் தெரிந்து நடுநடுங்கி நாயகமவர்களிடம் விஷயத்தை அறிவித்தார்கள், அப்பொழுது அவர்கள் தம் அருமைப்புதல்விக்கு ஆறுதல்கூறித் தண்ணீர்கொண்டுவரச் செய்து உளுச்செய்துகொண்டு நேராக ஹரம் ஷரீபுக்குச் சென்றார்கள். அங்கு சதிப்பேச்சுப் பேசிக்கொண்டிருந்த காபிர்கள் நாயகமவர்களைக் கண்டவுடன் தலை கவிழ்ந்து கலைந்து விட்டனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை ஹிஜ்றத் செய்து எந்த இரவில் பிரயாணமானார்களோ அதே இரவில் குறைஷி வீரர்கள் நாயகமவர்களின் உயிரை வாங்கும் எண்ணத்துடன் அவர்களின் முபாரக்கான இல்லத்தை முற்றுகை யிட்டுக் காவல்புரிந்து

கொண்டிருந்தனர். நாயகமவர்களோ கொஞ்சமும் மனம் பதராமல் பூரண மனச்சாந்தியுடன் தங்களின் அருமை மருமகரான அலீ முர்த்தஸா (ரலி) அவர்களைத் தமதுபடுக்கையில் படுக்கவைத்தார்கள். இந்தப் படுக்கைதான் கொலைபுரியஉத்தேசிக்கப்பெற்ற இடம் என்பதை நாயகமவர்கள் நன்கறிந்திருந்தார்கள். அத்துடன், கொலைக் கட்டிலை மலர்க்கட்டிலாக்கக் கூடியவன் சர்வசக்தனான அல்லாஹ் ஒருவன் உண்டு என்பதையும் மறந்திருக்கவில்லை. ஆதலால், ஹஜ்றத் அலீ (ரலி) அவர்களை மிகவும் சாவதானமாகத் தங்கள் படுக்கையில் படுத்திருக்க வைத்து "உங்களுக்கு எவ்விதக் கெடுதியையும்செய்ய அவர்களால் முடியாது" எனக் கூறி வெளியேறினார்கள்.

வீட்டைச் சுற்றி நாலுபக்கங்களிலும் பகைவர்களான குறைஷியர்கள் முற்றுகையிட்டிருந்தார்கள். பொழுது புலர்வதற்கு முன் நாயகமவர்கள் வெட்டப்பட்டு விடுவார்கள் எனப் பகைவர்கள் கருதிப் பொழுது புலர்வதை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்தனர். எனினும் நபிகள்நாதரவர்கள் அல்லாஹ்வின் உத்தரவின்மீது நம்பிக்கை வைத்து தங்களுக்கு மாறாக இருந்த அந் நிலைமையில் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். அது சமயம் 'யாஸீன்" என்ற அத்தியாயத்தின் ஆரம்ப திருவசனங்கள் நாயக மவர்களின் நாவில் ஓதப்பட்டுக்கொண்டிருந்தன. அந்த அத்தியாயங்களில் நபித்துவத்தினுடையவும், நாயக மவர்கள் நேரான பாதையின் மீதிருப்பதி னுடையவும் உண்மைகள் கூறப்பட்டிருந்தன. அது சமயம் நாயகமவர்கள் ஓதிய கடைசி ஆயத்தின் கருத்துரை யாதெனின் "நாம் அவர்களுக்கு முன்னும் பின்னும் சுவர்களை எழுப்பி இருக்கின்றோம். ஆகவே, அவர்கள் கண்களின்மீது திரை போட்டுவிட்டோம். ஆதலால் அவர்கள் உம்மையைப் பார்க்கமாட்டார்கள்" என்பதாம். இவ்வாயத்தின் கோட்பாடு உண்மையாகவே முடிந்தது. நாயகம்(ஸல்) அவர்கள் அப்பகைவர்கள் முன் பகிரங்கமாகவே வெளியேறி வந்தும் அவர்கள் நாயகமவர்களைப் பார்க்க முடியவில்லை.

இவ்விதமாக மக்காவைவிட்டு வெளியேறி வந்து "தௌர்" என்ற குகையில் ஹஜ்றத் அபூபக்கர் சித்தீக் (ரலி) நாயகம் (ஸல்) இருவர்களும் இருக்கும்போது பகைவர்கள் இவர்களைப் பிடிக்க பின்றொடர்ந்து வந்துவிட்டார்கள். இவர்கள் மிகவும் சமீபமாக வந்ததைக் கண்ட ஹஜ்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் நாயகமவர்களை நோக்கி, பகைவர்கள் சமீபித்து விட்டார்களே எனக் கூறி வருந்த, நாயகமவர்கள் அதற்கு மறுமொழியாக "பயப்பட வேண்டாம் நிச்சயமாக அல்லாஹ் நம்முடனிருக்கிறன்" என அமைதியோடு பதில் கூறினார்கள். இவ்வித நெருக்கடியான நிலைமையிலும் கலங்கா மனத்துடையவராக இருக்க, நபிமார்களைத் தவிரப் பிறரால் இயலுமோ?

இதற்குப் பின் குறைஷியர்கள் நபிகள்நாயகம் (ஸல்) அவர்களை உயிருடன் பிடித்தோ அல்லது அவர்களின் தலையையோ கொண்டு வருபவர்களுக்கு நூறு ஒட்டகம் பரிசளிப்பதாகப் பறைசாற்றியதற் கேற்ப, பரிசுபெறும் பொருட்டு நாயகமவர்களைப் பின்றொடர்ந்து வந்த "சுறாக்கத்துப்னுஜஃஸம்" என்பவன் சமீபித்து விட்டதைக் கண்டு ஹஜ்ரத்அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் பயந்து இங்கும் அங்கும் அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டே நாயகமவர்களுடன் சென்றார்கள். ஆனால், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ "ஸுறாக்கத்" என்பவன் எந்த நோக்கத்துடன் பின்றொடர்ந்து வருகிறன் என்பதைக் கவனிக்க ஒருமுறை கூடத் திரும்பிப் பார்த்தார்களல்லர். நபிகள் நாயகமவர்களின் இருதயத்தில் அப்பொழுது அல்லாஹ்வால் அருளப்பெற்றிருந்த அமைதியும், நாவில் திரு குர்ஆன் மொழிகளுமே நிலவி நின்றன. அவன் நபிகள் நாதர் (ஸல்) அவர்களைச் சிரச்சேதஞ் செய்ய உத்தேசித்து அம்பு எய்வதற்கு ஆயத்தமானன். ஆண்டவன் உதவி அங்கு என்ன செய்தது என்று நினைக்கின்றீர்கள்? அவன் ஏறிவந்த குதிரையின் கால்களைப் பூமி பிடித்துக்கொள்ளும்படி செய்தது! அக்கொலை பாதகனுக்கும் எம்பெருமானர் (ஸல்) அவர்கள் இறங்கி ஆண்டவனிடம் இறைஞ்சி குதிரைக் காலை பூமியை விட்டு விடுவிக்கச் செய்தார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனவை அடைந்த பின்னர் அவர்களுக்கு சமாதானம் கிடைத்திருந்தது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது. அங்கும் அவர்களுக்குப் போதிய சமாதானம் சாத்தியமாகவில்லை. மதீன

வில் அவர்களுக்கு உதவியாக முஹாஜிர்களை யும், அன்ஸாரிகளையும் கொண்ட ஒரு கூட்ட மிருந்ததாயினும் அவர்களுக்கு மக்காவி லிருந்த பகைவர்களைக் காட்டிலும் அதிக அபாயகரமான விரோதிகளைச் சமாளிக்க வேண்டியதேற்பட்டது. எவ்வாறெனின் மக் காவின் குறைஷியர்கள் நாயகமவர்களுக்கு விரோதிகளாக இருந்தாலும் உறவினர்களாக இருந்தனர். ரத்த சம்பந்த வாஞ்சை ஏற்பட இடமிருந்தது மதீனுவிலிருந்த பகைவர் களோ ரத்தக் கலப்பில்லாதவர்கள். பந்துக் களுமல்ல. ஆதலால் அவர்களுக்கு அவ்வாஞ் சை உண்டாகக் காரணமிருக்கவில்லை. இவை களல்லாமல் மதீனுவிலிருந்த முனபிக்குகளா கிய நயவஞ்சகர்கள் பக்கத்து குறைஷியர் களுடன் கூடிக்கொண்டு நாயகமவர்களுக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்து கொண்டிருந்தனர். ஆதலால், ஸஹாபிகள் நாயகமவர்களுக்குத் தங்கள் உயிரைக் கொ டுக்கவேண்டு மென்ற ஆர்வத்தால் அவர் களின் இல்லத்தை இராக் காலங்களில் காவல் புரிந்து வந்தனர். அதுசமயம் நபிகள் நாயக மவர்களுக்கு “அல்லாஹ் மனிதர்களை விட்டு உம்மைக் காப்பாற்றுவான்” என்ற திரு வசனம் வஹீ மூலம் அறிவிக்கப்பட்டது. உடனே நாயகமவர்கள் இல்லத்தை விட்டு வெளியே வந்து ஸஹாபிகளை நோக்கி ‘ஜனங் களே நீங்கள் வீடு திரும்புங்கள். அல்லாஹ் என்னைக் காத்துக்கொள்வான்” என்று கூறி அவர்களை அனுப்பிவிட்டார்கள்.

நபிகள் நாதர் (ஸல்) அவர்களின் மனோ நிலை ஒருவிதத்தில் இவ்வாறிருக்க, மற்றொரு விதத்தில் எவ்வாறிருந்த தென்பதையும் கவனிப்போம் அவர்களுக்கு ஜீவனோபாயம், போதம் ஆகியவைகளில் பலவித நிலைமை ஏற்பட்டது. சில சமயங்களில் மஸ்ஜிது நபவி யில் பணமும் காசும் குவிந்துவிடும். பின்பு சில தினங்கள்வரை தொடர்ச்சியாக இரண்டு மூன்று நாள் பட்டினிகிடம் செய்யவேண்டிய தேற்படும். இவ்வித நிலைமையில் அவர்கள் பணம் வந்தபோது பட்டினி கிடக்கவேண்டிய நாட்களுக்காகப் பணத்தைக் கைங்கரியம் செய்து கொள்ளலாம். ஆனால் நாயக மவர்கள் அவ்வாறு செய்வதே இல்லை. ஒரு நாளின் வரவில் மறு நாளுக்காக மீதப்படுத்தி வைப்பது இல்லை. அவர்களின் குடும்பத்தின் செலவுக்கு அத்தியாவசியமானவை தவிர மற்றவைகளை அன்றே அததற்குகந்தவர்கட் குத் தானதர்மம் செய்துவிடுவார்கள். அவர் கள் தங்கள் வீட்டில் மறுநாளைக்கு வேண்டிய பணமோ சாமானோ இருந்தால் அன்றைய இரவில் வீட்டிற்குச் செல்லமாட்டார்கள். அவைகளைத் தான தருமஞ் செய்த பின்பே வீட்டில் காலடி எடுத்து வைப்பார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களின் கடைசி நேரத்திலுங்கூட இவ்விதமாக ஆண்ட வன்மீது நம்பிக்கை வைப்பதை மறந்துவிட வில்லை. ஹஜ்றத் ஆயிஷா நாயகி இடத்தில் சில தங்க நாணயங்களைக் கொடுத்து வைத்த மை நாயகமவர்களுக்கு நினைவு வந்தது. உடனே அவர்களை அழைத்து “ஆயிஷாவே! முஹம்மது தன்னுடைய றப்பின்மீது நம்பிக் கையில்லாத நிலைமையில் அவனைச் சந்திக்க வா? போ! உடனே அந்த சொர்ணங்களைத் தானஞ் செய்துவிடு” எனக் கூறினுர்கள்.

பொறுமை, நன்றி மறவாமை

ஒருவருடைய வாளுளில் துக்கமும், வருத் தமும் தொடர்ச்சியாக யிரா. துக்கமும், சந் தோஷமும் சகடக்கால் போன்று சுழன்று வருவது இயற்கை. ஆகவே மனிதன் தன்னு டைய நோக்கத்தில் சித்தி யடைந்து சந் தோஷமடையுங் காலத்தில் தன்னை மறந்து விடாமலும், தன்னுேக்கம் நிறைவேருமற் ருேல்வியடைந்து வருத்தமுறுங் காலத்து, அதைச் சந்தோஷமாக மலர்ந்த முகத்துடன் ஏற்றுக்கொள்வதும் தான் அவனுடைய ஆத்ம சக்திக்கு ஏற்றது. தவிரவும், முயற்சி தான் மனிதனுல் செய்யத்தக்கது என்பதை யும், அது சித்தி பெறுவதும் சித்திபெரு திருப்பதும் அல்லாஹ்வின் வசத்திலிருக்கிற தென்றும் ஒருவன் உறுதியாக நம்புவானுகில் அவனுக்கு சுகதுக்க நேரங்களில் தடுமாற்ற மேற்படாது.

இவ்வுலகத்துதித்த மாந்தரில் ஒருவருக்கு ஏற்படக் கூடிய மிகப் பெரிய வெற்றிகளெல் லாம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் அவர்களுக்குச் சம்பவித்தன. ஆயினும் நாயகமவர்களின் இருதயக் கண்ணு டியில் பெருமை, அகங்காரம் என்ற பிரதி பிம்பம் ஏற்படவே இல்லை. ஹாதிம்தை யுடைய புதல்வரான “அதி” என்பவர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி இருந்தவர். இவர் நபிகள் நாயகமவர்களைப் பற்றிக்

கேள்விப்பட்டதில் இவருக்கு நாயகமவர்கள் நபியா அல்லது நாடாளுபவரா என்ற சந்தேகம் உதித்திருந்தது. இந்த சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற்காக அவர் நாயகமவர்களை அணுகியக்கால் நாயகமவர்கள் அவரை வரவேற்று உபசரித்தார்கள். அதுபோழ்து ஒரு வயோதிக ஸ்திரீ வந்து நாயகமவர்களுடன் தனித்துப் பேசவேண்டுமென்று கூறவே, எம்பிரான் (ஸல்) அவர்கள் அந்தச் சபையைவிட்டு அந்த ஸ்திரியுடன் நின்று பேசிக்கொண்டே இருந்தார்கள். அந்த ஸ்திரி தானாக முதலில் போகும்வரை நாயகமவர்கள் அந்த இடத்தைவிட்டுத்திரும்பவே இல்லை. இந்தச் சம்பவத்தைக் கண்ட "அதி" என்பவருக்கு, அரசராக இருந்தால் வயோதிகஸ்திரியுடன் இவ்வளவு நேரம்வரை மனச் சங்கடமில்லாமல் நின்று பேசுந் தன்மை இராது என்ற எண்ணம் உதித்தது; அவருக் கேற்பட்ட ஐயப்பாடும் அகன்றது. உடனே நாயக மவர்களை நபியென மனமுடன் ஏற்று இஸ்லாத்தைச் சார்ந்தார்.

தாம் போர்முனையில் கைப்பற்றிய தேசங்களில் செல்லும்போது ஜெயசீலர்களுக்கு ஒருவகைப் பெருமையும், குதுகலமும் ஏற்படுவதுண்டு. நாயகமவர்களோ, ஜெயசீலராக மக்காவிற்பிரவேசித்து "தீதுவா"என்ற இடத்தை அடைந்தவுடன் தங்கள்சவாரியை நிறுத்தி இறைவனுக்கு நன்றியாக ஸஜ்தா செய்தார்கள். இதற்குக் காரணம் என்னவெனில் ஆத்மார்த்த அருள் பெறுதவர்கள் தமக்குக் கிடைத்த வெற்றிக்குக் காரணம் சுயபலமும், வீரமும், முயற்சியும் என இறுமாப்புறுவர். அருள் பெற்ற பெரியார்களோ தங்களுக் கேற்படும் வெற்றிகளும் முன்னேற்றங்களும் புறக்கண்ணால் காணமுடியாத இறைவனின் திருக்கருணையாலேயே எனக் கருதுகின்றார்கள். ஆதலின் அவனை வாயாற வாழ்த்திப் போற்றுகின்றனர்.

ஒருவன் தான் கோரிய காரியம் சித்தியடையும்போது நன்றிசெலுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதற்கு மாறாகக் கஷ்ட நஷ்டமேற்படுங் காலத்தில் பொறுமையாக இருக்க வேண்டிய தேற்படுகிறது. ஆகவே நன்றி செலுத்தவதும், பொறுமை கொள்வதும் ஒன்றுக்கொன்று எதிரான இருதன்மைகளாகும் எனக் கூறலாம். இவ்வாறு முரண்பட்ட இவ்விருதன்மைகளும் நாயக மவர்களிடம் நனி சிறந்து விளங்கின. நன்றியைப்பற்றி மேலே உதாரணங் காட்டியாகிவிட்டது. இனி, பொறுமையைப்பற்றி நோக்குவாம்.

ஒரு ஸஹாபி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அணுகி "அல்லாஹ்வின் தூதரே! எல்லோரைப் பார்க்கிலும் அதிகமான கஷ்டம் யாருக்கு நேரிடும்" என வினவினர். அதற்கு நாயகமவர்கள் "நபிமார்களுக்குத்தான்; அவரவரின் நிலைமைக்கு ஏற்றவாறு" என விடை பகர்ந்தார்கள். இவ் விபரம் ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவங்கள் இதன் உண்மையினை உறுதிப்படுத்துகின்றன. நாயக மவர்களோ நபிமார்களின் தலைவர். ஆகவே, கடுமையிற் தலையான சங்கடங்களும், துன்பங்களும் அந்தப் பரிசுத்தவான்களாகிய நபிமார்களின் கூட்டத்தினருக்கும் அதில் நாயகமவர்களுக்குமே அதிகமாக நிகழ்ந்தன.

நாயகமவர்கள் பிறக்கும் முன்பே தந்தையை இழந்தார்கள். பிறந்தபின் பாலைப்பருவத்தே அன்னையை இழந்தார்கள். அதன் பின்னர் அன்புடன் போற்றிவளர்த்த பாட்டனரை இழந்தார்கள். நபித்துவம் வந்த பின்னர் நாயகமவர்களுக்கு பகைவர்களைவிட்டு ஆதரவாக இருந்த அபூதாலிபும் மறைந்தார். அந்தச் சிறிதுகாலத்தில் தங்கள் வாழ்க்கைத் துணை நல்லாரான உம்முல்மூமினீன் ஹஜ்ரத் கதீஜத்துல்குப்ரா (றலி)அவர்கள் இவ்வுலகை விட்டகன்றார்கள். இவ்விதமாக நாயகமவர்களை விடுத்து ஒருவர்பின் ஒருவராகப் பெற்றோரும் உற்றோரும், மனைவியும் மறையவே, நாயகமவர்கள் எத்துணை இடுக்கண் அடைந்திருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். பெற்றோர் மீதும், பெற்றோர்க்கு அடுத்து மனைவியர்கள் மீதும், மனைவியர்கட்குஅடுத்த ஈன்றெடுத்த மக்கள் பிள்ளைகள்மீதும் பிரியம் ஏற்படுவதுசகஜம். ஆகவே அவர்களையும் விட்டுப் பிரிவதென்றால் அது வயதுமுழுவதும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தக்கூடிய தொன்றாகும். எம்பிரான் (ஸல்) அவர்களுக்கு ஆண்பெண் ஆகிய இருவகையினும் பிள்ளைகள் பிறந்தன. ஆண் மக்கள் தொகையில் அபிப்பிராயபேதமுண்டு எனினும் குறைந்தது இரண்டு ஆண்மக்கள் என்பதிலும் கூடியது எட்டு ஆண்மக்கள் என்பதிலும் சங்

தேகமில்லை. பெண்மக்களில் நால்வர் பிறந்தனர்.

இவர்களில் ஹஜ்றத் பீபி பாத்திமா நாயகி ஒருவர் தவிர ஏனைய ஆண் பெண் ஆகிய எல்லாச் சந்ததியினரும் நாயகமவர்களின் கண்முன் இளமைப் பருவத்திலும், வாலிபப்பருவத்திலுமாக இவ்வுலக யாத்திரையை முடித்துக்கொண்டனர்; இத்தகைய துக்ககரமான நிகழ்ச்சிகள் நடக்கும்போது சில சமயங்களில் நாயகமவர்களின் கண்களிலிருந்து நீர் வருவது ஒன்றைத் தவிர நாவிலிருந்து நாயனை மறந்த பேச்சு ஒருவார்த்தை கூட வந்ததில்லை.

நபிகள் நாயக மவர்களின் பேறப்பிள்ளை ஒன்று (ஹஜ்றத் ஜைனப் (றலி) அவர்களின் வயிற்றில் பிறந்த ஆண்மகவு) மரிக்கும் தருவாயில் நாயகமவர்களை, அவர்களின் மூத்த புதல்வியாகிய ஜைனப் (ரலி) கூப்பிட்டனுப்பினார்கள். அதற்கு நாயகமவர்கள் தமதுபுதல்விக்குச் சலாம் சொல்லி "அல்லாஹுதஆலா நம்மிடமிருந்து எதை வாங்கிக்கொண்டானோ அதுவும்அவனுடையதுதான். அவன் எதை நமக்களித்தானோ அதுவும் அவனுடையதே. அவனுடைய ஒவ்வொரு வேலையும் குறிப்பிட்ட நேரத்தின்படி நடை பெறுகின்றது. ஆகவேபொறுமையோடு இருங்கள். அவனிடத்தில் நன்மையை நாடுங்கள்'' எனக் கூறி அனுப்பிவிட்டார்கள். நாயகமவர்களின் புத்திரியார் மீண்டும் கூப்பிட்டனுப்பவே, நாயகமவர்கள் சில ஸஹாபிகளுடன் சென்றார்கள். பேரப் பிள்ளையை மடிமீது வாங்கி வைத்துக்கொண்டார்கள். அதுபொழுது நாயகமவர்களின் கண்களிலிருந்து நீர் பெருகிற்று. அப்பொழுது ஒரு ஸஹாபி நாயகமவர்களைப் பார்த்து 'அல்லாஹ்வின் தூதரே! ஈதென்னவிலை' எனக் கூற, நாயகமவர்கள் "இது அன்பின் மேலீட்டால் உண்டாகும் உணர்ச்சி. இவ்வுணர்ச்சியை அல்லாஹுதஆலா தன் அடியார்களின் இருதயத்தில் அருளி இருக்கின்றான். அல்லாஹுதஆலா தன் அடியார்களில் கருணையுள்ள மனத்தினருக்கே கருணை செய்கிறான்'' என விடை பகர்ந்தார்கள்.

இவ்விதமான சம்பவங்கள் யாவருக்கும் இடையிடையே உண்டாகலாம். என்றாலும் தொடர்ச்சியாக இடைவிடாமல் துன்பங்களும், கஷ்டங்களும் ஒருவருக்கு உண்டாகி அதைச் சகித்துக்கொண்டிருப்பதாயின் அது அரியதோர் செயலேயாகும். நபிகள் நாயகமவர்கள் நபிப்பட்டம்பெற்று மக்காவிலிருந்த பதின்மூன்று வருஷ காலத்தில் தாயிப், மக்கா ஆகிய நகரங்களிலுள்ள காபிர்கள் இஸ்லாமிய அழைப்பை எதிர்த்தும், பரிகசித்தும், ஏசியும், பேசியும், இடர்புரிந்தும், துன்பமுண்டாக்கியும் செய்த அநியாய அக்கிரமங்களைச் சகிக்கவேண்டி யிருந்தது. பின்பு ஹிஜ்ரத் செய்தபின் மதீனாவில் வாழ்ந்த நாளில் எட்டு ஒன்பது ஆண்டுக் காலம்வரை யுத்தங்களுக்கும், ரத்தப் பெருக்குகளுக்கும் ஈடுபடவேண்டியதாயிற்று. விரோதிகள் இது சம்பந்தமாகச் செய்த சதியாலோசனைகளைக் கூறவும் வேண்டுமோ? இவைகளை எல்லாம் சகித்து ஸப்று என்ற பொறுமையைப் பூஷணமாகக் கொள்வதற்கு நாயகமவர்களைத் தவிர வேறு யாராலும் இசைந்ததாமோ?

இவைகளை எல்லாம் பார்க்கினும், தாங்களாக ஏற்படுத்திக்கொண்ட சம்பவப் பலனைச் சகிப்பது அதிகக் கடினமானது. 'ஹிஜ்றத்துக்குப் பின் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து பைத்துல்மால் நிறைந்திருந்தது. ஆனால் நாயகமவர்களின் திருக்கரமானது அந்தப் பொக்கிஷத்திலுள்ள பொருள்களை எல்லாம் தேவையுள்ளவர்களுக்கு அளித்த பின்பே ஆறுதலடைந்திருந்தது. இந்த சமயத்தில் தாங்களும் தங்கள் அஹ்ல பைத்துகளும் பசியாகவும் பட்டினியாகவும் இருந்து வருந்தனர். இவையெல்லாம் நாயகமவர்கள் தாங்களாகவே செய்துகொண்டதெனலாம். பொறுமை இன்பத்தைப்பெறுவது இவைகளை உண்டு சுகித்து நன்றி செலுத்தும் இன்பத்தைப் பார்க்கினும் எத்துணையோ மடங்கு அதிகமாக அவர்களுக்குத் தோன்றிற்று. இதைப் பார்க்கினும் மனமுடையத்தக்க காரியம் என்னவெனின் தங்களுக்குள் உள்ள நண்பர்களால் ஏற்படும் வருத்தம் என்ற ஆயுதமாகும். அவசரப்பட்ட சில யுவ ஸஹாபிகளால் நாயகமவர்களுக்கு இருமுறை மனவேதனை ஏற்பட்டது. அதாவது ஹுனைன் யுத்தத்தில் கிடைத்த கனீமத்து (யுத்த களத்தில் கிடைத்த)ப் பொருள் சம்பந்தமாகச் சில வாலிப அன்ஸாரிகள், நாயகமவர்கள், தங்களை மறந்து மக்கத்துக் குறைஷிகளுக்குப் பொருளைக் கொடுப்பதாகக் கூறி அன்ஸாரிகளுக்கிடையில் குழப்பத்தை யுண்டுபண்ணி நாயகமவர்

களை வருத்தப்படச்செய்தனர். அப்பொழுது நாயகமவர்கள் பொறுமையைப் பூஷணமாகக் கொண்டு “ அல்லாஹு தஆலாவின் கிருபை மூஸா (அலை)வுக்கு உண்டாகட்டும். அவர்கள் இதைப் பார்க்கினும் அதிகமாக அல்லற்படுத்தப்பெற்றார்கள். ஆனால் அவர்கள் பொறுமையைக் கையாண்டார்கள்” எனக் கூறினார்கள். பின்னர், அன்ஸாரிகளை அழைத்து அது சம்பந்தமாக விசாரித்து அவர்களின் மனதைத் திருப்தி செய்தார்கள்.

நாயகத் திருச் சபை

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் திருச்சபை, சாதாரண உலக மன்னர்களின் சபைகளைப் போன்று ஆடம்பர முடையதன்று. அச் சபைக்கு வாயில் காப்பாளனும் மற்ற கட்டுத் திட்டங்களுமில்லை. ஆயினும் அச்சபையில் வேறு சபைகளில் காண்டற்கரிய ஒழுங்கும், மரியாதையும் அமைந்திருந்தன. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் திருச்சபையில் ஜனங்கள் அரவமின்றி அசைவற்றுத் தலை வணங்கிய வண்ணமாய் உட்கார்ந்திருப்பார்கள். ஜனங்கள் பேசும் முறையையும் ஏற்படுத்தப்பெற்றிருந்தது. அம்முறை வம்சப் பெருமையையோ அந்தஸ்தின் உயர்வையோ பணப் பெருக்கையோ அடிப்படையாகக் கொண்டதன்று. ஆனால், அவரவரின் விழுமிய நல்லொழுக்கத்தையும், உரிமையையும் பொறுத்தே ஏற்படுத்தப்பெற்றிருந்தது. முதலில் நாயகமவர்கள் ஹாஜத்து (தேவை) உள்ளவர்களைக் கவனிப்பார்கள். அவரவர்களுக்கு வேண்டிய தேவைகளை விசாரித்து அவைகளை நிறைவேற்றித் தருவார்கள்.

சபையரங்கத்தே அனைவரும் ஒழுங்காகவும், மரியாதையாகவும், தலைவணங்கி உட்கார்ந்திருப்பார்கள். நாயகமவர்களும் மரியாதையாகவே உட்காருவார்கள். பேசும்பொழுது சபை முழுவதும் அரவமின்றி இருக்கும். ஒருவர் பேசினால் அவர் பேசி முடியும்வரை வேறொருவர் வாய் திறவார். நாயகமவர்கள் ஒருவருடைய பேச்சையும் முறித்துப் பேச மாட்டார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதேனும் ஒரு பேச்சில் அருவருப்புத் தோன்றினால் அதை அப்படியே விட்டுவிடுவார்கள். ஒரு கபீலாவிலிருந்து எவரேனும் ஒருவர் வந்தால் அவருடைய அந்தஸ்திற்குத் தக்கவாறு அவருக்கு மரியாதை செய்வார்கள். நாயகமவர்கள் ஒவ்வொருவரிடமும் முதலில் க்ஷேம லாபத்தை விசாரித்துவிட்டுப் பின்பு ஏதேனும் தேவை இருக்கிறதா என்பதைப்பற்றி விசாரிப்பார்கள். பின்பு “எவரேனும் தன்னுடைய நோக்கத்தை என்னிடம் தெரிவிக்க முடியவில்லையானால் அவருடைய நிலைமையைப் பற்றியும் தேவையைப்பற்றியும் என்னிடம் தெரிவியுங்கள்” எனக் கூறுவார்கள்.

ஒருமுறை இருவர் நாயகமவர்கள்பால் வந்தனர். அவர்களில் ஒருவர் கௌரவமான குடும்பத்தைச் சார்ந்தவர். அவருக்கு தும்மல் வந்தது. தும்மிய அவர் இஸ்லாமிய ஆசாரப்படி “அல்ஹம்து லில்லாஹ்” என்று சொல்லவில்லை. பின்பு இரண்டாவருக்கும் தும்மல் வந்தது. அவர் இஸ்லாமிய ஆசாரப்படி அல்ஹம்துலில்லாஹ் என்றுரைத்தார். நாயகமவர்கள் அதற்கு மறு மொழியாக “யர்ஹமகல்லாஹு” என்று சொன்னார்கள். முதலாவது மனிதர் நாயகமவர்களிடம் அவர்களின் இச்செய்கையைப் பற்றிக் கேட்டார். அதற்கு நாயகமவர்கள் அவர் அல்லாஹ்வை நினைத்தார். நானும் அவரை நினைத்தேன். நீரோ அல்லாஹ்வை மறந்தீர். நானும் உம்மை மறந்தேன் எனப் பதில் கூறினார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்)அவர்கள் உள்ளூரிலிருக்கும் போதும், வெளியிடங்களுக்குப் பிரயாணஞ் செய்யும்போதும், பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும், ஜனங்களுக்கு போதிப்பதையும், கற்பிப்பதையும் கைக்கொண்டிருந்தார்கள் இவைகளினால் நாயக

மவர்களின் போதனையை அந்தந்தச் சமயத்தி லிருப்பவர்களே கேட்டுத் தெரிந்து நன்மையடைந்து கொண் டிருந்தார்கள். ஆகவே நாயகமவர்கள் உபதேசம் செய்யப் போகும் விபரம் எல்லா ஜனங்களுக்கும் முன்னதாகவே தெரிவதற்காகவும், விருப்பமுள்ளவர்கள் வந்து கேட்டு நன்மையடையட்டும் என்பதற்காகவும் உபதேசத்திற்காகச் சில நேரங்களைக் குறிப்பிட்டும் வைத்திருந்தார்கள்.

இவ்விதமான சபைகூடும் நேரம் பெரும்பாலும் பஜ்ருத் தொழுகைக்குப் பின்னரேயாம். ஒவ்வொரு தொழுகைக்குப் பின்னரும் நாயமவர்கள் மஸ்ஜிதில் தங்குவார்கள் என்றும், அதுசமயம் நாயகமவர்களின் திருச்சபை கூடும் என்றும் சில ரிவாயத்துகளில் கூறப்பட் டிருக்கின்றது. உபதேசமொழிகள் எத்துணை உருக்கமானதாக இருப்பினும் நாடோறும் தவறுமல் கேட்பதால் மனிதன் அலுத்துப் போவதுண்டு. அந்த உருக்கமான உபதேசம் பயன்படாமற் போவதுமுண்டு. ஆகவே, நாயகமவர்கள் உபதேசம் செய்வதையும் பிரசங்கம் புரிவதையும் இடைவிட்டுச் செய்வது வழக்கம். இச்சபைகள் ஆடவர்களுக்குமாத்திரமே இருந்தன. பெண்கள் இச்சபைகளில் ஆஜராக அவர்களுக்கு மிக சொற்ப சந்தர்ப்பமே கிடைத்துக் கொண் டிருந்தது. ஆதலால், அப்பெண்மணிகள் தங்களுக்கெனப் பிரத்தியேகமாக ஒருநாளை நிர்ணயிக்குமாறு கேட்டுக் கொண்டனர். நாயகமவர்கள் அவர்களின் வேண்டுகோட்கிணங்கி அதற்கென ஒரு தினத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள்.

மதசம்பந்தமான வினவிடைகளில் சகல விதமான கேள்விகளுக்கும் அனுமதி அளித்திருந்தார்கள். பெண்கள் சம்பந்தமான கேள்விகளை நம்பிராட்டிமார்களே நாயகமவர்களிடம் பெரும்பாலும் கேட்டுவந்தார்கள். எனினும், பெண்கள் சம்பந்தப்பட்ட கேள்விகள் பொதுச்சபையில் கேட்கப்பட்டு விட்டால் நாயகமவர்கள் அதிக வெட்கமடைந்து அத்தகைய கேள்வியில் அதிருப்தி காட்டுவார்கள். சில சமயங்களில் ஆடவர்களே அத்தகைய கேள்விகளைக் கேட்டுவிடுவதும் உண்டு ஒருநாள் ஒரு அன்ஸாரி திருச்சபையில் நாயகமவர்களைப் பார்த்து "ஒருவன் தனது மனைவியை அந்நிய ஆடவனுடன் இருக்கக் கண்டால் அதற்கு என்ன செய்வது" எனக் கேள்வி கேட்டுவிட்டார். நாயமவர்களுக்கு இக்கேள்வி அதிருப்தியை விளைத்தது. அவரைக் கண்டித்தார்கள்.

சிலசமயங்களில் நாயகமவர்கள் தங்கள் சஹாபிகளைப்பார்த்துச் சில கேள்விகளைக் கேட்டு, அவர்களின் நுட்ப புத்தியையும், அறிவுத்திறனையும் ஆய்வதுண்டு. ஹஜ்றத் அப்துல்லாஹிப்னு உமர் (ரலி) கூறியதாவது:--ஒருமுறை நாயகமவர்கள் ஸஹாபிகளைப்பார்த்து 'இலை உதிராததும், முஸ்லிம்களுக்கு உவமையாக வுள்ளதுமான மரம் எது" எனக் கேட்டார்கள். ஜனங்களின் யோசனைகளெல்லாம் காடுகளையும் வனங்களையும் நோக்கிச்சென்றன. பேரீச்சமரமாக இருக்கலாம் என எனக்குத் தோன்றிற்று. ஆனல் நான் சொற்ப வயதுள்ளவனுகையால் அதைக்கூற எனக்கு தைரியம் வரவில்லை. கடைசியாக ஜனங்களெல்லாம் "அது இன்னமரம் என்பதை நாயகமவர்களே கூறவேண்டு" மெனக் கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது நாயகமவர்கள் "கஜூர்மரம்" எனக் கூறினர்கள். அப்துல்லாஹிப்னு உமர் (றலி) அவர்கள் தைரியமாகத் தமது அபிப்பிராயத்தைக் கூறுமலிருந்தோமே என அவர்கள் வயது முழுதும் வருந்தினர்கள்.

நாயகம் (ஸல்) அவர்களின் திருச்சபையில் ஒழுங்கும் மரியாதையும் கண்டிப்பாகக் கவனிக்கப்பட்டு வந்ததானுலும் சில சமயங்களில் மனேரம்மியமான விஷயங்களும் நடைபெறுவதுண்டு. ஒருநாள் நாயகமவர்கள் தங்கள் திருச்சபையில் பேசும்போது "சொர்க்கத்தில் ஒருவர் அல்லாஹ்விடத்தில் தோட்டம் உண்டாக்க வேண்டுமென விரும்பினர். "சொர்க்கத்தில் இவ்வளவு இருந்தும் உம்முடைய நாட்டம் நிறைவேறவில்லையா" என அல்லாஹ் அவரைக் கேட்டான். அதற்கவர் 'பூர்த்தியாயிற்று. ஆயினும் இப்பொழுதே விதைத்து இப்பொழுதே முளைத்து இப்பொழுதே பலனளிக்கவேண்டுமென விரும்புகிறேன்' எனக் கூறினர். அதுபோலவே அவர் விதைத்தார். விதை முளைத்தது. பலன் எடுக்கத் தகுதியானதாகவுமாயிற்று எனக் கூறினர்கள். அச்சபையில் அமர்ந்திருந்த காட்டுஅறபி ஒருவர் இந்தப்பேறு குறைஷிகளுக்கும் அன்ஸாரிகளுக்கும் தான் உண்டாகும். அவர்கள்தான் விவசாயிகள்,

நாங்கள் விவசாயிகளல்லேம் எனக் கூறினார். உடனே நாயகமவர்கள் சிரித்தார்கள். (புகாரி).

ஒரு முறை ஒருவர் நாயகமவர்கள்பால் சென்று "நான் நாசமுற்றேனே" எனக் கூறினார். அதற்கு நாயகமவர்கள் 'எவ்வாறு' என உசாவினார்கள். அதற்கவர் 'நான்றமலானில் என் மனைவியுடன்கூடி இருந்தேன்' எனக் கூறினார். நாயகமவர்கள் 'ஒரு அடிமைக்கு உரிமை அளிப்பீராக' என்றார்கள். அதற்கவர் 'நான் ஏழை; அடிமைக்கு எங்கு போவேன்' என்றார். நாயகமவர்கள் இரண்டு மாதம் நோன்பு நோற்கக் கட்டளையிட்டார்கள். அதற்கவர் 'இந்தக் காரியம் என்னாலாகாது' என்றார். அப்பொழுது நாயகமவர்கள் அறுபது ஏழைகளுக்கு அன்னமளிக்கக் கட்டளையிட்டார்கள். அதற்கவர் அத்துணைச் செல்வமுமில்லை என்றார். அது போது தற்செயலாக ஓரிடத்திலிருந்து ஒரு கூடை நிறைய பேரீச்சம் பழங்கள் நாயகமவர்களுக்கு அனுப்பப்பெற்றன. உடனே நாயகமவர்கள் அவரைப்பார்த்து 'இதை எடுத்துக்கொள்ளுங்கள்; ஏழைகளுக்கு தர்மஞ் செய்துவிடுங்கள்' எனக் கூறினார்கள். அதற்கவர் நாயகமவர்களைப் பார்த்து 'தங்களை நபியாகச்செய்த அந்த அல்லாஹ்மீது சத்தியமாகக் கூறுகிறேன். இந்த மதீனா முழுவதிலும் என்னைப் பார்க்கிலும் ஏழ்மையாக வுள்ளவர் ஒருவர்கூட இல்லை.' என்றார். உடனே நாயகமவர்கள் சிரித்து 'நல்லது; அவ்வாறாயின் நீங்களே நன்றாய்ச் சாப்பிடுங்கள்' என்றார்கள். (புகாரி).

ஒருமுறை நாயகமவர்கள்பால், ஹஜ்றத் அபூஹுறைறா (றலி) அவர்கள் சென்று 'நாயகமே! நான் தங்கள் திருச்சபைக்கு வந்தால் இவ்வுலகமே ஒரு தூசுபோல் தோன்றுகிறது. ஆனால் வீட்டிற்குச் சென்றால் அந்த நிலை மாறிவிடுகிறது' என்றார்கள். அதற்கு நாயகமவர்கள் 'ஒன்றுபோல் நிலைமை எப்பொழுதுமிருக்குமானால் மலக்குகள் உம்மை தரிசிக்க வருவார்களே' எனக் கூறினார்கள். (திர்மதி)

ஒருமுறை ஹஜ்றத் ஹன்லலா (றலி) அவர்கள் நாயகமவர்களின் திருச்சமுகத்தில் வந்து "யாறஸூலல்லாஹ்! நான்முனாபிக்காகி விட்டேன். நான் தங்கள் சமுகத்திலிருக்கும்போது தாங்கள் சொர்க்கம் நரகத்தைப்பற்றிக் கூறுகிறீர்கள். அவைகள் என் கண் எதிரில் வந்துவிடுகின்றன. ஆனால் நான் என் மனைவி மக்களிடம் சென்றதும் அதை மறந்துவிடுகிறேன்" என்றார். அதற்கு நாயகமவர்கள் 'வெளியினும்கூடத் தங்களுக்கு அதே நிலைமை இருக்குமாயின் மலக்குகள் தங்களிடம் வந்து முஸாபஹாச் செய்வார்களே!' எனக் கூறினார்கள். (திர்மிதி)

பிரசங்கிக்கும் ஆற்றலும், உபதேச வன்மையும் நபித்துவத்தின் ஓர் தலைமையான அம்சம் எனச் சொல்ல வேண்டும். இச்சக்தி இன்றியமையாததாய் இருத்தல் பற்றியே ஹஜ்றத் மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் 'பிர்ஔனிடம் சென்று உபதேசிக்க வேண்டுமென இறைவனின்சட்டளை பிறந்தபோது ஹஜ்றத்மூஸா அலைஹிஸ்ஸலாமவர்கள் நாயனிடத்தில்துஆச்செய்து தாங்கள் கூறும்விஷயங்களை பிரஔனும் மற்றவர்களும் சரியாக உணர்ந்து கொள்வதற்காக தங்கள் நாவிலேற் பட்டிருந்த திக்கலை நீக்கியருளுமாறு வேண்டினார்கள்.

இத்தகைய அபூர்வ ஆற்றல் நபிகள் நாயகமவர்களுக்கு இறைவனருளால் தானாகச்சமைந்திருந்தது. அதாவது அறபிதேசம் முழுவதிலும் பிரசங்கவன்மையிலும் உபதேசிக்கும் ஆற்றலிலும் குறைஷிக் குலத்தவரும் பனூஹவாஸன் கிளையினரும் சிறந்து விளங்கினர். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ குறைஷிக் குலத்திலுதித்து பனூஹவாஸன் கிளையில் வளர்ந்தார்கள். ஆகவே பிறப்பாலும் வளர்ப்பாலும் பிரசங்க வன்மையுடையவர்களைக்கலந்திருக்கும் வசதி கிடைத்திருந்தது. இதனைக்குறித்தே நாயகமவர்கள் "நான் அறபிகளில் மிகவும் நாகரீகமாகப்பேசும் வன்மையுள்ளவன். நான் குறைஷிகளிலுள்ளவன். என்னுடைய பாஷையானது பனூஸஅதிப்னி பக்கர் கோத்திரத்துப் பாஷையாகும்" என்றுகூறி இருக்கின்றார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகுவும் எளிய நடையில் சொற்பெருக் காற்றுவார்கள். பிரசங்கம் செய்வதற்காக அவர்கள் தங்களின் திருக்கூட்டத்திலிருந்து புறப்பட்டார்களானால் அரசர்களைப்போல் ஆடம்பரமாகச் செல்லார்கள். அத்தகைய உடையும் அணியமாட்டார்கள். தங்கள் கையில் தடி ஒன்று மாத்திரம் இருக்கும் சிலசமயங்களில் வில்லை உன்றி அதில் சாய்ந்து கொள்வார்கள். மஸ்ஜி

தில் பிரசங்கித்தால் கையில் தடிவைத்துக் கொள்வார்கள் என்றும், போர்க்ககக்ளத்தில் பிரசங்கிக்கும் போது வில்லே ஊன்றிச் சாய்ந்து கொள்வார்கள் என்றும் இப்னு மாஜாவில் கூறப்பட்டிருக்கின்றது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரஸங்கிப் பதற்கெனக் கால வரையறை யேற்படவில்லே யாதலால் அவர்கள் சமயம் நேர்ந்தபோழ்து திடுமெனப் பிரசங்கிப்பார்கள். ஜனங்களின் மனதில் உணர்ச்சி யுண்டாக்கவேண்டியதாக இருப்பின் பிரசங்கத்தை வினுவிடைத் தோர ணையிலேயே செய்வார்கள்.

எம்பிரான் (ஸல்) அவர்கள் நபியாகவும், ஜெயசீலராகவும், சேனுதிபதியாகவும் தலேவ ராகவும் இருந்தார்களாததால் அவர்களின் பிரசங்கத்தின்போக்கும் அந்தந்த நிலேமைக் குத் தக்கவாறே இருந்தது. அவர்களுக்கு இறைவன் "வஅன்திர் அஷீரத்தகல் அக்ரபீன்" என்ற வசனத்தை இறக்கியபோது நாயக மவர்கள் குறைஷியர்களே எல்லாம் ஒன்று கூட்டி ஒரு பிரசங்கம் செய்தார்கள். அப் பிரசங்கம் பூர்த்தியடைய அபூலஹப் சம்ம திக்கவில்லே யாயினும் அதன் போக்கை குரை ஷியர் தெரிந்துகொள்ள அதில் இடமுண்டு. அதன் விபரம் வருமாறு :—

உலகநாதர் (ஸல்) அவர்கள் ஸபா மலேயின் மீதேறிக்கொண்டு, "வாஸபாஹாஹ்" என்று சப்தமிட்டார்கள். காலேநேரத்தில் ஏதேனு மோர் கூட்டத்தினர் திடீரென தாக்க வரு வார்களாயின் அதை அறிவிப்பதற்கு மேற் கண்ட பதத்தை அக்காலத்தைய அறபிகள் உபயோகிப்பது வழக்கம். எனவே, நாயக மவர்கள் கூறியதைக் கேட்டதும் குறைஷிகள் எல்லாம் வந்து ஒன்றுகூடினர். அப்பொழுது நாயகம் (ஸல்) அவர்கள் அந்த ஜனங்களே நோக்கி "இந்த மலேக்குப் பின்புறத்திலிருந்து ஒரு சேனே வருகிறது என்று நான் உங்களுக் குக் கூறினல் நீங்கள் என் சொல்லே உண்மை என நம்புவீர்களா?" எனக் கேட்டார்கள். அதற்கு யாவரும் இதுவரை தாங்கள் பொய் சொல்ல நாங்கள் கேட்டதில்லே எனப் பதில் கூறினர். அப்பொழுது நாயகமவர்கள் "உங் களுக்கு முன் இருக்கிற கடுமையான வேதனே யைப்பற்றி நான் அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன்" எனக் கூறினர்கள். உடனே அபூலஹப் இதற்காகத்தான எங்களே ஒன்று கூட்டினீர் என அலக்ஷியமாகக் கூறிச் சென் ருன். பிறரும் கலேந்தனர்.

ஹுனைன் சண்டையில் முஸ்லிம்களுக்குக் கிடைத்த பொருள்களே நாயகமவர்கள் "முஅல்லபத்துல் குலூப்" என்னும் புதிய முஸ்லிம்களுக்குக் கொடுத்தார்கள். இது சில அன்ஸாரி வாலிபர்களுக்கு மிக வருத் தத்தை விளேத்தது. எனவே "நாயகமவர்கள் குறைஷிகளுக்குக் கொடுக்கிருர்கள். எங்களே விட்டுவிட்டார்கள். ஆனல், எங்களுடைய வாளாயுதங்களிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது" என அவ்வாலிபர் கூறின தாக நாயகமவர்கள் திருச்செவிகளுக்கு இச் செய்தி எட்டிற்று. உடனே நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா அன்ஸாரிகளேயும் ஒரு கூடா ரத்தில் ஒன்றுகூட்டி உண்மையை விசாரித் தார்கள். அதற்கவர்கள் "எங்களிலுள்ள சில வாலிபர்கள் இவ்வாறு கூறினர்கள். ஆனல் எங்களில் தலேவர்களாயும் அறிவாளி களாகவுமுள்ளவர்கள் ஒரு வார்த்தைக்கூட கூறவில்லே" என விடை பகர்ந்தனர். அப் பொழுது நாயகமவர்கள் அவர்களேநோக்கி உருக்கமான பிரசங்கம் ஒன்று ஆற்றினர்கள். அப்பிரசங்கம் அவர்கள் மனதைக் கரைத்து விட்டது. அது வருமாறு :—

அன்ஸார்களின் கூட்டத்தினரே! நீங்கள் வழி கேட்டிலிருப்பதைப் பார்த்து உங்க ளுக்கு என்மூலம் அல்லாஹுதஆலா நேரான வழி காட்டவில்லேயா? நீங்கள் பிரிந்திருந்தீர் கள். என்னேக்கொண்டு உங்களே அல்லாஹ் ஒன்று சேர்க்கவில்லேயா? நீங்கள் தேவை யுள்ளவர்களாக இருந்தீர்கள். என்னேக் கொண்டு அல்லாஹ் உங்களேச் செல்வர் களாக்க (தேவையற்றவர்களாக ஆக்க)வில்லே யா? எனக் கேட்டார்கள். அதற்கன்ஸாரி கள் ஒவ்வொரு கேள்விக்கும் ஆண்டவ னுடைய உபகாரமும் அவனது ரசூலுடைய உபகாரமும் எல்லாவற்றையும்விட மிகைத்து விட்டது என்று சொல்லிக்கொண்டே யிருந் தார்கள். பின்பு நாயகம் (ஸல்) அவர்கள் அன்ஸார்களேநோக்கி நீங்கள் வேறுவிதமாகச் சொல்லக்கூடும் என்று சொல்ல, அதற்கு அன்சார்கள் நாங்கள் வேறு என்ன சொல்லக் கிடக்கின்றது என்று சொன்னர்கள். நாயக மவர்கள் அன்சாரிகளே நோக்கி நீங்கள் என்னேப்பார்த்து "முஹம்மதே! உங்களே

ஜனங்கள் பொய்ப்பித்துக் கொண்டிருந்த நிலைமையில் நீங்கள் வந்தீர்கள். நாங்கள் உங்களை உண்மையாளர் என ஒப்புக் கொண்டோம். உங்களுக்கு யாரும் உதவியாள ரிருக்கவில்லை. அதுபோழ்து நாங்கள் உங்களுக்கு உதவிபுரிந்தோம். நீங்கள் வீட்டைவிட்டு வெளிப்படுத்தப் பட்டிருந்தீர்கள். நாங்கள் உங்களை ஆதரித்தோம் என்று நீங்கள் கூறமுடியும். அவ்வாறு நீங்கள் கூறிக்கொண்டே போனல், நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான் என்ற ஒரு மறுமொழியைத்தான் நான் சொல்லிக் கொண் டிருப்பேன். அன்ஸாரிகளே! குறைஷிகள் இப்பொழுதுதான் இஸ்லாத்தைத் தழுவினர் இப்போரில் அதிகத் துன்பப்பட்டு மிருக்கிறார்கள். சண்டையில் கிடைத்த பொருள்களைக் கொண்டு அவர்களைத் தேற்றலாமென்று விரும்பினேன். அன்ஸாரிகளே! மற்றவர்கள் ஒட்டகங்களையும் ஆடுகளையும் கொண்டுபோக உங்கள் இல்லங்களுக்கு உங்கள் நபியையே அழைத்துக் கொண்டு போவதை நீங்கள் பிரியப்படவில்லையா? அல்லாஹ்மீது சத்தியமாக! நீங்கள் கொண்டுபோகும் வஸ்துவானது எல்லா ஜனங்களும் எதைக்கொண்டு போகிறார்களோ அதைப்பார்க்கிலும் மேலானதாகும்" எனக் கூறினார்கள். இதைக்கேட்டதும் எல்லா அன்ஸாரிகளும் நாங்கள் பொருந்திக் கொண்டோம் பொருந்திக் கொண்டோம் எனக் கூறினர் அமிழ்தினுமினிய இப்பிரசங்கமானது அன்ஸாரிகளின் ஹிருதயத்தைத் தாக்கி கண்களிலிருந்து நீர்த்தாரை மல்கச் செய்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிரசங்கத்தின் தன்மையானது அந்தரங்கத்தில் ஒரு பெரும் அற்புதமாகவே இருந்தது. இரும்பனைய மனத்தினரும் கூட அவர்களின் அமுதவாக்கைக் கேட்டுருகி விடுவர். ஒரு முறை நாயகமவர்கள் ஸூறத்து "வன்னஜ்மி" லிருந்து சில ஆயத்துகளை ஓதிக் காட்டி நாயகனுக்கு ஸுஜூது செய்தார்கள். அந்தச்சமயத்தில் அதைக் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் முஸ்லிம்கள் மாத்திரமேன் காபிர்களும் கூட நாயகமவர்களுடன் நாயனுக்கு ஸுஜூது செய்தனர். (ஸஹீஹ் புகாரி).

எம்பிரான் (ஸல்) அவர்களுக்கு நுபுவ்வத்திற்கு முன் நண்பராக இருந்த ஒருவர் நாயகமவர்களுக்கு பித்தம் பிடித்திருக்கின்றதென நினைத்து (நஊதுபில்லாஹி) அவர்களுக்கு மந்திரிக்க வந்தார். அப்பொழுது நாயகமவர்கள் அவருக்குச் சுருக்கமாக ஒரு பிரசங்கம் செய்தார்கள். உடனே அவர் நாயகமவர்களைப்பார்த்து "முஹம்மதே! மீண்டும் ஒரு முறை அதனைச் செப்புக" என்றார். நாயகமவர்கள் அதைப் பன்முறை திருப்பிக் கூறினார்கள். உடனே அவர் "நான்புலவர்களின் பாடல் களையும் கேட்டிருக்கிறேன். ஆனல் இதுவோ அவைகள் எல்லாவற்றினும் வேறொருவஸ்துவாக இருக்கிறது" எனக் கூறினர். (ஸஹீஹு முஸ்லிம்)

நாயகமவர்களின் சாமுத்ரிகா லட்சணம்

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் நடுத்தரமான உயரமும், உயரத்திற்கு ஒத்த உடற்கட்டு முள்ளவர்கள். வெண்சிவப்பு நிறமுள்ளவர்கள். அவர்களின் நெற்றியானது அகன்றிருந்தது (அகலமாக இருந்தது). புருவங்கள் நெருங்கி யிருந்தன. நாசியானது நீண்டு வளைந்திருந்தது. முகம் அதிக தசைப்பற்று அற்றதாக இருந்தது. வாய் அகலமாயிருந்தது. பற்கள் அதிகநெருக்க மில்லாதிருந்தன. கழுத்து உயரமாகவும், தலைபெரிதாகவும், மார்பு படர்ந்தும் விரிந்து மிருந்தன. தலைமயிர் முற்றிலும் சுருட்டையாகவோ அல்லது முற்றிலும் நேராகவோ யிருக்கவில்லை. ஒருவகை சிறிய அலைபோன்ற படிப்படியான தோற்றத்தை யுடையதா யிருந்தது. தாடி அடர்த்தி

யாக இருந்தது. முகம் எடுப்பாகவும் கண்கள் கறுத்தும் சென்னிறங்கொண்டன வாகவும், இமைகள் பெரிதாகவும், புஜத்தில் சதையும், தோள் எலும்புகள் பெரிதாகவு மிருந்தன. மார்பிலிருந்து தொப்புள்வரை உரோமம் கோடுபோன்று காலிட்டு ஒடி யிருந்தது. தோள்புஜங்களில் உரோமங்களிருந்தன. உள்ளங்கைகள் சதைப் பிடிப்புள்ளனவாகவும், அகலமாகவும், புஜம் நீண்டதாகவும் குதிக்கால் மிருதுவாகவும் இருந்தன. பாதங்கள் பூமியில் முற்றிலும் பதியாவண்ணம் பாதங்களின் பாகம் நடுவில் பாலம்போன்று ஆழ்ந்திருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகும், மூகவசீகரமும், கெம்பிரதோற்றமும் ஸஹாபிகளிடத்தில் ஒருவகை உணர்ச்சியை உண்டாக்கிக்கொண்டிருந்தது. ஹஜறத் அப்துல்லாஹிப்னு ஸலாம் (றலி) அவர்கள் இஸ்லாத்தைத் தழுவுமுன் யூதமதத் தவராக இருந்தார்கள். அவர்கள் முதல் முதலாக நாயகமவர்களைப் பார்த்தபோது "இறைவனின் மீது சத்தியமாக இதுபொய்சொல்லும் முகமல்ல" எனக்கூறினார்கள். "ஜாபிருப்னுஸமுரு" என்ற ஸஹாபியிடத்தில் ஒருவர் நபிகள் நாயகமவர்களின் முகம், பட்டாக்கத்தியைப் போல் இலங்கிக்கொண்டிருந்ததா? எனக் கேட்டதற்கு அவர்கள் "இல்லை. சந்திர சூரியனைப்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது" எனக் கூறினார்கள். இதே ஸஹாபி மற்றொரு முறை கூறியதாவது. "ஒரு நாளிரவு வானத்தில் முற்றிலும் மேகமில்லா திருந்தது. பூரணசந்திரனும் உதயமாயிற்று நான் நாயகமவர்களின் முகாரவிந்தத்தை ஒரு முறை பார்ப்பதும், சந்திரனை மறுமுறை பார்ப்பதுமாக இருந்தேன். ஆனால், எனக்கு அச்சந்திரனைப் பார்க்கினும் நாயகமவர்களின் திருவதனந்தான் அதிக அழகுள்ளதாகத் தோன்றிற்று" என்பதே.

நாயகம் (ஸல்) அவர்களின் வியர்வையில் ஒரு விதமான நறுமணம் கமழ்ந்தது அவர்களின் திருநெற்றியில், வியர்வையானது முத்துக்களைப் போலிலங்கிக் கொண்டிருக்கும். அவர்களின் தூய திருமேனி மிகவும் மேன்மையாயிருந்தது "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நிறம் மிகவும் மலர்ந்திருந்ததுடன் அவர்களின் வியர்வை முத்துக்கள் போன்று தோன்றின என்றும், தேபா என்னும் பட்டு நாயகமவர்களின் சரீரத்தைப் பார்க்கினும் அதிக மிருதுவாக இருக்கவில்லை என்றும், கஸ்தூரி அம்பர் ஆகியவைகளைப் பார்க்கினும் நாயகமவர்களின் திருமேனி அதிக மணமுள்ளதாக இருந்தது என்றும் ஹஜ்றத் அனஸ் (றலி) அவர்கள் கூறி இருக்கிறார்கள்.

தோள்புஜங்களிரண்டுக்கும் மத்தியில் புறா முட்டை யளவு நுபுவ்வத்தின் முத்திரை இருந்தது. இது வெளிப் பார்வைக்கு சிவந்து உயர்ந்த தசைத்துண்டைப் போல் காணப்பட்டது.

தலைமயிர் பெரும்பாலும் சோணை வரை தொங்கிக் கொண்டிருக்கும். அறபி முஷ்ரிக்கள் தலைமயிரை மாங்குவிட்டுக் கொண்டிருந்தார்கள். நபிகள் நாயகமவர்கள் அவர்களை எதிர்த்துக் கொண்டிருந்த கால் வேதத்தையுடையவர்கள் தலைமயிரை விடுவதுபோல் விட்டுக்கொண் டிருந்தார்கள். பின்பு முஷ்ரிக்குகள் ஒடுக்கப்பட்டு அவர்கள் அரவே ஒழிந்துபோய் விட்டதால் தலைமயிரில் அவர்களுக்கு ஒப்பாகச் செய்வது என்ற பிரசினையும் நீங்கிவிட்டது. ஆகவே, கடைசிக்காலத்தில் நாயகமவர்கள் மாங்குவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாயகமவர்கள் உரோமங்களுக்கு எண்ணெய் போடுவார்கள். ஆனால் ஒன்றைவிட்டு ஒருநாள் சீவி விடுவார்கள். தாடியில் விரல் விட்டு எண்ணிவிடக் கூடியவாறு நறைத்திருந்தது.

மிக வேகமாக நடப்பார்கள். அடி எடுத்து வைக்கும் தன்மை ஒரே நிலையுள்ளதாகக் கானப்படும்.

———

முன் அறிக்கைகள்

ஒருவரை நபி என ஒப்புக் கொள்வதாயின் அவருக்கு முன்னு லிருந்த நபிமார்கள் அவரின் வருகையைப் பற்றித் தங்களுக்கு எச்சரிக்கை செய்திருக்கவேண்டும் என்று யூதர்களும் கிறிஸ்துவர்களும் நம்பினுர்கள். முன் அறிக்கைகளிற் கூறப்பெற்றுள்ள வாறு அங்க அடையாளம் முதலியவைகள் அவரிடம் இருக்கிறதா என்றும் அவர்கள் பார்ப்பது வழக்கம். இவ்வழக்கத்திற்கேற்ப நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னுள்ள நபிமார்களால் முன் அறிக்கை செய்யப்பட்டிருக்கிறுர்களா என்றும், அவ்வாறு அறிவித்த அடயாளங்கள் நாயகமவர்களிடம் காணப்படுகின்றனவா என்றும் அக்காலத்திலிருந்த யூதர்களும் கிறிஸ்துவர்களும் பரிசிலனை செய்துபார்த்தார்கள். பரிசிலனையில் சந்தேகந் தெளிந்த பல யூதகிறிஸ்துவப் பெரியார்கள், நாயகமவர்கள் காலத்திலே இஸ்லாம் மதத்தைத் தழுவியதோடு ஸஹாபியாக இருக்கும் பேறையும் பெற்றனர். இவ்வாறு சந்தேகந் தெளிந்த சிலர் பிறர்க்குப் பயந்து பகிரங்கமாக இஸ்லாத்தைத் தழுவ முன்வரவில்லே. ஆயினும், இஸ்லாத்தின் உண்மையை ஒப்புக்கொண் டிருக்கிறுர்கள் இவ்விவரங்களே நாயக சரித்திரத்தில் காணலாம். இஃ திவ்வாருக, முற்காலத்தைய நபிமார்கள் முன் அறிக்கை செய்திருக்கிறுர்களா என யூத கிறிஸ்தவ சகோதரர்கள் பரிசிலனே செய்தார்களே, அவ்வறிக்கைகள் யாவை என்பதை இங்கு விளக்குவாம். தவிர நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே தங்கள் ஸஹாபிகளிடத்தில் "நான் என் தகப்பனுர் இப்ராஹீம் (அலே) அவர்களின் துஆவாகவும், ஈஸா (அலே) அவர்களின் நன்மாராயமாகவும் இருக்கிறேன்" எனக்கூறி இருக்கிறுர்கள். ஆதலால், இந்த இடத்தில் ஹஜ்றத் இப்ராஹீம் (அலே) அவர்களின் துஆ இன்னதென்பதையும், ஹஜ்றத் ஈசா (அலே) அவர்களின் முன் அறிக்கை இன்னதென்பதையும் சிறிது விளக்குதும்.

இப்ருஹீம் (அலே) அவர்களின் துஆ.

திருகுர்ஆன் ஷரீபில் இரண்டாவது அத்தியாயமாகிய ஸூறத்துல்பகராவிலேயே இப்ராஹீம் (அலே) அவர்கள் செய்த துஆக்களே இறைவன் கூறி இருக்கின்றுன். அது வருமாறு :—

" தவிர, இப்ருஹீமை அவருடைய றப்பு பல விஷயங்களேக்கொண்டு சோதித்தபோது அவைகளே அவர் பரிபூரணமாகச் செய்துவிட்டார். (ஆதலால் அவரை நோக்கி) நிச்சயமாக நான் உம்மை மனிதர்களுக்குத் தலேவராக ஆக்கினேன் என்று (அவருடையறப்பு) கூறினுன். அதற்கு அவர் என்னுடைய சந்ததியிலுமா எனக்கேட்டார். (அதற்கு அல்லாஹ் உம்முடைய சந்ததியிலுள்ள) அநியாயக்காரரை என்னுடைய இந்த உறுதிமொழிச்சாராது எனக்கூறினுன்.

மேலும் (கஃபா எனும்) அவ்வீட்டை மனிதர்கள் ஒதுங்கும் ஸ்தலமாகவும், அபயமளிக்கக் கூடியதாகவும் ஆக்கிய சமயத்தில் நாம் (ஹஜ்ஜுச்செய்யவந்து அவ்வீட்டை) வலஞ் சுற்றுபவர்களுக்கும், தியானம்புரிய (அவ்வீட்டில்) தங்குபவர்களுக்கும், தாழ்ந்து சிரம் பணிபவர்களுக்கும் என்னுடைய அந்த வீட்டை தூய்மையானதாக ஆக்கிவையுங்கள் என இப்ருஹீமிடத்திலும் இஸ்மாயிலிடத்திலும் நாம் வாக்குறுதி வாங்கி இருக்கின்றேம். (ஆதலால்) இப்ருஹீம் நின்ற இடத்தை நீங்கள் தொழுமிடமாக வைத்துக்கொள்ளுங்கள்.

மேலும் இப்ருஹீம்! என்னுடைய றப்பே! இதை அபயமளிக்கும் நகரமாக அமைத்துக்கொண்டு அதில் வசிப்பவர்களில் எவன் அல்லாஹ்வையும் இறுதிநாளேயும் விசுவாசங் கொண்டவனுக இருக்கின்றுனே அவனுக்குக் கனிவர்க்கங்களிலிருந்து ஆகாரமளித்து வருவாயாக எனக் கூறியதற்கு அவன் (என்னே விசுவாசங்கொண்டவனுக்கு நான் ஆகாரமளிப்பது போலவே) எவன் (என்னே) நிரா

கரிக்கின்றானே (அவனுக்கும் ஆகாரமளித்து) அவனையுஞ் சொற்பகாலம் சுகமனுபவிக்க விட்டுவைப்பேன். பின்னர், நரகவேதனை யின்பால் (செல்லும்படி) அவனை நிர்ப்பந்திப் பேன். அவன் செல்லும் (அந்த நரக) ஸ்தா னம் மகா கொடிது என்று கூறினான்.

மேலும் இப்ராஹீமும் இஸ்மாயீலும் அவ் வீட்டின் அஸ்திவாரத்தை உயர்த்தியபோது எங்களுடையறப்பே! (உன்னை வணங்கு வதற்காக உன் கட்டளைப்படி நாங்கள் கட்டிய) அவ்வீட்டை எங்களிலிருந்து ஏற்றுக் கொள்வாயாக. நிச்சயமாக நீ (எங்களுடைய இப்பிரார்த்தனையைக்) கேட்பவனும் அறி பவனுமாயிருக்கின்றாய்.

எங்களுடைய றப்பே! எங்களிருவரையும் (உனக்கு முற்றிலும் வழிபட்ட)முஸ்லிம்களா கவும், எங்களுடைய சந்ததியிலிருந்து ஒரு பெருங்கூட்டத்தை (உனக்கு முற்றிலும் வழிப்பட்ட) முஸ்லிம்களாகவும் ஆக்குவா யாக. நாங்கள் ஆற்றவேண்டிய வணக்கங் களையும் எங்களுக்கு நீ அறிவிப்பாயாக. (நாங்கள் தவறிழைத்திருப்போமாயின்) எங் களை நீ மன்னிப்பாயாக! நிச்சயமாக நீ மிக வும் மன்னிப்போனும் அளவற்ற அன்புடை யோனுமாக விருக்கின்றாய்.

எங்களுடைய றப்பே! உன்னுடைய வச னங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்து வேதங்களிலுள்ள ஆழ்ந்த கருத்துக்களையும் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்து அவர்களைப் (பாபத்திலிருந்து)பரிசுத்தமாக்கக்கூடிய ஒரு தூதரையும் அவர்களிலிருந்தே நீ எழுந்தரு ளச் செய்வாயாக! நிச்சயமாக நீ வல்லோ னும் நுண்ணறிவுடையோனுமாய் இருக் கின்றாய்.

மேலும், ஹஜ்ரத் இப்ராஹீம் (அலை) அவர் கள் தமது மூத்த புதல்வராகவுள்ள இஸ்மா யீல் (அலை) அவர்களையும், தம்முடைய மனைவி யும் இஸ்மாயில் (அலை) அவர்களின் தாயாரு மான ஹஜ்றத் ஹாஜரா அம்மாள் அவர்களை யும் இறைவனின் கட்டளைப்படி இப்பொழுது மக்காவாக விளங்கும் ஸ்தலமாகிய பாரான் வனத்தில் விடும்பொழுது "என்னுடைய றப்பே! நிச்சயமாக நான் என்னுடைய சந்ததியை விவசாயமற்றதொரு பள்ளத்தாக் கில் மிக்க கண்ணியம்பெற்ற உன்னுடைய வீட்டின் அருகாமையில் வாழ்ந்துவருமாறு செய்துவிட்டேன். எங்கள் றப்பே! அவர் கள் (உன்னைத்) தொழுதுகொண்டே இருப்ப தற்காக (உன் கட்டளைப்படி அவ்வாறு செய் திருக்கிறேன். அது மனித சஞ்சாரமற்றதாக இருக்கின்றது. ஆதலால் அவர்களுடன் வசிப்பதற்காக) மனிதர்களில் சிலருடைய இருதயங்களை அதன்பக்கம் சார்பு கொள்ளு மாறு செய்வாயாக மேலும், விளைபொருள் களைக்கொண்டு அவர்களுக்கு ஆகாரமளித்து வருவாயாக. உனக்கு அவர்கள் நன்றி செலுத்திக்கொண்டே யிருப்பார்கள். (14—37) என்றும் பிரார்த்தனை செய்திருக் கின்றார்கள். ஆகவே மக்காவைப்பற்றியும் நாயகமவர்களைப்பற்றியும் இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்கள் செய்த இந்தப் பிரார்த் தனைகளில் அவர்கள் கேட்ட விஷயங்கள் யாவை எனக் கவனிப்போம்.

1. கஃபா என்ற தேவாலயம் இருந்த ஸ்தலத்தை ஒரு பேரூராகச் செய்யவேண்டும். அதுவும் அபயமளிக்கக்கூடிய ஸ்தலமாக இருக்கவேண்டும்.

2. அப்பேரூரில் வசிப்பவர்களுக்கு கனி வர்க்கங்களை ஆகாரமளித்து வரவேண்டும்.

3. ஹஜ்றத் இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது புதல்வரான இஸ்மாயீல் (அலை) அவர் களின் துணைகொண்டு அல்லாஹ்வின் கட் டளைப்படி கட்டிய அந்த பைத்துல்லாஹ்வை அங்கீகரித்துக் கொள்ளவேண்டும்.

4. தன்னையும் தன் குமாரராகிய இஸ்மா யீலையும் முஸ்லிம்களாகச் செய்யவேண்டும்.

5. தங்களுடைய சந்ததியிலிருந்து ஒரு பெருந்தொகையினரையும் முஸ்லிம்களாகச் செய்யவேண்டும்.

6. அவர்களிலிருந்து ஒரு தூதரை எழுந் தருளச் செய்யவேண்டும்.

எனவே இப்ராஹீம் (அலை) அவர்கள் பிரார்த்தித்த இந்த ஆறு கோரிக்கைளிலும் இந்த வியாசத்திற்குப் பொருத்தமானது கடைசிக்கோரிக்கைதான். இந்த இடத்தில் தோன்றக்கூடிய நபியவர்கள் எத்தகைய லக்ஷணங்களை உடையவராக இருக்கவேண் டும் என்பதையும் கேட்டிருக்கிறார்கள். அவைகளாவன :—

1. இறைவனுடைய வசனங்களை ஓதிக் காண்பிப்பவர்.

2. எல்லா வேதங்களிலுமுள்ள கருத்துக்களையும் கற்றுக்கொடுப்பவர்.

3. பரிசுத்தமாக்கக் கூடியவர்.

....

ஹஜ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் வேண்டிக்கொண்டதற்கேற்ப இறைவன் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கடைசி நபியாக அனுப்பியதோடு அம்மூன்று லக்ஷணங்களும் அமைந்திருக்குமாறு செய்தான். அதன் விபரம் வருமாறு :—

இறைவனுடைய வசனங்களை ஓதிக் காண்பிக்கக் கூடியவராக அத்தூதர் இருக்கவேண்டும் என இப்றாஹீம் (அலை) அவர்கள் கூறிய தன் நோக்கம், அத்தூதருக்கு அருளப்படும் வேதம் முற்றிலும் இறைவனால் அமைக்கப்பட்ட வாக்கியங்களாகவே இருக்கவேண்டும் என்பதாகும். அதற்கிணங்க நாயகமவர்களுக்கு அருளப்பட்ட வேதமாகிய திருகுர்ஆன் வாக்கியங்கள் முற்றிலும் இறைவனால் அமைக்கப்பெற்ற வாக்கியங்களாகவே இருக்கின்றன. ஆதலாற்றான், அவ்வேதம் அருளப்பெற்ற அன்றுமுதல் இன்றுவரை அதன் வாக்கியங்கள் திரிக்கப்படாமலும் மறைக்கப்படாமலுமிருப்பதோடு அதைப்போலொரு வாக்கியமேனும் அமைக்க மனிதர்களால் சாத்தியப்படாமலு மிருக்கிறது. நிச்சயமாகவே கியாம நாள்வரை அவ்விதமாகவே இருக்கும்.

எல்லா வேதங்களுடைய கருத்துக்களையும் நபிபெருமானார் (ஸல்) அவர்கள் கற்றுக் கொடுப்பவராக இருந்தார்கள். அதனாற்றான் அவர்கள் எல்லா நபிமார்களுக்கும் இறுதியில் வந்ததோடு எல்லா வேதங்களுக்கும் கடைசி வேதமும் கொடுக்கப்பெற்றார்கள். ஏனெனில் முதலிலேயே நபியாகவந்து வேதமும் அருளப்பட்டால் எல்லா வேதங்களுடைய தத்துவங்களையும் எடுத்துப் போதிக்கச் சந்தர்ப்பம் வாய்க்காது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்வந்த நபிமார்கள் தங்கள் தங்களுக்கு அருளப்பெற்ற வேதங்களையும், அதற்குமுன் அருளப்பெற்ற வேதங்களையும் போதிக்க முடிந்ததேயன்றித் தங்களுக்குப் பின் அருளுமாறு இருந்த வேதங்களின் தத்துவங்களைப்பற்றிப் போதிக்க முடியவில்லை. ஆகவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குமுன் அருளப்பெற்ற வேதவாக்கியங்கள் யூத கிறிஸ்தவர்களின் கையாடலினால் புரட்டப்பெற்றுப் போனமையால் அவைகளின் கருத்துக்களும் இக் கடைசி வேதத்தில் சேர்த்துக்கூறப்பட்டிருக்கின்றன. ஆதலாற்றான் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்களுக்கு முன்னுள்ள வேதங்களை ஒப்புக்கொண்டார்களாயினும், அந்த யூத கிறிஸ்தவர்கள் கையில் வேதங்கள் என வைத்துக் கொண்டிருக்கும் நூல்களை ஒப்புக் கொள்ளவில்லை. இஸ்லாம் மதத்தைப் பின்பற்றியவர்களான முஸ்லிம்கள் இவ்வுலகத் துதித்த எல்லா நபிமார்களையும், பொதுவாக எல்லா வேதங்களையும் ஒப்புக்கொள்வர். ஆனால் தற்காலம் ஏனையோர்களிடமிருந்து வருகிற வேதங்கள் எனக் கூறப்படும் திரிக்கப்பட்ட நூல்களை அந்தந்த நபிமார்களுக்கு அருளப்பெற்ற பரிசுத்த வேதம் என ஒப்புக் கொள்வதில்லை. இப்பொழுதுள்ள அவ் வேதங்கள் அந்த நபிமார்களுக்கு அருளப் பெற்ற வேதங்களின் நாமங்களைத் தாங்கி இருக்கின்றனவே அன்றி உண்மை வேதங்கள் அல்ல என்பது முஸ்லிம்களின் நம்பிக்கையாகும். இவ்வுண்மை ஏனைய மதச்சகோதரர்களில் நியாய புத்தி படைத்தவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டும் இருக்கிறார்கள்.

நபிமார்கள் இவ்வுலகத்திற் றோன்றியதன் நோக்கமெல்லாம் மக்களுக்கு நேரான வழியைக் காட்டி அவர்களை ஏகதெய்வக் கொள்கை யுடையவர்களாக்கி அதன்படி நடக்கச் செய்வதற்கே. இறைவனும் தனக்கு இணை வைப்பதையே பெரும் பாபமாகக் கூறி இருப்பதுடன் அப்பாபத்திற்கு மன்னிப்புத் தேடி நேர்வழிக்கு வராத ஒருவனுக்கும் மன்னிப்பதில்லை எனக்கூறி இருக்கிறான். ஆகவே ஏகதெய்வக்கொள்கையை ஒப்புக்கொண்டு அதைக் கடைப்பிடித் தொழுகாத ஒருவனும்எவ்வளவு நல்லவனாக இருப்பினும் அவன் பாவியே யாவன். என்றும், ஏக தெய்வக் கொள்கையை ஒப்புக்கொண்டு அதைக் கடைப்பிடித் தொழுகுபவர் வேறு ஏனைய பாபங்களைச் செய்வரேனும் அவர்கள் செய்த குற்றத்திற்கு தக்கவாறு தண்டிக்கப்பட்டு இறைவனால் மன்னிக்கப்பெற்று மீட்சிபெறுவர் என்றும் தெரிந்துகொள்கிறோம். இதன்படி நாம் முன்னுள்ள நபிமார்களைப் பின்

பற்றியவர்களின் நிலைமையைக் கவனிப்போமாக. மூஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலருக்கு நேரான வழியைக்காட்டி அவர்களை ஏக தெய்வ வணக்கத்திற் கொண்டுவந்தார்களாயினும் அவர்கள் கண்முன்பே அவர்கள் காளைக் கன்றை வணங்கி அல்லாஹ்வுக்கு இணை ஸவத்திருக்கின்ருர்கள், பின்பு அவ்விஸ்ரவேலர்களைப் பாப மன்னிப்புத் தேடும்படி செய்திருக்கிருர்கள். ஆயினும் அவர்கள் ஏக தெய்வ வணக்கத்தை உறுதியாகக் கடைபிடித் தொழுகினுர் களெனத் தெரியவில்லை. இவ்வாறு உறுதியாக இருக்காமல் நாளுக்கு நாள் அவ்வணக்கத்தை அவர்கள் கைவிட்டதனுல் தான் ஹஜ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பின்னர் ஒருவர் பின் ஒருவராய் வெவ்வேறு நபிகமார்கள் நேர்வழி காட்டுவதற்காக வரவேண்டியதாயிற்று. இவ்வாறு வந்த நபிமார்களின் கடைசியாக ஈஸா (அலை) அவர்களும் ஒருவராவர். இவர்கள் மக்களின் நேர்வழிக்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்டார்கள். எனினும் அவர்களை ஏற்று அங்கீகரித்தவர்கள் விரல்விட்ட டெண்ணக்கூடிய மிகச்சிலரேயாகும்.

கிறிஸ்துவர்கள் கையிலிருக்கிற இஞ்சீல் வேதத்தின் கூற்றுப்படி நோக்குழி, ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றிய அந்தச் சொற்பத் தொகையினரும் உண்மையான கிறிஸ்துவர்களாக இருந்ததாகத் தெரியவில்லை. அவர்கள் தங்கள் நபியைப் பின்பற்றியதாகவும் கிறிஸ்துவர்களாய் விட்டதாகவும் வெளிக்குக் கூறிக் கொண்டார்களே அன்றி அந்தரங்கத்தில் அவர்கள் யூதர்களாக இருந்தார்கள் என்றே நினைக்க வேண்டியதிருக்கிறது.

நமது நபிகள் பிரான் (ஸல்) அவர்கள்தாம் பாபத்தை விட்டுப் பரிசுத்தவான் களாக்கும் பேறைப் பெற்றிருக்கிருர்கள். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தரிசித்து இஸ்லாம் மதத்தைத் தழுவிய பெரியார்களான ஸஹாபிகள் நாயகமவர்களுக்குத் துரோகம் செய்ததாகவோ அந்தத்துரோகத்தால் நாயக மவர்களுக்கு இடர்விளைந்ததாகவோ, ஸஹாபிக ளிலெவரேனும் நாயக மவர்கள் காலத்திலுஞ் சரி, அதற்குப் பின்னுஞ் சரி இஸ்லாம் மதத்தைவிட்டு விலகி வேறு மதம் சார்ந்ததாகவோ எவராலும் காண்பிக்கமுடியாது. இத்தகையமாசு நாயகம் அவர்களிட மில்லை என்பது உலகமே ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

தவிர, நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த ஏக தெய்வக்கொள்கையும், அவர்கள் அனுஷ்டித்த ஏக தெய்வவணக்கமும் அன்று முதல் இன்றுவரை உலகத்தில் நிலைபெற்று சிறப்புடன் நாளுக்குநாள் வளர்பிறைச் சந்திரனைப்போல் செழித்தோங்கி வருவதும், இதர மதத்தினர் இக் கொள்கையைப்போற்றி இதனைப் பின்பற்றி வருவதும் உலகறிந்த விஷயம். இனி உலகமெல்லாம் ஒரே மூச்சாகஒரு காலத்தில் இஸ்லாத்தைத் தழுவி நிற்கும் என்பதற்கு போதிய சான்று காணப்படுகின்றது. இதர மதங்களை நோக்குழி அம் மதத்தைப் பின்பற்றுவோரிற் சிலர்பால் ஏக தெய்வக் கொள்கை இருப்பினும், அக் கொள்கைக்கான வணக்கமுறை மாறுபட்டு இணைவைத்தலிலேயே கொண்டுபோய்விட்டிருக்கின்றது. இதன் உண்மையை ஒருவரும் மறுக்க முடியாது. எனவே நபிகள் நாயகமவர்கள் ஹஜ்றத் இப்ராஹீம் அலைஹி ஸ்ஸலாமவர்களின் பிரார்த்தனையின்படிப் பிறந்து அவர்கள் கோரிய லக்ஷணங்களையும் பூரணமாக அமையப்பெற் றிருந்தார்கள் என்பதை இதன் மூலம் நன்கறிந்து கொள்ளலாம்.

இனி ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களின் முன் அறிக்கையைப்பற்றிக் கவனிப்போம்.

"மேலும் மர்யமுடைய மகனுர் ஈஸா(அலை) பனுஇஸ்ருயீல்களை நோக்கி) இஸ்ருயீலின் சந்ததிகளே! நிச்சயமாக நான் என்முன் இருக்கிற தௌராத் வேதத்தை உண்மைப் படுத்துகிறவனும், எனக்குப்பின்னுல் வரக் கூடிய றஸூலைக்கொண்டு நான் மாருயங் கூறுபவனுகவும் இருக்கிறநிலைமையில் உங்களிடம் அல்லாஹ்வின் தூதனுக வந்திருக்கிறேன். அந்த றஸூலுடைய நாமம் அஹ்மது" என்று கூறியபோது—"திருக்குர்ஆன்"

இந்த அத்தியாயம் ஹஜ்றத் ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்கள் அறிவித்த முன் அறிக்கை யாளரைப் பற்றிய தென்று நனி விளங்கு கின்றது. இதனை இம்மட்டுடன் நிறுத்திக் கொண்டு நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அங்கீகரிக்க இன்னும் யோசித்துக் கொண்டிருக்கிற கிறிஸ்

துவ சகோதரர்கள் கையில் இருக்கிற இஞ்சில் வேதமெனும் புதிய ஏற்பாட்டில் இன்றும் காணப்படும் விஷயங்களைக் கவனிப்போமாக:—

"நான் பிதாவை வேண்டிக் கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய (பாரகலீத்) வேறொரு தேற்றரவாளரை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்

(யோ-14-அ-16-வ)

நான் உங்களுக்கு உண்மையை கூறுகின்றேன்நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமா யிருக்கும். நான் போகாதிருந்தால் தேற்றரவாளர் உங்களிடத்தில் வரார். நான் போவேனே யாயின், அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து பாவத்தைக் குறித்தும் ,நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித் துணர்த்துவார்.

இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவனா யுள்ளேன் அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.

சத்திய ஆவியாகிய அவர் வருப்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாகப் பேசாமல் தாம் கேள்விப்பட்ட யாவையுஞ் சொல்லி, வரப்போகிற காரியங்களையும் உங்களுக் கறிவிப்பார். அவர் என்னுடைய விஷயங்களை எடுத்து உங்களுக்கு அறிவிப்பதனால் என்னை மகிமைப்படுத்து வார்." (இ 16-8) .

இஞ்சீலி லுள்ள இவ்வாக்கியங்களி லிருந்து பின்னர் வரப்போகிற ஒரு நபியைப்பற்றி ஹஜ்ரத் ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்கள் முன்னதாகவே அறிவுறுத்தி யிருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது. அவர்கள் கூறியிருக்கிற விஷயங்கள்யாவை, அவைகள் நமது நபிகள் திலகமவர்களிடம் காணப்பட்டனவா? என்பதைக் கவனிப்போம்.

1. தேற்றர வாளரை அவர் உங்களுக்குத் தந்தருள்வார் என ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்கள் கூறி இருக்கிறார்கள். இந்தத் தேற்றரவாளர் என்ற பதத்தின் கருத்தைக் கவனிப்பாம் தேற்றரவாளர் எனும் பதத்திற்கு பைபிளின்மூல பாஷையாகிய ஹிப்ருவில் பார்கலீத் என்று கூறப்படுகிறது. பார்கலீத் என்ற ஹிப்ரூ பதத்தை அறபியில் மொழி பெயர்த்தால் அஹ்மத் என்றாவது அல்லது முஹம்மது என்றாவது சொல்லவேண்டும். இவ்விதமாகவே பைபிளை அறபிப் பாஷையில் மொழி பெயர்த்த கிறிஸ்துவர்கள் அஹ்மது என்றே பொருள் கொண்டார்கள். ஆனால் நபிகள் நாயகமவர்கள்பால் துவேஷங் கொண்ட கிறிஸ்துவர்கள் அஹ்மத் என்ற மொழி பெயர்ப்பை மாற்றி விடுவதற்காக பார்கலீத் என்ற பதத்தை கிரேக்க பாஷையில் "பேரீகிலீதாஸ்" என மாற்றினர். இந்த கிரேக்க பதம் ஆறுதல் அளிக்கக் கூடியவர் என்ற கருத்தைக் கொண்டது. எனவே இக்கருத்தை அனுசரித்துத் தமிழில் தேற்றரவாளர் என எழுதி வைத்துவிட்டனர். ஆகவே இஞ்சில் வேதத்தில் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள், நபிகள் நாயகமவர்கள் அஹ்மது அல்லது முஹம்மது என்ற அறபிப் பெயரைக் குறிப்பாக அறிவிக்கக்கூடிய பார்கலீத் என்ற பெயரைக் கூறியிருக்கிறார்கள் என்பதையும், அத்தகைய பார்கலீத் நமது நாயகமவர்கள் தாம் என்பதையும் சந்தேகமறத் தெரிந்துகொள்கிறோம்.

2. அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியவனா யுள்ளேன். அவைகளை இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் கூறியதுபோல் கிறிஸ்துவர்களின் பத்துக் கற்பனைகள், நியாயப் பிரமாணங்களாகிய சகல சத்தியங்கள் முதலியவைகளை மிக மேலான விதத்தில் இத்திரு வேதத்தின் மூலமாகப் போதித்தார்கள்.

3. அவர் சுயமாகப் பேசாமல் தான் கேள்விப்பட்டவைகளையே பேசுவார்கள் என ஹஜ்ரத்ஈஸா (அலை) அவர்கள் கூறியதுபோல் எம்பெருமானார் அவர்கள் தங்களுக்கு இறைவனால் வஹிமூலம் அறிவிக்கப்பட்டவைகளையே ஜனங்களுக்குப் போதித்தார்கள். இதனை இறைவனும் தனது திருமறையில் "இன்னும் அவர் (தன்னுடைய மன) இச்சையினால் பேசமாட்டார். மேலும், அது அவருக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டதேயன்றி, வேறில்லை" (திரு குர்ஆன்-ஸூறத்து நஜ்மு) என கூறி

இருக்கிறான். இவ்வாறாகவே கடைசி காலத்து நபியாகிய நமது நாயகமவர்களைப்பற்றி ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் அறிவித்தபோழ்தும் "என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்" எனக் கூறி இருக்கின்றான்.

4. அவர் வருங்கால நிகழ்ச்சிகளை உங்களுக்கு அறிவிப்பார் என்று ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் கூறியதுபோல் நபிகள்நாயகமவர்கள் பிற்காலத்தில் நிகழக்கூடிய பல விஷயங்களைப் பற்றியும் கூறி இருக்கிறார்கள்.

5. அவர் என்னுடையதிலிருந்து உங்களுக்கு அறிவிப்பதனால் என்னை மகிமைப் படுத்துவார் என்றபடி நபிகள் நாயகமவர்கள் ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள்மீதும், அவர்களது தாயார்மீதும் யூதர்கள் துவேஷமாகவும், கிறிஸ்தவர்கள் பிரியமாகவும், கட்டி விட்டிருந்த பல விஷயங்களை எல்லாம் கண்டித்து ஹஜ்ரத் ஈஸா (அலை) அவர்கள் யார், அவருக்கும் ஆண்டவனுக்கும் இருந்த சம்பந்தம் யாது? அவர்களுடைய அந்தஸ்து எத்தகைத்து? என்று எடுத்துக்கூறி அவர்களைச் சிறந்த நபியென அவர்களின் உண்மையான மகிமையை உலகுக்குரைத்தார்கள்.

6. அவர் நியாயத் தீர்ப்பைக் குறித்து உலகுக்குணர்த்துவார் என்றவாறு, மறுமையின் நியாயத்தீர்ப்பை மறுத்துத் தாங்கள் யாதொரு தண்டனையுமடையாமல் நேராகவே சொர்க்கம் போய் சேர்ந்துவிடுவோம் என்று கூறிக் கொண்டும், ஒருவரை ஒருவர் மேலென்று சொல்லிக்கொண்டு மிருந்த யூதர்களையும், கிறிஸ்துவர்களையும் கண்டித்து நீங்கள் செய்யும் வினையைப்பற்றி நீங்கள் மறுமையில் விசாரிக்கப்பட்டு நியாயந் தீர்க்கப்படுவீர்கள்' என்று உணர்த்தினார்கள். இதனை உண்மையென உணர்ந்து இஸ்லாத்தைத் தழுவியோரும் சொன்னதையே சாதிப்பேன் என்று மர்க்கடப் பிடியாகப்பிடித்துக்கொண்டிருப்போரும் உண்டு.

7. என்றென்றைக்கும் அவர்கள் உடன் இருக்கக்கூடிய சத்திய ஆவி என்றபடி நபிகள் நாயகமவர்களுக்கு அருளப்பட்ட இவ் வேதம் 1300 வருஷங்களாயும், ஒரு சொல் கூட மாறாமல் இன்றளவும் நம்மிடை இருந்து வருகிறது. நிச்சயமாக இனிமேலும் இருந்து வரும். ஆனால் பிற மதஸ்தர்களிடமிருக்கும் வேதங்கள் மாறிவிட்டன என்பதும் தெரிந்த விஷயமே.

8. இவ்வுலகத்தின் அதிபதி என்று கூறியவாறு நபிகள் நாயகமவர்கள் உலகத்திலுள்ள கறுப்பர், வெள்ளையர், மேனாட்டினர், கீழ்நாட்டினர் என்ற பாகுபாடின்றி அனைவர்க்கும் பொதுவான அகில உலக நபியாகத் தோன்றியதோடு தங்கள் ஜீவிய காலத்திலேயே பற்பல தேசத்தினரையும், வகுப்பினரையும் இஸ்லாத்திற் சேர்த்ததுமன்றி மற்ற தேசாதிபதிகளுக்கும், தலைவர்களுக்கும் இஸ்லாமிய அழைப்புப்பத்திரிகையும் விடுத்தார்கள். இதர நபிமார்களோ அவர்கள் குறிப்பிட்ட ஒரு வகுப்பினருக்கே நேர்வழி காட்டவே வந்தார்கள். அவர்கள் செய்த பிரசாரம் முழுதும் அந்த ஒரு சமூகத்தினரிடமே பரவிவந்தது. தற்காலக் கிறிஸ்துவர்கள் உலகத்தையே கிறிஸ்துவ மயமாக்க முயன்றாலும் அவர்கள் முயற்சி அவர்கள் வேதத்தின் கோட்பாட்டிற்கே முரணானதாகும் என்பதை பைபிளே சான்று கூறுகின்றது.

இவ்வாறு கிறிஸ்துவர்கள் குற்றஞ்சாட்டப் படுவார்கள் என்பதற்காகத்தான் அவர்கள் "பார்கலீத்" என்ற பதத்தை மாற்றியதும், தேற்றரவாளர் தங்களிடம் வந்துவிட்டுப் போனதாகவும் கூறி எதிர்வாதம் புரிந்து வேதத்தை மென்மேலும் திரித்துவிட்டனர். எனினும், இக்காலத்திலும் சரி முற்காலத்திலும் சரி பைபிளை உள்ளவாறு அறிந்த அறிவாளிகளும் பாதிரிமார்களும் நபிகள் நாயகமவர்களின் உண்மையினை அறிந்து இஸ்லாத்தைத் தழுவியும் தழுவிக்கொண்டு மிருக்கிறார்கள்.

இஞ்சீல் வேதத்திலிருக்கிற முன்னறிவிப்பைப்போலவே "தௌராத்" வேதத்திலும் முன்னறிக்கைகளிருக்கின்றன. ஹஜ்றத் மூஸா (அலை) அவர்களுக்கு இறைவன் "உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்கு (அதாவது பனூ இஸ்றயீல்களுக்கு) அவர்களின் சகோதரரிலிருந்து (அதாவது ஹஜ்றத் இஸ்மாயீல் அவர்களிலிருந்து) தோற்றுவித்து என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன். நான் அவருக்குக் கற்பிப்பதை எல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சோல்லும் என்

வார்த்தைகளுக்குச் செவி கொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன் (உபாகமம் 18-வது அதிகாரம் 18-வது வசனம்) ஆகவே இந்த வசனத்தில் கூறியவாறு தீர்க்கதரிசியானவரின் வருகையை அந்த பனூ இஸ்ரூயீல்களும் எதிர்பார்த்துக் கொண் டிருந்தனர்.

இதுபோலவே, யஹ்யா(அலை) அவர்களும் நபிகள்நாயக மவர்களைப்பற்றி முன்னறிக்கை செய்திருக்கிறூர்கள். இந்த யஹ்யா (அலை) அவர்களைத்தான் கிறிஸ்துவர்கள் யோவான் என்றும் அருளப்பர் என்றும் கூறி இருக்கிறூர்கள். இவர்கள் கூறியது வருமாறு:—

“நான் ஜலத்தினல் ஞானஸ்நானங்கொடுக்கிறேன். எனக்குப் பின்வருகிறவரோ என்னிலும் வல்லவரா யிருக்கிறூர். அவருடைய பாதரக்ஷைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினுலும், அக்கினியினுலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. அவர் தமது களத்தை நன்ருய் விளக்கி தமது கோதுமையை களஞ்சியத்தில் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்னியிற் சுட்டெரிப்பார்.”

இவ்வசனங்களில் கூறப்பட்டவர், ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள்தான் எனக் கிறிஸ்துவர் கூறுகின்றனர். எனவே இவ்வசனத்தில் கூறப்பட்டவை ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களிடம் உண்டா என்பதைக் கவனிப்பாம். பரிசுத்த ஆவியினல் ஞானஸ்நானம் கொடுப்பார் என யஹ்யா (அலை) அவர்கள் கூறியிருக்கின்றூர்கள். ஹஜ்றத் ஈஸா (அலைஹி) அவர்கள் ஜலத்தினல் ஞானஸ்நானம்கொடுத்ததாகவே பைபிள் கூறுகிறது. (யோவான். 3-வது அதிகாரம் 22, 23-வசனங்களைப் பார்க்க) இதுமாத்திரமல்லாமல் பரிசுத்த ஆவியினல் ஞானஸ்நானம் பெற சிலநாள் காத்திருக்கவேண்டும் என அந்த ஈஸா அலைஹிஸ்ஸலா மவர்களேகூறிப்போய்விட்டதாகவும் அப்போஸ்தலர் 1-வது அதிகாரத்தின் 4 வது வசனம் கூறுவதிலிருந்து தெரியவருகிறது.

அக்னியாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என யஹ்யா(அலை)அவர்கள் கூறி இருக்கிறூர்கள். சன்மார்க்கத்தை எதிர்ப்போரைக் கோபாக்கினிகொண்டு யுத்தம் பண்ணி அவர்களை அடக்கி அவர்களுக்கு நேரான வழியை காட்டுவார் என்பது அதன் கருத்தாகும். இக் கருத்துப்படி ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்கள் செய்யவே இல்லை என்பது உலகப் பிரசித்தம்.

தூற்றுக்கூடை அவர் கையிலிருக்கிறது. அவர் தமது களத்தை நன்ருக விளக்கித் தமது கோதுமையைக்களஞ்சியத்திற் சேர்ப்பார். பதரையோ அவியாத அக்கினியிற் சுட்டெரிப்பார் என யஹ்யா (அலை) அவர்கள் இயம்பியுள்ளார்கள். அதாவது தமது சிஷ்யகோடிகளில் கலந்துள்ளமுனபிக்குகளை இன்னர் எனத் தெரிந்து அவர்களை விலக்கி உண்மையாகவே இறைவனுக்குப் பணியும் நல்லடியார்களைத் தமது சிஷ்யகோடிகளிற் சேர்ப்பார் என்பதும், நயவஞ்சகர்களைத் தலையெடுக்கவொட்டாமல் செய்து விடுவார்கள் என்பதும் இதன் கருத்தாகும்.

ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களைப் பின்பற்றியவர்களோ மிகச்சிலர். அதிலும் கிறிஸ்தவர்கள் கையிலிருக்கிற இஞ்சீல் வேதம் என்னும் நூலின் கூற்றுப்படி அற்பக்காசுக்கு ஆசைப்பட்டு யூதர்களிடம் ஹஜ்றத் ஈஸா (அலை) அவர்களின் சிஷ்யன் ஒருவன் காட்டிக்கொடுத்து விட்டதாகவும், இயேசுநாதரை யூதர்கள் பிடித்ததும் அவர்கள் சிஷ்யர்கள் ஓடிவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

நமது நபிகள்நாயகம் (ஸல்) அவர்களோ பரிசுத்த ஆவியாகிய திருகுர்ஆனின் போதனையைக் கொண்டும், அக்கினியாகிய யுத்தத்தைக் கொண்டும் ஜனங்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து நேர்வழி காட்டி இருக்கின்றூர்கள். தவிர தங்களிடமிருந்த ஆயிரக்கணக்கான் சிஷ்யர்களுடன் நயவஞ்சகமாக வேஷம் போட்டு வந்து சேர்ந்துகொண்ட முனபிக்குகளையும் இன்னர் இன்னர் எனப் பிறித்தறிந்து, அவர்களைக் கண்டித்தடக்கி அவர்களைத் தலை எடுக்கவொட்டாமல்செய்ததோடு, உண்மையிலேயே அல்லாஹ்வுக்குப் பயந்து வணங்கிய நல்லடியார்களைத் தமது சிஷ்யகோடிகளில் சேர்த் திருக்கிறூர்கள் எனவே ஹஜ்றத் மூஸா, (அலை) யஹ்யா (அலை) ஆகிய நபிமார்கள் முன் எச்சரிக்கையாகக் கூறிய தீர்க்கதரிசியானவர் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே யாகும். இது

போலவே இன்னும் பல நபிமார்களின் முன்னறிக்கைகளைக் குறிப்பிடலாமெனினும் இடமின்றி விடுத்தனம். எல்லாம்வல்ல இறைவன் நமக்கு நல்லறிவைத்தந்தருளி உண்மையான மார்க்கத்தைப் பின்பற்றி ஒழுகக் கிருபை செய்வானாகவும். ஆமீன்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் குணாதிசயங்கள்

எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் நல்லொழுக்கம், சற்குணம், மனத்தூய்மை, சத்தியம், இரக்கம், மன உறுதி, தாழ்மை, கண்ணியம், நாணம், முகமலர்ச்சி, பொது நலம், நியதி, பராக்கிரமம், பொறுமை, ஆண்டவன்மீது பூரண நம்பிக்கை ஆகிய எல்லா குணாதிசயங்களும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தன.

எளிய வாழ்க்கை

நபிகள்பிரான் (ஸல்) அவர்களின் இல்லற வாழ்க்கையை ஊன்றி கவனித்தோமானால், அது மிக எளியதாகவே யிருந்ததென்பது விளங்குகிறது. மண்சுவரினால் கட்டப்பட்டு பேரீச்ச இலைகளினால் வேயப்பட்ட சிறிய அறைகளிலேயே நாயகம் (ஸல்) அவர்கள் வசித்துவந்தார்கள். ஆகாரத்தில் குறிப்பிட்ட ஓர் உணவு வேண்டுமென வைத்துக்கொள்வதில்லை. அவர்களுக்கு முன்பு எந்த உணவு கொண்டுவந்து வைக்கப்பட்டதோ, அதையே அவர்கள் திருப்தியாய் புசிப்பார்கள். எது கிடைத்தாலும் அதில் பூர்ண திருப்திகொள்வார்கள். பலவிதமான உணவுகள் தம்முன் கொண்டுவரப்பட்டால், அவற்றில்தங்களுக்கு பிரியப்பட்டதை மட்டும் புசிப்பார்கள். உணவுகள் ஆண்டவனால் அருளப்பட்டதாதலால் அதை இகழ்வது மில்லை, உணவுப்பொருளின் மீது ஆசைவைப்பின் உலக இச்சைப் பெருகுமாதலால் அதைப்பற்றிப் புகழ்வது மில்லை. தெள்ளாத வார்க் கோதுமையினால் செய்யப்பட்ட ரொட்டியே விசேஷமாய் அவர்களது உணவாயிருந்துவந்தது. தேன், பேரீச்சம்பழம், வெள்ளரிக்காய், ஜைத்தூன் எண்ணெய், சுரக்காய், ஹல்வா முதலியவைகளையும், நெய், பால், பேரீச்சம்பழம் இவைகளை கொண்டு அரபிதேசத்தில்செய்யப்படும் ஓர்வித ஆகாரத்தையும் பிரியமாய் உட்கொள்வார்கள். மாமிச வகைகளில் ஆடு, ஒட்டகம், கோழி, மச்சம் முதலியவைகளையும் புசிப்பார்கள். எனினும், மிகுதியான நாட்கள் பட்டினியிலேயே கடந்தன. வயிறு நிரம்பியிருப்பதைவிட பசித்து யிருப்பதையேநாயகமவர்கள் பிரியப்படுவார்கள். அவ்வாறு பசித்து யிருப்பதைப்பற்றி எம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் யாராவது கேட்டால் "உலகத்தோடு எனக் கென்ன சம்பந்தம்? எனக்கு முன்வந்த தீர்க்கதரிசிகளான என் சகோதரர்கள் என்னைவிட அதிககஷ்டங்களை சகித்து காலங் கழித்திருக்கிறார்கள்" என்று விடைப்பகருவார்கள். மேலும் உடையிலுங் குறிப்பானதோர் உடை அணிந்துகொள்வதென்ற வழக்கமில்லை. அஃது சாதாரணமாகவே யிருந்துவந்தது. அநேகமாக முரடான வஸ்திரங்களையே அணிந்துகொள்வார்கள் ஒன்றுக்கதிகமான ஆடைகளை வைத்துக் கொள்வதில்லை. ஆடம்பரமான உடைகளை அவர்கள் விரும்புவதில்லை. ஒட்டுப்போட்டு தைக்கப்பட்ட உடைகளையும் அவர்கள் அதிகமாக அணிந்துகொள்வார்கள். பல நிறமான உடைகளை யணிந்திருந்தாலும், வெண்மை நிறமான உடை யணிவதிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அதிக பிரியமிருந்து வந்தது.

பரிசுத்தம்

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களது அந்தரங்க ஆத்மார்த்தமானது தூய்மையாகவும் பரிசுத்தமாகவு மிருந்தது போலவே, வெளிரங்க நடையுடை பாவனை மிகப் பரிசுத்தமானதாகவே யிருந்துவந்தன. "ஆண்டவன் தூய்மையானவன். அவன் சுத்தத்தையும், தூய்மையையும் விரும்புகின்றான்" என்று சொல்வார்கள். ஒருவர் ஒரு சமயம் அழுக்கடைந்த வஸ்திரங்களுடன் நம்பெரு

மானார் (ஸல்) அவர்கள் திருச்சமுகத்துக்கு வந்தபோழ்து, அன்னவரை நோக்கி, "உமக்கு ஏதேனும் பொருள் வருவாயுண்டா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் 'ஆம்' என விடையிறுத்தார். எனவே, நபிகள் திலகமவர்கள் அன்னவரை நோக்கி "ஆண்டவன், பாக்கியத்தைக் கொடுத்திருந்தால் அதை தோற்றத்தினாலும் வெளிப்படுத்தவேண்டும்" (அதாவது பரிசுத்தமான தூய உடையணிய வேண்டும்) என்று உபதேசித்தார்கள்.

சுகாதாரத்துக்கு பற்கள் சுத்தமாயிருக்க வேண்டியது அவசியமென்பதைக் கருதி நபி பிரான் (ஸல்) அவர்கள் "மிஸ்வாக்"கினால் (பற்குச்சியினால்) பல் துலக்குவார்கள். தோழர்களுக்கும் இவ்வாறே போதிப்பார்கள். வாசனைத் திரவியங்கள்மீது எம்பெருமானாரவர்கட்கு விசேஷ உவப்பிருந்து வந்தது. எவராவது தமக்கு வாசனைப் பொருளை பரிசாக அனுப்பி வைத்தால் அதனை அன்போடு பெற்றுக்கொள்வார்கள்.

மன்னித்தல்

நபிகள் பிரான் (ஸல்) அவர்கள் தம் வாணாள் முழுதும் எவரிடத்திலும் பழி வாங்கியதே கிடையாது. தங்களைக் கொலைசெய்து விடத்துணிந்த விரோதியையுங்கூட மன்னித்தருளியுள்ளார்கள்.

ஒரு சமயம் நபிகள் பெருமானாரவர்கள் ஒரு யுத்தத்தினின்று திரும்பி வருங்கால், தங்கள் வாளாயுதத்தை ஒரு மரக்கிளையில் தொங்க விட்டு வைத்து, அந்நிழலில் சயனித்து இளைப்பாறிக்கொண்டிருந்தார்கள். அது சமயம் பகைவனொருவன் நபிகள் பெருமானாரை கொல்வதற்கு இஃது நல்லதொரு சந்தர்ப்பமெனக் கருதி, அவ்வாளைத் தன் கையிலெடுத்துக்கொண்டான். அச்சமயம்எம்பெருமானாரவர்கள் (ஸல்) விழித்துக்கொண்டு, தம் பக்கத்தில் விரோதி யொருவன் உருவிய வாளோடு நிற்பதைக் கண்டார்கள். அன்னவன் நபிகள் திலகம் (ஸல்) அவர்களை நோக்கி "முஹம்மதே! (ஸல்) இப்பொழுது உம்மை என் தாக்குதலினின்று எவர் காப்பாற்றக் கூடும்?" என்று கேட்டான். உடனே நபிகள் பெருமானாரவர்கள் எழுந்து "அல்லாஹ்! (காப்பாற்றுவான்)" என்று பதில் அளித்தார்கள். நாயகமவர்களின் திருவாயினின்று வந்த இத்தீர மொழியை கேட்டவுடன் அப்பகைவனின் சரீரம் நடுங்கிற்று. அவன் கைகளும் உதறலெடுத்துக்கொண்டு வாளாயுதமானது கீழே நழுவி விழுந்துவிட்டது. உடனே நபிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் அவ்வாளை தம் கரத்திலேந்திகொண்டு "இப்பொழுது உன்னைக் காப்பாற்றுவது யார்?" என்று அவனை நோக்கி வினவினார்கள். அதற்கவன் உடல் நடுங்கி, நாக்குழறி "ஒருவருமில்லை" என்று பதில் மொழிந்தான். எனவே கருணைக் கடலாகிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னவனை மன்னித்தருளி விட்டார்கள்.

நீதி

எம்பெருமான் (ஸல்) அவர்கள் மிகுந்த அன்பும் இரக்கமுள்ளவர்களா யிருந்தும் நீதி வழங்குவதில் சிறிதும் பாரபக்ஷமில்லாதிருந்தார்கள் பெருமானவர்கள் மக்காவிலிருக்கும் பொழுது ஜனங்கள் தங்களுடைய வழக்குகளை அவர்களிடமே தீர்த்துக்கொள்வார்கள் மதீனா வந்ததின்பின் யூதர்களும், விக்கிரக வணக்கத்தாரும் தங்களுடைய விவகாரங்களை நபிபிரான் அவர்களிடமே முடிவு செய்து கொள்வார்கள். யூதர்களுக்கு பெருமான் அவர்களிடமும், இஸ்லாத்தின் மீதும் அளவுகடந்த வெறுப்பிருந்தும் அவர்களின் நீதியில் யூதர்களுக்கு சந்தேகமில்லா திருந்தது. பெருமானவர்கள் ஞாயம் வழங்குவதில் முஸ்லிமென்றோ யூதனென்றோ யாதொரு வித்தியாசமும் பாராட்டுவதில்லை.

மக்கா ஜெயத்திற்குபின் பெருமானவர்கள் 20 நாள் வரை தாயிபை முற்றுகை செய்து அதை ஜெயிக்காமல் திரும்பி விட்டார்கள் அப்பொழுது "ஸகர்" என்னும் பெயருள்ள அரபியத் தலைவரொருவர் சேனையைத் திரட்டிக்கொண்டு தாயிபை பலமாக முற்றுகை செய்தார் அவருடைய முயற்சியினால் தாயிப் வாசிகள் சரணமடைந்து நபிபிரான் அவர்களுடன் உடன்படிக்கைசெய்துகொள்வதாக சம்மதித்தார்கள் "ஸகர்" இவ்விஷயத்தை பெருமானவர் களிடம் அறிவித்தார் அச்சமயம் "தகிப்" வாசி யொருவரும் பனூஸலீம் கூட்டத்தாரும் பெருமான் அவர்களிடம் வந்து ஸகரின்மீது இரண்டு குற்றத்தைச் சுமத்தினார்கள் "ஸகர்" என்னும் தலைவர் தாயிப் விஷயத்தில் பெருமான் அவர்களுக்கு

மேற்கண்டவாறு மிகுந்த உதவி செய் திருந்தும் ஞாயத்தை உத்தேசித்து இரண்டு விஷயத்திலும் அவருக்கு விரோதமாகவே தீர்ப்பளித்தார்கள்.

"கைபர்" யூதர்களிடம் மாசூல் வசூல் செய்ய வேண்டியதற்காக அப்துல்லாஹிப்னு ஸஹல் என்பவர் கைபருக்குச் சென்றிருந்தார் அவருடன் அவரின் சிறிய பிதாவின் குமாரர் "மஹீசத்து" என்பவரு மிருந்தார் ஒருநாள் தெருவழியாய் அப்துல்லாஹ் போய்க்கொண்டிருக்கையில் ஒருவன் அவரை வெட்டி ஒரு குழிக்குள்ளே போட்டுவிட்டான். "மஹீசத்து" என்பவர் பெருமான் அவர்களிடம் வந்து அப்துல்லாஹ்வை யூதர்கள் கொன்றுவிட்டதாக முறையிட்டார் அப்பொழுது பெருமானவர்கள் அவரை நோக்கி யூதர்கள்தான் அவரைக் கொன்றார்களென்று நீர் சத்தியஞ் செய்யக்கூடுமா? என்று கேட்க அவர் வெட்டப்பட்டதை என் கண்ணினால் பார்க்கவில்லை. என்று பதிற் சொன்னார் அப்படியானால் யூதர்களை சத்தியஞ்செய்யச் சொல்லலாமா! என்று நாயகம் வினவினார்கள். யூதர்களுடைய சத்தியத்தை நம்பமுடியாது என்று விடைபகர்ந்தார். கைபரில் யூதர்களைத் தவிர வேறு எக் கூட்டத்தாரு மில்லாதிருந்தும், யூதர்களே அப்துல்லாஹ்வைக் கொன்றார்கள் என நிச்சயமாய்த் தெரிந்திருந்தும் நேரான சாக்ஷிய மில்லாததால் யூதர்களின்மீது குற்றத்தைச் சுமத்தாமல் கொல்லப் பட்டவரின் குடும்பத்தாருக்கு (பைத்துல்மால்) பொது நிதியிலிருந்து 100 ஒட்டகங்களை நஷ்டஈடாக பெருமானவர்கள் கொடுத்தார்கள்.

பெருமா னவர்கள் தங்கள் குமாரத்தியாரான ஹஜ்ரத் பாத்திமா (றலி) அவர்கள்மீது விசேஷ அன்பு வைத்திருந்தார்கள் பாத்திமா (ரலி) அவர்கள் குடும்ப வேலைகளிலீடு பட்டு அம்மியி லரைத்துவந்த தாலும், தண்ணீர் மொண்டு வந்ததாலும் அவர்கள் கையிலும் சரீரத்திலும் காய்ப்பு உண்டாயிருந்தது அவர்கள் அதிகவேலையினால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண் டிருந்தார்கள் இச்சமயம் ஒரு யுத்தத்தி லிருந்து அடிமைகள் கொண்டுவரப் பட்டிருப்பதாகக் கேள்விபட்டு பாத்திமா நாயகி அவர்கள் பெருமான் அவர்களின் சமுகத்திற் சென்று வீட்டு வேலைக்காக ஒரு பெண் அடிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள் ஹஜ்ரத் பாத்திமா (ரலி) அவர்களிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகுந்த அன்புவைத்திருந்தும், உண்மையில் அவர்கள் மிகக்கஷ்டப் படுகிறார்கள் என்று தெரிந்திருந்தும் அவர்களுக்கு என்னவிடை கூறினார்கள் என்பதை கவனியுங்கள் "பத்ரு யுத்தத்தில் உயிர்த் துறந்தவர்களின் அனாதைக் குழந்தைகளுக்கு (அடிமைகளை) கொடுக்கவேண்டிய திருக்கிறது" என்று சொல்லிவிட்டார்கள்.

பெருமானவர்கள் கடைசிநேரத்திலும் நீதி வழங்குவதை மறக்கவில்லை முஸ்லிம்களுக்கு இறுதியாகப் பிரசங்கம் செய்தபொழுது அவர்களை நோக்கி நான் எவருக்காவது தீங்கிழைத்திருந்தால் அதற்கு ஈடுசெய்ய இப்பொழுது தயாரு யிருக்கிறேன் நான் யாருக்காவது கடன் பட்டிருந்தால் என்னிடத்திலுள்ளவைகளைக் கொண்டு அதைத் தீர்ப்பதற்கு ஆயத்தமாகயிருக்கின்றேன். என்று கூறினார்கள் அப்போது மூன்று திரஹம் தமக்குக் கொடுக்க வேண்டியதா யிருக்கிறதென்று ஒருவர் சொல்ல உடனே அதைக் கொடுக்கும்படி செய்தார்கள்.

நன்றி செலுத்தல்

நம்மாசிகை தமிழகத்து முஸ்லிம்களிடையே செய்துவரும் சேவையையும், அதுசன்மார்க்கத்தைப் பரவசச்செய்து வருவதையும் நன்குணர்ந்து பத்திரிகையின் அபிவிர்த்தியைக் கோரி கூத்தானல்லூர் வாசியும், சென்னை, பினங் பிரபல வியாபாரியுமாகிய ஆலிஜனாப் S. E. S. இஸ்மாயீல் கனி ராவுத்தர் அவர்கள் வருஷவாரியாக ரூ. 50 நன்கொடை அளிப்பதாக வாக்களித்திருக்கிறார்கள் அல்லாஹ் தஆலா அவர்களுக்கு இதன் நற்பயனை அளிப்பானாகவும்.

(ப—ர்)

ஆராய்ச்சி மேடை

மௌலிது ஷரீபு ஓதுவது விக்கிரக வணக்கமாம்!

நபிகள் திலகம் ரஸூல் (ஸல்) அவர்கள் மீது விசுவாசங்கொண்டு மனமுவந்து முஸ்லிம்கள் ஓதிவரும் மௌலிது ஷரீபானது நம் சன்மார்க்கத்தில் அனுமதிக்கப் பட்டதும், புகழப்பட்டதும், நன்மை யளிக்க வல்லதுமான புண்ணிய காரியமென்பது வெளிப்படை. மேலும் அம்மாண்பு மிக்க மௌலிது ஷரீபில் கூறப்படும் வசனங்களும், பாக்களும் நபிகள் நாயகம் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்மீது ஓதப்படும் ஸலவாத்தின் தாத்பரியத்தை யுடையதாயு மிருக்கின்றன. இஃது நன்மையினை யளிக்கும் நற்காரியங்களில் மிகச் சிறந்ததாகு மென்பதில் எவருக்கும் சந்தேக மிருத்தல் முடியாது. நபிகள் நாயகத்தின் மீது அன்புகொண்டு மௌலிது ஷரீபு ஓதுவதால் அல்லாஹுதஆலாவுடைய திருவருளும், நாயகத்தின்மீது ஓதப்படும் ஸலவாத்தின் பிரதிபலனும், நற்பாக்கியமும் நம் முஸ்லிம் பக்தர்கள் அடையப் பெறுவார்களென்பது திண்ணம். இவை சம்பந்தமான சகல விபரங்களையும் இமாம் ஜலாலுத்தீன் ஸுயூத்தீ (ரஹி) அவர்கள் இதற்காக இயற்றிய தமது கிரந்தத்தில் விளக்கமாகக் கூறி யிருக்கின்றார்கள்.

மேலும் சன்மார்க்கக் கல்வியும், மார்க்கப் பற்றும், நல்லொழுக்கமுமுடைய உண்மை பக்தியுள்ள புண்ணியவான்களும், உத்தம நற்குணமுடைய நல்லடியார்களும் இம்மௌலிது ஷரீபை நடத்தி வருகிறார்களென்பது வெளிப்படை. இதைப்போலவே, சன்மார்க்க ஞானமும், கல்வியும் போதிய வாறில்லாத காரணத்தால் மார்க்க ஏவல் விலக்கல்களாகிய சட்ட திட்டக் கட்டளைகளை சரிவர உணராது, மனம் போனபடி சிறிய பெரிய பாப காரியங்கள் சிலவற்றைப் புரிந்துழலும் சாதாரண மக்களிற் பலரும் இப்புண்ணிய காரியத்தை பக்தி சிரத்தையுடன் செய்து வருகிறார்கள். இது புகழத்தக்க நற்கரும மென்பதில் சந்தேகமில்லை. பாபமான காரியங்கள் புரிவோரை அப்பாப காரியங்களை விட்டு விலக்குவது அறிஞர்களுடைய கடமைதான். ஆகவே அத்தகைய சாதாரண ஜனங்கள் புரிந்துவரும் மாபெரும் புண்ணிய காரியமான மௌலிது ஷரீபை நடத்தி வருவதுடன், பாபமான சகல துற்கிரியைகளை விட்டுவிட்டு அவசியம் நீங்கி உத்தமர்களாக வேண்டுமென்று நல்லுபதேசம் செய்யவேண்டியதே சீர்திருத்தத்தின் நன்முறையாகு மென்பதை பகுத்தறிவுள்ள எவரும் ஒத்துக்கொள்ளாதிருத்தல் முடியாது. இந்நன்முறையை விடுத்து, மௌலிது ஓதும் அந்த சாதாரண முஸ்லிம்மக்களை கடுமொழிகளால் கண்டித்து நன்மையையும் புரியவேண்டாமென கண்டிப்பது ஒருபோதும் சீர்திருத்த மாகாதென்பது பிரத்தியக்ஷம். நியதி இங்ஙனமிருக்க, தா. இ. ஆசிரியரான பா. தா. என்பார், பெரும்பாவமான காரியங்களில் ஈடுபட்டுழலும் முஸ்லில் நபர்கள் "மௌலிது ஷரீபு ஓதி கொண்டாடி வருவது வீண் விக்கிரக வணக்கமேயாகும்" என்றும் அத்தகைய பாவிகளும் தங்களை முஸ்லிம்களென்றே கூறித் திரிகின்றனர் என்றும் தாக்கி இழிவுபடுத்தி வருகின்றார். இந்த முரணான கூற்றானது நம் சன்மார்க்கப் போதனைகளுக்கு எத்துணை தூரம் விகற்பமாயிருக்கிறதென்பதை யாவருமறிவர்.

மேலும் பொதுவாக விக்கிரக வணக்கமென்பது ஏக தெய்வ வணக்கத்தைத் தவிர்த்து, உலோகம், கல், மரம்போன்ற பொருட்களால் செய்யப்பட்ட உருவச் சிலைகளை வணங்குவதற்குச் சொல்லப்படும். இத்தீயச் செயலை மிகக் கொடிய ஷிர்க்கென்றும், குபிரென்றும் நமது திருமறை பலவிடங்களிலும் விளக்கமாக எடுத்தோதுகிறது. மேலும் அல்லாஹுதஆலா அத்தகைய ஷிர்க்கான செயல்களை மன்னிக்க மாட்டானென்றும், அஃதல்லாத மற்ற பாவங்களைதான் நாடியவர்களுக்கு தன் கருணையால் மன்னித்து விடுவானென்றும் குர்ஆனில் துலக்கமாக கூறப்பட்டிருக்கிறது. நம் பரிசுத்த இஸ்லாத்தின் இச்சித்தாந்தத்திற்கு முற்றும் முரணாக

பா. தா. என்பார் பாபக்காரியம் புரிந்துழலும் முஸ்லிம்களால் நடத்தப்படும் மவுலிது ஷரீபானது ஷிர்க்கான காரியமென்றும், அத்தகைய காரியத்தைப் புரிவோர் முஸ்லிம்கஎல்லவென்றும் வரையத் துணிந்துவிட்டது தான் மிக வியப்பாகயிருக்கிறது. பாபக்காரியம் செய்கிறவர்களை பாபிகள் என்று மட்டும் தான் கூறலாமே யல்லாமல் "முஷ்ரிக்" களென்றும் முஸ்லிம்களல்லா என்றுங் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? ஆகவே இனியேனும் உண்மை யின்னதென்பதை யுணர்ந்து பா. தா. இவைகளை யெல்லாம் திருத்தியமைப்பதோடு தாமும் தவ்பாச் செய்து ஒழுக முன் வருவாராக?

நபிகள் நாயகமவர்கள் ஒட்டகம் ஒட்டும் தொழிலில் அமர்த்தப் பட்டார்களாம்.

சோதரீர்!

பா தாவூத் சாவால் நாயக வாக்கியம் என்ற ஒரு சிறுநூல் வெளியிடப்பட்டு விற்கப்பட்டு வருகிறது அந்நூலின் முகத்தில் நாயகம் (ஸல்) அவர்களின் சரித்திரச் சுருக்கமும் காணப்படுகிறது அதிலோ நாயகமவர்களின் உண்மைச் சரிதைக்கு மாற்றமாய் பல விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன அவைகளில் சிலவற்றை கூறுவாம்.

ஷை நூலின் 11-ம் பக்கத்தில்

> நபி பெருமானாருக்கு வயது 25 ஆன போது அபூதாலிபின் சிபாரிஷின்மேல் ஒரு பணக்கார விதவையான கதீஜா அவர்களிடம் ஒட்டகம் ஒட்டும் தொழிலில் எம்பெருமானார் அமர்ந்து அம்மாதின் வியாபார சம்மந்தமாக காருவானை ஷாம் (சிரிய்யா) தேசத்திற்குக் கொண்டு போனார்கள்.

என்று எழுதி யிருக்கிறார்.

இஃது அபாண்டமான பொய்யாகுமென்பதில் சந்தேகமில்லை. நாயகம் (ஸல்) அவர்கள் கத்தீஜா நாயகி அவர்களின் வர்த்தகத் தொழிலில் பங்காளியாக அமர்வதற்கு முன்னமே வர்த்தகத் தொழிலில் ஈடுபட்டிருந்தார்கள். வர்த்தகத் தொழிலுக்கு முக்கியமாக யிருக்கவேண்டிய அம்சங்களில் நம்பிக்கை, வாக்குண்மை ஆகியவைகள் நாயகம் அவர்களிடம் சிறந்து விளங்கிற்று.

இச் செய்தியை கதீஜா நாயகி அவர்கள் தெரிந்து தமது வர்த்தகத் தொழிலை நடத்த வேண்டு மென்றும், கிடைக்கும் லாபத்தில் இதற்குமுன் மற்றவர்களுக்குக் கொடுத்து வந்ததைப் பார்க்கிலும் இரட்டிப்புப் பங்கு தருவதாகவும் கதீஜாநாயகி அவர்களே தூதனுப்பித் தெரிவித்தார்கள். நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் சிறியதந்தையான அபூதாலிப் அவர்களுடன் இவ்விஷயத்தைக் கலந்தாலோசித்த பின்னரே அவ்வியாபாரத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஷாம்தேசம் சென்றார்கள் இதுதான் உண்மை சரித்திரம் இதன் சகல விபரங்களையும் சரித்திர ஆசிரியர்கள் விளக்கி யிருக்கின்றார்கள் அங்கு எவ்வித சந்தேகமும் ஏற்படுவதற்கு இடமில்லை.

கதீஜா நாயகி அவர்களுக்கும் எம்பிரான் (ஸல்) அவர்களுக்கு மிடையில் யேர்பட்ட ஒவ்வொரு சம்பவமும் மாசற்றதாயும், மாட்சிமையுடையதாயு மிருக்கின்றன. அச்சரிதையைப் படிக்கும் ஒவ்வொருவரும் நாயகமவர்களின் மேன்மையையும் நபித்துவத்தின் உண்மையையும் தெரிந்து கொள்கின்றனர்.

அவ்வரும் சம்பவத்தை பா. தா. திரித்து உண்மைத் தூதரவர்களின் மாட்சிமைக்கும், கண்ணியத்திற்கும் தகாதவாறு "அவர்கள் அபூதாலிப் அவர்களின் சிபாரிஷின்பேரில் ஒருபணக்கார விதவையான கதீஜா (ரலி) அவர்களிடம் ஒட்டகை ஒட்டும் தொழிலில் அமர்ந்தார் களென்று இழிவுபடுத்தி எழுதியுள்ளார். உண்மைச் சரித்திரத்தை நன்கறியாதவர்கள் இவ்வாறு தவறிழைத்து விடுவதனால்தான் அதை ஆதாரமாகக் கொண்டு அன்னிய மதத்தினர் நம் நாயகம் (ஸல்) அவர்கள் விஷயத்தில் தாறுமாறாக எழுதி விடுவதற்கு யிடங் கொடுக்கிறது.

இஸ்லாத்தின் உண்மைச் சரிதையை உள்ளபடி அறியாதவர்களும் இஸ்லாத்தின் ஊழியஞ் செய்து வருவதாக நடித்து வருபவர்களுமான பா. தா., ஹாபிஸ் போன்றோர் தங்கள் கூற்றுக்குச் சரித்திரச் சான்று உண்

டென்பார்களாயின் தயங்காமல் வெளியிட முன்வருவார்களாக. இன்றேல் அதனையும் திருத்தி சத்தியத் தூதரவர்கள் பால் இழைத்த தவறுக்கு வருந்துவார்களாக.

தவப்பயனால் தான் நுபுவ்வத் கிடைத்ததாம்!

மேல்படி புத்தகம் 13-ம் பக்கத்தில் "40 பிராயம் வரையில் அல்லும் பகலும் மக்கமா நகருக் கருகிலுள்ள ஹிரா என்னும் மலைக் குகையில் தனித்து விழித்திருந்து தவம் புரிந்து வந்தார்கள். அல்லும்பகலும் அகோர தவம் புரிந்து வந்ததனால் 'இறுதியில்' ஆண்டவனருளால் நபிப்பட்டத்தை (நுபுவ்வத்தை)ப்பெற்றுக் கொண்டார்கள்" என்று எழுதியிருக்கின்றார். பா. தா. வினுடைய இவ் வாக்கியங்களிலிருந்து நபிகள் நாயகமவர்கள் அகோரதவம் புரிந்ததனால்தான் நபிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார்கள் என அவர் நம்பிக்கொண் டிருப்பதாகத் தெரிய வருகிறது. நபிப்பட்டமென்பது ஆண்டவனருளால் அளிக்கப்படுவதா? அல்லது தங்கள் சுயப்பிரயாசை முயற்சியால் அடையப் பெறுவதா? என்பதும் (கஸபியா? வஹ்பியா என்பதும்) கூட தெரியாத ஒருவர் மதத்துக்குத் தலைமை வகிக்கவும், வேதத்துக்கு வியாக்யானம் செய்யவும் முன்வந்தது தான் வியப்பைத் தரத்தக்கதா யிருக்கின்றது.

"ஆதம் மண்ணிலும் தண்ணீரிலுமாக யிருக்கும்போதே (அதாவது ஆதம் (அலை) அவர்களை அல்லாஹு தஆலா சிருஷ்டிக்கும் முன்பே) நான் நபியாக யிருந்தேன்" என நபிகள் நாயக மவர்கள் திருவாய்மலர்ந் தருளி யிருப்பதை நாயக சரித்திரம் எழுத முற்பட்ட இவர் அறிந்துகொள்ள வில்லை போலும்! ஆனால் காதியானிகளும் அஹ்மதியாக்களும் "நேர்வழியில் செல்லக் கூடிய ஒவ்வோர் உண்மை முஸ்லிமும் வஹீயை அடைதல் கூடும்" என்று எழுதியிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்கள் அகோர தவங்களினால் நபிப்பட்டத்தையும் அதற்குரிய வஹீயையும் அடையக்கூடுமென்று நம்பி யிருப்பதாகவே தெரிய வருகிறது. இதையனுசரித்து மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியை நபியென்றும் உறுதிக்கொள்கின்றனர். பா. தா. வும் ஜவாஹிருல்புர்கான் முதல் வெளியீடு 24-ம்பக்கத்தில் "நேர்வழியில் செல்லக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமும் வஹியை அடையக் கூடுமென்று வரைந்திருக்கின்றார். அதற்கிணங்கவே நபிகள் நாயகமவர்களும் அகோர தவம் புரிந்த காரணத்தினாலேயே நபிப்பட்டம் அருளப் பெற்றார்களென்று எழுதத் துணிந்தாரென்பது நன்கு புலனாகி விட்டது. இது முற்றுந் தவரான தென்பதும், காதியானிகளின் கொள்கை யென்பதும் வெள்ளிடைமலை. ஆகவே இவைகளையும் பா. தா. திருத்தி தம் நூற்களை ஒழுங்குப்படுத்திக் கொள்வாராக.

ஜவாஹிருல் புர்கான்

இந்நூல் யாது என்பது வாசகர்கள் அறிந்ததே. அதுதான் பா. தா. வால் குர்ஆன் வியாக்கியானம் என வெளியிடப்பெற்ற நூல். காதியானி முகம்மது அலி M.A.LL.B. எழுதிய ஆங்கிலய மொழி பெயர்ப்பைத் தழுவி எழுதிய நூல். அதில் பல தவரான மொழி பெயர்ப்பும், வியாக்கியானமும் மலிந்துகிடக்கின்றது அத்தவறுகளில் சில "குப்ரை" உண்டாக்கக் கூடியனவாகவு மிருக்கின்றது இவைகள் யாவும் நிரூபிக்கப்பட்டவைகளே இத்தகைய நூலை ஆபாச நூலென்று எழுதியதற்கு பா. தா. சீறி விழுகின்றார். அவர் அதிலுள்ள தவறுகளைத் திருத்தி விடுவதாக அறிவித்திருந்தும் அதை யெல்லாம் மழுப்பிவிட உத்தேசிக்கிறார் போலும் இதற்குத் தக்க பரிகாரந்தேட வேண்டியது ஒவ்வொரு முஸ்லிம்களின் மீது கடமையாகும்.

யௌமுந்நபி (ஸல்) அவர்கள் தினக்கொண்டாட்டம்

ரபீ உல் அவ்வல் மாதம் 12-ந்தேதி 8—8—30 கொண்டாட்ட தினமாக ஏற்பாடு செய்யுங்கள்.

அன்று ஒவ்வொரு ஊரிலும் மகாநாடு கூட்டுங்கள்.

நமது "ஹிபாஜத்துல் இஸ்லாம்" சங்கத்தாரால் வெளியிடப் பெற்றிருக்கும் "நபிகள் திலகம்" என்னும் நூலை எல்லோர்க்கும் அன்றைய தினம் வினியோகஞ் செய்யுங்கள். யௌமுந்நபியை நபிகள் நாயகத்தின் மாட்சியை பிரகடனப்படுத்த ஒதுக்கி வையுங்கள்.

நாயகமவர்களின் சிரப்பைப் பரப்புவதற்கு இதுவே தக்க சமயமென்று உணருங்கள்.

நபிகள் நாயகம் அவர்களின் நன்நடக்கைகளையும், போதனைகளையும் கடைப்பிடியுங்கள்.

நமது பத்திரிகை கிடைக்கு மிடங்கள்:—

சிங்கப்பூர்

மெஸர்ஸ் **A. M.** அப்துல்லாஹ் சாஹிப் **& Co,**
77, மார்கட் ஸ்டிரீட்.

ஜனப் **K. V.** முகம்மது சுல்த்தான் அவர்கள்,
91, மார்க்கட் ஸ்டிரீட்.

மெஸர்ஸ் பிரிட்டிஷ் **&** அமெரிக்கன் நியூஸ் கம்பெனி,
18, பாட்டரி ரோடு.

மெஸர்ஸ் **M. M.** துல்பகிர் கம்பெனி,
34, நார்த் பிரிட்ஜ் ரோடு.

கோலாலம்பூர்

மெஸர்ஸ் **M. M.** துல்பகிர் கம்பெனி, மார்கட் ஸ்டிரீட்.

கிள்ளான்

ஜனப் ஹாஜீ **K. O.** முஹம்மது இப்ருஹீம் சாஹிப்,
31, ரம்பா ஸ்டிரீட்.

பினங்

ஜனப் **V. O.** ஹஸன் முஹம்மது அவர்கள்,
34, கிட்டாரோடு.

ரங்கூன்

ஜனப் **V. M.** அப்துற்றஹ்மான் அம்பலம் அவர்கள்,
85, மொகல் ஸ்டிரீட்.

Messrs. **A. P. N.** அப்துல் ஜப்பார் **&** பிரதர்ஸ்,
77, எடுவர்டு ஸ்டிரீட்.

கொழும்பு

ஜனப் **A. M. K.** ஆலிம் சாஹிப்,
220, **2nd** கராஸ் ஸ்டிரீட், பெட்டா.

மதராஸ

மெஸர்ஸ் **A. M. K** ஹாஜி முகம்மது ஷரீப்,
மரைக்காயர் **&** பிரதர்,
220, அங்கப்ப நாய்க்கன் தெரு.

மெஸர்ஸ் **M. A.** காதர் பாவா **&** பிரதர்ஸ்,
206, அங்கப்ப நாய்க்கன் தெரு.

Printed at the Kesari Printing Works, & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.